This book belongs
to
Balammammal.
124th St., Kalabusty.
House No. 16 & 17
Rangoon
Kandawgalay post.

உ

கடவுள் துணை

வித்வசிரோன்மணியாகிய

# புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

# புலந்திரன்களவுமாலை.

இஃது,

மைலம்,

**சுப்பிரமணியசுவாமிகளால்**

பார்வையிடப்பட்டு

சென்னை-இட்டா,

**பார்த்தசாரதிநாயுடு**

அவர்களால்

ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

சென்னை ஆச்சாரப்பன் தெரு, நெ-84.

உ

கடவுள் துணை.

# புலந்திரன் களவுமாலை.

## விநாயகர்-துதி.

அத்திமுகத்தோனே அரனார்திருமகனே
சத்திக்கணபதியே சங்கரனார்திருமகனே
பானைவயிற்றோனே பழமேந்துங்கையோனே
ஆனைமுகத்தோனே ஐங்கரனேமுன்னடவாய்
வேலவர்க்குமுன்பிறந்த வித்தைக்களஞ்சியமே
மூலமுதலே முன்னடக்கவேணுமையா.

## சரஸ்வதி-துதி.

நாவிற்சரஸ்வதியே நான்முகனார்தேவியரே
சதுர்முகனார்தேவியரே தாயேசரஸ்வதியே
வாக்குவரமருள்வாய் மறையவனார்தேவியரே
நாவுதவறாமல் நற்கருத்தைத்தாருமம்மா
இந்தக்கதைதனக்கு இனிகருத்தைத்தாருமம்மா
பூவிலமர்ந்தவொரு பொற்கொடியேநான்சரணம்
சரணமென்றடிபணிந்தேன் தற்காக்கவேணுமம்மா
தப்புகளுண்டாயின் தாயேயருள்புரிவாய்
குற்றமிருந்தாலும் கொண்டணைக்கவேண்டுமம்மா
புலந்திரனார்கதையுரைக்க புத்திவரமருள்வாய்

## பாண்டியன் பெருமை.

பட்டணமாம்பட்டணமாம் மதுராபுரிபட்டணமாம்
பட்டணத்தையாளுகிற பாண்டியர்ராசாக்கள்
மதுரைபதிதனிலே மன்னர்கள்ராசாக்கள்
நீதிமனுமுறைகள் நெறிதவறாபாண்டியர்கள்
ஆறிலொருகடமை அரசர்கள்வாங்குவது
சொக்கர்வலிமையுண்டு துரைராசபாண்டியற்கு
மீனாட்சிவலுமையினால் மேன்மையுடனாண்டிருந்தார்
சக்கரநெறிப்படியே தரணிதனையாண்டிருந்தார்

## அல்லியரசாணிஉற்பத்தி

இப்படியாகவே இருக்கின்றநாளையிலே
ஆறாயிரவர்களும் அணிதிரளாம்பாண்டியர்கள்
பிள்ளையைவேண்டியே பெருந்தவசுதானிருந்தார்
மைந்தனைவேண்டியே மகாதவசுதானிருந்தார்

சோலைமலருடைய சொக்கரைநோக்கியேதான்
கால்கள்நடுங்கத்தான் கடுந்தவசுதானிருந்தார்
சங்கரருமப்போது தயவாய்மனமிறங்கி
அங்கையர்க்கண்மீனாட்சி அருளுமிரங்கியேதான்
சந்திரர்கள்சூரியர்கள் சந்திபண்ணும்பொய்கையிலே
செவ்வலரிப்பூவிலே செல்வம்பிறந்ததுகாண்
அல்லிமலரிலே அவதரித்தாள்பெண்பெருமாள்
குழந்தையைப்பார்க்கவே கொற்றவர்கள்ராஜாக்கள்
கண்டுமனமகிழ்ந்தார் காவலர்கள்ராஜாக்கள்
பார்த்துமனமகிழ்ந்தார் பாண்டியராசாக்கள்
கண்டெடுத்துக்கொண்டுவந்தார் காவலர்கள்ராசாக்கள்
வைத்துவளர்த்தெடுத்து மரிவுள்ளபெண்கொடிக்கு
அல்லியரசாணியென்று அரசியற்குபெயருமிட்டு
நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய்
வைத்துவளர்த்தார்கள் வண்டார்கருங்குழலை

### அல்லியரசாணி பராக்கிரமம்

ஏழுவயதாச்சு இளங்கொடியாள்நாயகிக்கு
பாதியரசு பகுந்தாண்டநீண்முகனை
முடிக்கவந்தநீண்முகனை முந்திமயிர்பிடித்து
குடலைபிடிங்கியேதன் கொம்பனையுமாலையிட்டு
பெண்ணரசுபட்டங்கட்டி பெருக்கமுடன்வாழ்ந்திருந்தாள்
ஆண்காற்றடித்தாலே அதம்பண்ணிபோட்டிடுவாள்
கண்டவரைகுத்தியே கழுவிலேயேற்றிடுவாள்
எண்ணவொண்ணாச்சேனையுடன் எடுத்தாளேமந்திரவாள்
மந்திரவாளெடுத்து மதயானைபோலெழுந்து
எதிர்க்கத்தான்கண்டவரை யெண்ணியேபாராமல்
கண்டமுனிராட்சதரைக் கண்டதுண்டமாக்கிடுவாள்
வடமதுரைக்கன்னடு வடதேசபட்டணமும
ஈழகலிங்கதேசம் இனமுள்ளபட்டணமும்
முத்துகப்பலாயிரமும் முளகுகப்பலாயிரமும்
பாக்குபடுந்துறையும் பாண்டிவளநாடும்
இத்தனைநாடுகளும் இடமுள்ளராச்சியமும்
பட்டணமுங்கட்டியிவள் பாருலகையாண்டிருந்தாள்
பத்துவயதாச்சு பைங்கொடியல்லியற்கு
வளர்ந்துசமைந்தாள்காண் மாதுருதுவானாள்

### ஸ்ரீகிருஷ்ணர் அல்லியை அர்ச்சுனற்கு பாரியாளாகநினைத்தது.

ஏழுலகையாண்டதொரு எம்பெருமாள்தான்பார்த்து
அல்லிமலரி லவதரித்தபெண்பெருமாள்
அழகில்மிகுந்ததொரு அல்லியரசாணியரை
தக்கப்புகழுடைய தருமராதுதம்பியரை
காண்டாவனமெரித்த காளையந்தஅர்ச்சுனற்கு

ஆணலழகருக்கும் அல்லியரசாணியற்கும்
இருவரழகுக்கும் ஏற்குங்காண்வையகத்தில்
என்றுசொல்லிமாயவனார் இயலாகத்தானினைத்து
சோலமலருடைய சொக்கருமாயவரும்
அருளால்மிகுந்ததொரு அங்கையற்கண்ணாகியும்
தேவாதிதேவருடன் தென்மதுரைவந்துநின்று
அடங்கலுந்தானழைத்து ஆறுயிரவருமாய்
பெண்கேட்கவந்தோங்காண் பேருலகில்ராஜாவே
பெண்ணாய்ப்பிறந்தாலும் பிழையில்லாப்பெண்பெருமாள்
நீன்முகனைக்கொன்று நீலியிட்டபெண்பெருமாள்
கூடியவர்தானினைத்து கொம்பனையைக்கொள்ளுதற்கு
மதுரைப்பதியாளும் மன்னவர்கள்பாண்டியரே
மணக்கோலம்வந்தோங்காண் மன்னவரேயிப்பொழுது
என்றுயிவருரைக்க இராஜமன்னரப்பொழுது
ஆறுயிரவர்களும் ஐயன்மாரேதுசொல்வார்
மந்திரவாளோடே மயிலனையாள்தான்பிறந்தாள்
கண்டவரைக்கொண்டு கழுவிலேயேற்றிவைப்பாள்
அண்டாப்பெருநீலி ஆர்சொல்லுங்கேளாளே
அப்படிக்கொத்தவளை அண்டப்பயப்படுவோம்
அவளுக்குஏற்றவர்தான் அர்ச்சுனரேயாகுமென்றார்
ஆண்காற்றடித்தால் அதம்பண்ணிப்போட்டிடுவாள்
உங்களாலானபடி உத்தமரேபாருமென்றான்

அர்ச்னனபாம்பாகவும் பெருமாள்பிடாரனாகவருதல்.

ஏழுலகையாண்ட எம்பெருமாள்தான்கேட்டு
என்னாலேயாகுமென்று எழுந்திருந்தாரெம்பெருமாள்
காண்டாவனமெரித்த காளையென்னுமர்ச்சுனரை
ஐந்துதலைநாகம்போல் அடைவாய்வடிவாக
மண்ணுளிப்பாம்பு வகையானசர்ப்பமுடன்
புண்ணியமூர்த்தி பிடாரனைப்போல்வேஷங்கொண்டு
வேஷம்உருவெடுத்து வேரேயுருமாறி
அரசாளும்நாயகியாள் அல்லியிடபட்டணத்தில்
தண்ணீர்குளத்தருகே தார்வேந்தர்வந்துநின்று
பொற்பாம்புதன்னைவிட்டுப் பெறுமாளுமாட்டிவைத்தார்
ஆயக்குழலூதி ஆயனுமாட்டிவைத்தார்
பாடாதசிந்துகவி பாடினார்மாயவரும்
அரசாளும்நாயகியாள் அல்லியிடந்தாதியர்கள்
பூங்காவனத்திலே பொய்கையருகாக
மாயன்பெருமாளும் மகாமயக்கந்தான்செய்து
மகுடிக்குழலூதி மன்னவருமாட்டிவைத்தார்
ஆட்டினார்நாகமும் ஆடுதுகாணந்நேரம்
பாட்டுக்கிசைவாகப் பாம்புகளாடுதுகாண்

தண்ணீர்குடமெடுத்துத் தண்ணீர்க்குவந்தவர்கள்
பாம்பாடும்பாவனையை பைங்கிளிமார்தான்பார்த்து
அரசாளும்நாயகியாள் அல்லியரைதெண்டனிட்டு
நமதுமதுரைவள நாட்டிலவந்ததோர்பாம்பு
தண்ணீர்குளத்திலே தூர்குழலேயாடுதென்றார்
பாம்பாடும்பாவனையை பட்டணத்தில்கண்டதில்லை
அந்தயழகும் அதிசயமுங்கண்டறியோம்
என்றுமவளுரைக்க யேந்திழையுந்தான்கேட்டு
அப்படிப்பட்டதொரு அழகுள்ளநற்பாம்பை
இங்கேயழையுமென்றாள் ஏந்திழையாளல்லியரும்
அப்படியேபோக அழைத்துவந்துவிட்டார்கள்
பாம்பைத்திறந்துவிட்டார் பார்வேந்தர்மாயவரும்
மகுடிக்குழலூதி மாயவனுராடிநின்றார்
பாம்பாடும்பாவனையைப் பைங்கிளியுந்தான்பார்த்து
மன்னன்மேல்சிந்தையுமாய் மயங்கினாள்மங்கையரும்
மாயவனைத்தான்பார்த்து மயிலனையாளல்லியம்மாள்
பாம்பையனுப்புமென்றாள் பைங்கொடியுந்தன்னருகே
அப்படியேநற்பாம்பு அவளருகேவந்ததுகாண்
பாம்புமடியேறப் பைங்கிளியும்பார்த்திருந்தாள்
முன்னழகும்பின்னழகும் முதுகில்மட்சரேகைகளும்
அரசாளும்நாயகியாள் அல்லியரும்பார்த்தாள்
காண்டாவனமெரித்த காளையருச்சுனரும்
சொக்குப்பொடிபோட்டார் தேன்மொழியாளல்லியற்கு
மாதுசவுரியம்போய் மயங்கினாளர்ச்சுனன்மேல்
மயங்கியெழுந்திருந்து மாயவரைத்தான்பார்த்து
பாம்பையடையுமென்றாள் பைங்கொடியாளல்லியரும்
அந்தப்பிடாரன் அடைவாகப்போனபின்பு
அரசாளும்நாயகியாள் அல்லியருந்தான்பார்த்து
ஆறுயிரவரொன்னும் அணிதிரளாம்பாண்டியர்கள்
தந்தையார்சீர்பாதந் தையலடிபணிந்து
தக்கப்புகழுடைய தருமரிடதம்பியரை
காண்டாவனமெரித்த காளையெனுமர்ச்சுனரே
இந்தட்சணமே இயலாகவரவழையுங்கள்
கலியாணங்கூட்டுமென்றாள் காரிழையல்லியரும்
ஆறுயிரவர் அணிதிரளாம்பாண்டியர்கள்
வற்றிக்கிடந்த வருள்பெரியகாவேரி
முட்டப்பெருகியே கரைபுரண்டுவந்தாற்போல்
திரேகங்குளிர்ந்தாரே இருதோளும்பூரித்து
தககப்புகழுடைய தருமர்தனஞ்சயர்க்கு
எழுதினார்பாண்டியர்கள் இன்பமாயோலைதன்னை
காண்டாவனமெரித்த காளையந்தவர்ச்சுனற்கும்

அரசாளும்நாயகியாள் அல்லிமலர்நாயகிக்கும்
சித்திரைமாதத்திலே சீர்பத்தாந்தேதியிலே
சுக்கிரவாரமது தசமிபுனர்பூசம்
அன்றையவேளையிலே அர்ச்சுனற்குமல்லியற்கும்
கலியாணங்கலியாணம் காரிழைக்குங்கலியாணம்
கலியாணமென்றுசொல்லி கனமானவோலையப்போ
இட்டோமுகூர்த்தமென்று எழுதினாரோலையிலே
ஓலைகண்டநாழிகைக்கு உத்தமரேவாருமென்றார்
கலியாணம்
என்றிருக்குமோலைதன்னை இராஜாக்கள் தான்பார்த்து
ஐவர்பஞ்சபாண்டவர் அனைவோருந்தான்பார்த்து
தக்கப்புகழுடைய தருமரவரேதுசொல்வார்
இதுநல்லகாரியங்கள் என்றுமனதிலெண்ணி
சரியொத்தசம்பந்தம் ஆரென்றுதார்வேந்தர்
மதுராபுரிதனக்கு மன்னவர்கள்பயணமானார்
துரௌபதைநாககன்னி சுபத்திரையும்பயணமானார்
மந்தாரக்குந்தியம்மாள் மாதாவும்பயணமானார்
வந்துஇறங்கினார் மதுரைபதிதனிலே
அரனார்திருவுளத்தால் அர்ச்சுனற்குமல்லியற்கும்
செய்யுஞ்சடங்குவகை செய்தார்கள்வேதியர்கள்
மங்கிலியந்தானெடுத்து வாள்விசையன் தான்றரித்தான்
மாதுகழுத்திலே மங்கிலியஞ்சாற்றினபின்
கூடியிருந்தார்கள் குங்குமகட்டிலின்மேல்
அர்ச்சுனருமல்லியரும் அமர்ந்திருந்தாரந்நேரம்

### புலந்திரனுற்பத்தி.

அப்படியாகவேதான் அநேகநாட்சென்றபின்பு
பாலகனுண்டானான் பைங்கிளியாளல்லியற்கு
பத்துமாதமுஞ்சென்று பைங்கொடியாளல்லியரும்
பெற்றாள்புலந்திரனை பேறுமிட்டாளல்லியரும்
வளர்த்தாள்புலந்திரனை வைத்திருந்தாளல்லியரும்

### புலந்திரனுக்குக்கலியாணம்.

ஐந்துபிராயமது அடைவாய்வளர்ந்தபின்பு
தேசத்தழகுமன்னன் திரியோதிரள்தங்கை
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாள்தன்மகளை
அந்தகாரிழையாள்மாது கலந்தாரிநாயகத்தை
போரஞ்சாமன்னர் புலந்திரவீரியற்கு
கலியாணம்பண்ணவே காரிழையாளல்லியரும்
சரியொத்தசம்பந்தம் தார்குழலாள்வேண்டுமென்று
வேண்டுமென்றுசொல்லி விரும்பியேமங்கையரும்
ஐவரும்நூற்றுவரும் அப்பாலேகூடியொன்றாய்
கூடிமணஞ்செய்தார்கள் குமாரன்புலந்திரற்கு

தர்பாரணுஞ்செய்துமே கடிகைமுடிந்தபின்பு
அப்படியாகவே அனேகநாள்சென்றபின்பு
தேசத்தழுகுமன்னன் திரியோதிரப்பெருமான்
பருவமதயானை பஞ்சவர்களைவரையும்
உருவமதயானை உத்தமர்களைவரையும்
வலியவேதானழைத்து மாயத்தால்சூதாடி
பாரவனவாசம் பஞ்சவர்கள்போயிருக்க
அன்றுமுதலாக அர்ச்சுனனார்புத்திரனும்
காரிழையாள்மாது அலந்தாரிநாயகியும்
அவரவர்கள்தாய்வீட்டில் அருமையாய்தானிருந்தார்
நாங்கள்தங்கள்தாய்மனையில் சகிருடனேவளருகிறார்

அல்லிகொலுச்சபை.

அப்போதுயல்லியவள் அரசாளும்நாயகியாள்
அஞ்சாப்பெரும்புலியா யரிவையிளமங்கையரும்
ஆசாரமண்டபத்தில் அருங்கிளியும்வீற்றிருந்தாள்
மண்டிகையுஞ்செங்கோல் எதிரொருவரில்லாமல்
தப்பாதரசாண்டாள் தாமரைசூழ்நாயகியாள்
முத்துவளநாடும் முடிகவியும்பெண்பெருமாள்
பட்டணமுஞ்செங்கோலும் பாராளும்பெண்பெருமாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்
கொம்பேரிடையாள் கொலுகலைந்தபிற்பாடு
வண்டார்குழலாளும் மாளிகையிற்போய்புகுந்து
சிங்காதனத்திலே தேன்மொழியும்வீற்றிருந்தார்
தனக்குக்கவரியிடும் தாதிமுகம்நோக்கி
வயிரக்கவரியிடும் மங்கையரைத்தானழைத்து
முத்தின்கவரியிடும் ஊப்பிமுகம்நோக்கி
செம்பொன்கவரியிடும் தேன்மொழியேகேளாய்

அல்லி சொற்பனங் கண்டது,

நேற்றையராத்திரியில் நித்திரைபோம்போது
சொற்பனங்கண்டேனென் றன்னங்கருங்குழலே
தாமக்கருங்குழலாள் தாதியருங்கூறலுற்றாள்
ஏதேதுசொற்பனங்கள் எனக்குரியக்கூறுமென்றாள்
பிறவாமுடித்த பெண்பெருமாள் கூறுகிறாள்
சோலைமலநுடைய சொக்கநாதர்கோவிலுக்கு
சேவிக்கப்போனதாய் தேன்மொழியேநான்கண்டேன்
சோலைமலநுடைய சொக்கரவர்தான்பார்த்து
சிவனுருமப்பொழுது செங்கழுநீர்பூவெடுத்து
அங்கையர்க்கண்ணம்மை அகிலாண்டநாயகியும்
கொண்டுவந்துயென்கையில் கொம்பனையுந்தான்கொடுத்தாள்
மைந்தர்புலந்திரற்கு வாங்கினேனேற்குமென்று
ஏற்குமென்றுவாங்கி இந்திரர்கைகொடுத்தேன்

அதனையவர்வாங்கி அவள்தேவிகைகொடுத்தான்
மங்கையரும்செல்வம்பெற்று வளர்ந்திருக்கக்கண்டேன்
நன்மையோதுன்மையோ நாயகமேகூறுமென்றாள்
தாமக்கருங்குழலாள் தாதியருங்கூறலுற்றாள்
ஆச்சிநீகண்டகனா அறியவேசொல்லுகிறேன்
உன்மைந்தனுக்குமைந்தன் வாய்க்குங்காண்தப்பாது
புத்திரர்க்குபுத்திரர் வாய்க்குங்காண்தப்பாது
பிரவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுவாள்
ஆரடிதாதியரே அன்னபசுங்கிளியே
பஞ்சவர்கள்நாடுவிட்டு பாரவனம்போயிருக்க
ஐவருங்காட்டகத்தே அனல்பிறந்தாள்காட்டகத்தே
மாலைமுடியார்கள் வனவாசம்போயிருக்க
வண்டார்குழலாளும் மயிர்விரித்துப்போயிருக்க
எந்தவனத்திலே யிருக்கிறாரென்றறியேன்
பஞ்சவரும்நாடுபெற்று நாமும்பயந்தெளிந்து
கொற்றவர்கள்நாடுபெற்று வருங்காலமெக்காலம்
வண்டார்குழலாளும் வாழ்பெருவதெக்காலம்
என்மைந்தருக்குமைந்தருமாய் வாய்ப்பதுமெக்காலம்
எண்ணாதுமெண்ணியே ஏங்கிமுகம்வாடினாள்
தாமக்கருங்குழலாள் தாதியருங்கூறுகிறாள்
நீர்கண்டகனவுநன்மை கன்னியரேநீர்கேளீர்
மைந்தருக்குமைந்தராய் வாய்க்கும்புனக்கிளியே

புலந்திரன் பள்ளியரைக்கு அல்லிவந்து காண்கிறது.

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுகிறாள்
போரஞ்சாமன்னன் புலந்திரவீரியனார்
என்பாண்டிப்பெருமாளின் பள்ளியரையெங்கேயென்றாள்
மண்டபத்துக்குள்ளாக மன்னவனார்பள்ளியென்றார்
எங்கேயென்றுசொல்லி எழுந்திருந்தாளல்லியம்மாள்
சிங்காதனத்தைத் திகழக்குதித்திறங்கி
தாமக்கருங்குழலாள் தாதியருமப்போது
கட்டழகிப்பெண்ணே கன்னியரேவாருமென்று
மெத்தனவேதானடந்து வேல்பொருதுங்கண்ணாளும்
சித்திரஞ்சேர்மண்டபத்தே சென்றாள்திருவணையும்
தாள்பூட்டிக்கொண்டு தனஞ்செயனும்பள்ளிகொண்டான்
தாமக்கருங்குழலாள் தாதியருமப்போது
பேர்சொல்லித்தானழைத்தாள் பெருமாள்புலந்திரனை
அஞ்சவாய்மாதே ஆரங்கேபோவென்று
வாளாலேயேந்தி வளகாடிதான்திறந்தாள்
எங்கித்திறந்தாளோ இந்திரனற்பொற்கதவை
தருமமுடியானுந் தனித்துபடுத்திருந்தான்

தேவியுடனேயிவர் திருத்தமுடன்கூடாமல்
தனியாகப்படுத்திருக்கச் சங்கானார்கட்டளையோ
பணையான் தலைக்கடையில் பக்தனவாசலிலே
மாதைதுயிலுரிந்த மாபாவிவாசலிலே
கோதைதுயிலுரிந்த கொடும்பாவிவாசலிலே
சகுனிதலைக்கடையில் சண்டாளன்வாசலிலே
மாற்றான்றன்வாசலிலே மாலையிடப்பெற்றேனே
மற்றொருவர்வாசலிலே மாலையிட்டேனுமாகில்
பொற்கைவளைநாடியரைப் போகவரப்பாரேனோ
வண்டார்குழலாளை வரப்போகப்பாரேனோ
கொம்பனையாள்செய்தவொரு குடிவாழ்க்கைப்பாரேனோ
இந்திரனார்தேவிசெய்யும் இயல்வாழ்க்கைப்பாரேனோ
காணாதிருந்ததனை கண்ணற்றாளானேனே
பாராதிருந்தேனே பாவிநானுமேனனே
மைந்தர்புலந்திரனைப் பார்த்தாள்பலகாலும்
கால்கள்தொடங்கியே கரியகுழல்வரையும்
பார்த்தாள்பலகாலும் பார்த்தன்திருமகனை
தாமக்குழலாளும் தாதிமுகம்நோக்கி
இவர்-பொய்யாமொழியும் பொருமைதலையழகும்
இவர்கள்தன்னழகும் ஆசாரப்பேரழகும்
தக்கநெறியுந் தவத்திற்பெருமைகளும்
தக்கப்புகழுடைய தருமரைப்போலிருக்கும்
இந்திரனார்மார்பும் இடம்பெரியதிண்டோளும்
வெற்றிமதயானை வீமரைப்போலிருக்கும்
அழகும்இளமையும் அர்ச்சுனரைப்போலிருக்கும்
தலையும்தலைக்கட்டும் சகாதேவன்போலிருக்கும்
நடையும்உடையழகும் நகுலரைப்போலிருக்கும்
விரலும்விரற்கொடியும் வேந்தரைப்போலிருக்கும்
காசிவளநாடாளும் கர்ணனைப்போலிருக்கும்
ஐவர்திருவழகும் அருமைகள்தானுமுண்டு
வேறெவருக்குமோ வெல்பொருதுங்கண்ணேனோ
மைந்தர்புலந்திரனை வாளாலேதட்டிவிட்டாள்

புலந்திரன் தாயாரைக்காண்கிறது.

சற்றேதான்தட்டினமே தருமர்திருமகனும்
பொட்டெனவேகண்விழித்து புலந்திரனார்தான்பார்த்து
அவர்-அஞ்சிப்பயந்து அட்சணமெழுந்திருந்து
உத்தமனார்வேந்தன் உருமாலைதான்கழல
இட்டெனவேதான்குதித்தான் செம்பொன்னின்மெத்தைவிட்டு
பூங்காவில்போகவென்றால் பொற்கொடியுங்கிட்டிவந்தாள்
மலர்க்காவில்போகவென்றால் மாதாவுங்கிட்டிவந்தாள்

மாலைமுடியானும் மலரணையிற்பூவெடுத்து
மாதாவின்பாதமது மலர்தூவித்தெண்டனிட்டான்
வந்துபணிந்தவனை வாளாலேதானெடுத்து
மாணிக்கமெத்தைதன்னை வாளாலேதான்விலக்கி
ஏறியிருந்தானே ஏகாந்தகட்டிலின்மேல்
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
இந்நேரம்ஆச்சிநீ ரிங்குவந்தகாரியமேன்
நான்செய்துவந்தகாரியத்திற் செய்தபிழையுமுண்டோ
ஊரிற்புதுமையுண்டோ உள்ளூரிற்குற்றமுண்டோ
நாட்டிற்புதுமையுண்டோ நம்மூரிற்குற்றமுண்டோ
யானைபடுகுழியும் ஆச்சிமிகராச்சியத்தில்
மெத்தகளவுகள் மெல்லியரேவந்ததுண்டோ
கப்பலுஞ்சோங்குங் களவுகள்மெத்தவுண்டோ
இந்நேரம்ஆச்சிநீ ரிங்குவந்தகாரியமேன்
சொல்லியேதான்தொழுதான் சுந்தரப்பூமுடியான்
வேறொன்றுமில்லையையா வேந்தர்பெருமானே
அஞ்சாதேயென்றுசொல்லி அணைத்தெடுத்துதாதியர்கள்
ஆடையொதுக்கியே ஆபரணம்ஒப்பமிட்டு
உத்தமனார்வேந்தருக்கு உருமாலைதானுங்கட்டி
காவலனார்வீரியனுங் கைகட்டிநின்றானே
அஞ்சியேநின்றானே ஐயன்பெருமானும்

புலந்திரனுக்குத் தாய்சொல்லுகிறது.

மைந்தன்புலந்திரனை வளநாடி தான்பார்த்து
தருமமுடியானை தனியாகப்பள்ளிகொண்டாய்
உன்-மச்சினியாள்தானொழிய அசல்நாட்டாளாகாதோ
அத்தைமகளொழிய அசல்நாட்டாளாகாதோ
ஐயனார்கோவிலிலே ஆடும்ரம்பையாகாதோ
நாடகசாலையிலும் நாயகிமார்தங்களிலும்
வேறொருத்தியாகாதோ விஜயன்மகனாரே
கொம்பேரிடையாளோ கோவிலிலேதேவடிமார்
எண்பத்தெண்ணாயிரம்பே ரிளங்கொடிமார்தானுமுண்டு
அன்னநடைமாதர்களும் ஆகாதோமன்னவனே
தருமமுடியானே சலிப்புவந்தகாரணமேன்
மதுரையம்பத்தாறுகாதம் ஆளஅரசிருக்க
ஆறாயிரவரென்னும் அளிதிரளாம்பாண்டியர்கள்
பொன்னின்மலைநாடாளும் போரெழுதி அம்மானும்
மாலைமுடியானும் மாமன்மார்தானிருக்க
நானுமிருக்கையிலே நாயகமேயுந்தனுக்கு
தருமமுடியானே சலிப்புவந்தகாரியமேன்
நன்றாகமைந்தனை நான்பெற்றேனென்றிருந்தேன்

## புலந்திரன்சொல்லல்.

போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
வாய்புதைத்துக்கைகட்டி மன்னனெடுத்துரைப்பான்
ஆச்சிநீர்கேளீரடியேன்வாய்விண்ணப்பம்
தேசத்தழகுமன்னன் திரியோதிரன்பாவி
பருவமதயானை பஞ்சவர்களைவரையும்
உருவமதயானை உத்தமர்களைவரையும்
விருந்தமிர்தமென்றுசொல்லி வேந்தரைத்தானழைத்து
வலுவிலேதானழைத்து மாயத்தால்சூதாடி
மாயத்தால்சூதாடி மண்ணிழக்கமண்பறித்து
உபாயத்தால்சூதாடி தருமாபுரந்தோற்று
எத்தேசமுந்தோற்று யிருப்பிடமுந்தான்தோற்று
வில்தோற்றுவாள்தோற்று வீமாபுரந்தோற்று
தக்கப்புகழுடைய தர்மரவர்நால்வரையும்
வீமனருச்சுனனை வேந்தரவர்தோற்று
நகுலசகாதேவ ராசர்களைத்தோற்று
தம்மையுந்தோற்று தம்பிமாரையுந்தோற்று
ஆடைக்கொடிதோற்று ஆபரணந்தான்தோற்று
சேலைப்பணிகளுடன் சேரஅவர்தோற்று
ஆயிரங்கோடி வெள்ளை யானைகளைத்தோற்று
ஐந்நூறுகோடி அசுவங்களைத்தோற்று
ஆயிரங்கோடி ரமணையரைத்தோற்று
நாடகசாலைப்பெண்கள் நாயகியைத்தோற்று
யானைகுதிரைகளை அரசரவர்தோற்று
சேரஅவர்தோற்று செம்பொன்மணிமுடியார்
சித்திலங்குமுடியார் நீராழிமண்டபமும்
பாவையுருவதுபோல் பளிங்குமாமண்டபமும்
பேடைமலர்க்கண்ணாள் பேரரசிமண்டபமும்
காவலர்கள்தேவி கதைகேட்குமண்டபமும்
தருமமுடிபஞ்சவர் சனிபெண்ணெய்மண்டபமும்
பேர்பெரியபஞ்சவர்கள் புதனெண்ணெய்மண்டபமும்
செப்புமழகுடைய சிவன்பூசைமண்டபமும்
ஐவர்கள்பூசைசெய்யும் அரனார்திருமேடை
இத்தனையுந்தோற்று யிவ்வளவுமல்லாமல்
வித்தகனார்பஞ்சவர்கள் பெற்றவிளக்கொளியை
கொற்றவர்கள்பஞ்சவர்கள் கொண்டகுடிவிளக்கை
தாமக்குழலாளை, தருமரிடதேவியரை
என்மாதாவையும்வைத்து மன்னவர்கள்தோற்றார்கள்
இத்தனையுந்தோற்று யிருந்தவொருமன்னவரை
தேசத்தழகனவன் திரியோதிரன்பாவி
மரவுரியைத்தான்கொடுத்து மன்னவர்களைவரும்

வெய்யலிலேதானிருத்தி வேர்த்தானைவைத்தானே
தோளுவடிவழகி துரௌபதையாள்காயகத்தை
தாமக்குழலாளைத் தன்னிடக்கவைத்தான்
வேல்பொருதுங்கன்றனை வீதிகடக்கவைத்தான்
அன்னநடையாளை அங்காடிமாட்டிவைத்தான்
பாவையழகியனை பருந்தாட்டமாட்டிவைத்தான்
சொல்லாததுஞ்சொல்லியே துகிலுமரியவைத்தான்
பஞ்சவர்கள்புண்ணியத்தால் பாஞ்சாலிபுண்ணியத்தால்
தக்கப்புகழுடைய தர்மரிடபுண்ணியத்தால்
மாளாதிருந்தது மாதுதுகிலாடை
உரியாதிருந்தது வுத்தமியாள்பூவாடை
அழியாதிருந்தது அணழகிபூவாடை
உருவிகழுவியதுயில் வுடைதுலைந்தாளாமாகில்
வெற்றிமதயானை வீமாதுதெண்டாலே
வீமாதுதெண்டாலே வேகதர்படைகளெல்லாம்
மாளுவது அன்றல்லோ மன்னன்பெரும்படைகள்
சாகிறது அன்றல்லோ தனஞ்சயன்கையம்பாலே
பஞ்சவருந்துரௌபதையும் பாரவனம்போயிருக்க
எந்தவனத்திலே யிருக்கிறாரென்றறியேன்
எக்காட்டுக்குள்ளே யிருக்கிறாரென்றறியேன்
புன்னையுடன் தும்பை விருப்பமுடன் காய்கிழங்கு
பண்ணையுடன் தும்பை பறப்பையுடன் காய்கிழங்கு
தின்றுமவர்திரிய தேசாந்திரிபோலே
காடுசெடிதோறும் கடுகிஅவர்திரிய
எனக்குசுகமேது பென்தாயேசொல்லுமென்றான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் கூறுகிறாள்
அத்தனைக்கும்நீர்சலித்தீ ரானந்தவாழ்மார்பா
என்செய்வேன்மகனே வெழுத்துவசந்தப்பாது
தலையின்விதிப்படி தப்பாதொருக்காலும்
பாஞ்சாலிபட்டுரிய பஞ்சவர்கள்காடுறைய
உன்வலதும்என்வலதும உத்தமனேயல்லவிது
தெய்வவலதுகண்டீர் செம்பொன்முடியாரே

புலந்திரனை கலந்தாரியிடஞ் சேர்ந்துவாவென்று சொல்லுவது.

உன்மச்சினியாள்மீறி வளர்ந்துசமைந்தாளாம்
அத்தைமகள்மீறி அவள்வாக்கண்டேனுன்
கண்டேன்கனவிலே கட்டழகியவடிவை
மச்சினியாள்கோவிலுக்கு மன்னாசெல்லுமென்றாள்
பொற்கொடியாள்கோவிலுக்கு போய்வருவாய்புலந்திரனே

புலந்திரன்மறுத்துச்சொல்வது.

போராஞ்சாமன்னன் புலந்திரன்கூறலுற்றான்

பசுவைவனாந்தரனைக்குப் பாவியிடவாசலிலே
சகுனிபடுபாவி சத்துருவின்வாசலிலே
காந்தாரையைத்தூக்கிலுரிந்த சண்டாளன்வாசலிலே
கோதைதனைத்தூக்கிலுரிந்த கொடும்பாவிவாசலுக்கு
மாதுபொருட்டால் வீதிவிலும்போவேனோ
பஞ்சவரும்நாடுபெற்று நாமும்பயந்தெளிந்து
கொற்றவரும்நாடுபெற்று நாமுங்குறைநீங்கி
மன்னர்கள்நாடு பெற்றுவந்தபிறகாக
வண்டார் குழலுடையாள் வந்தபின்பிற்பாடு
அன்னநடைபெண்ணுடைய தாய்வந்தபிற்பாடு
பொற்கொடியாள்வாசலுக்குப் போரேன்காணாச்சியரே
இப்போதுபோவதில்லை பெண்தாயேயென்றுரைத்தார்
அவ்வார்த்தைதனைக்கேட்டு அல்லியவளேதுரைப்பாள்
தோளுக்குத்தோளே துணைவேணுந்தம்பியரே
காலத்திற்பெற்றபிள்ளை கைக்குதவிகண்டீரோ
போனீரேயாமாகில் புத்திரரைப்பெற்றிடுவீர்
பெற்றீரேயாமாகில் பேருண்டாய்வாழ்ந்திடுவீர்
பொற்கொடியாளரண்மனைக்குப் போவீர்புலந்திரரே
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
எனக்குமோராறாண்டு ஏந்திழையாள்மூவாண்டு
மாலையிட்டபிற்பாடு மாதுஅறியாமே
தையலர்க்குமங்கிலியந் தரித்தவகையானறியேன்
என்னையவளும் ஏந்திழையாள்தானறியாள்
நானும்வளர்ந்தது ஊரயலுந்தானறியாள்
என்மாமியார்வீட்டை மறுபடியும்போனதில்லை
மாமியார்வீட்டிலே மருவுண்டுவந்ததில்லை
பொற்கொடியாள்வாசலுக்குப் போகும்வகைசொல்லுமென்றார்

பிள்ளையீதில்கோபித்து விலங்குபோடச்சொல்லுவது.

அரசாளும்நாயகியாள் அல்லியருந்தான்கேட்டு
சீறியெறிபறந்து செவ்வாய்கருகவிட்டு
எதிர்த்தெதிர்த்துப்பேசுவதும் என்னுடன்சொல்லுவதும்
மறுத்துத்தடுக்கிறாய் மன்னாகருவமென்ன
இந்தகருவத்தை யிப்போதடக்குவேன்பார்
கட்டழகுதாதியரே கருமானையழையுமென்றாள்
விஜயனார்தன்மகனை விலங்கிலேபோடுமென்றாள்
கால்விலங்குகைவிலங்கு கழுட்டவொண்ணாப்பெருவிலங்கு
மார்விலங்குதோள்விலங்கு மன்னனுக்குப்போடுமென்றாள்

புலந்திரன்சொல்வது.

போறஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
என்னைவிலங்குபோட யென்செய்தேனென்தாயே
போகாதஅரண்மனைக்கு பொற்கொடியேபோவேனோ

மங்கையர்கள்கோவிலுக்கு வழுவிலும்போனேனோ
குடிமக்கள்வாசலிலே கூசாமல்போனேனோ
உப்பரிகையேறிநான் உயரக்குதித்தேனோ
கப்பல்கள்சோங்குகள் களவுகள்செய்தேனோ
என்னகொடுமைசெய்தேன் என்னைவிலங்கிட்டே
அரசாளும்நாயகியாள் அல்லியருங்கூறுகிறாள்
ஆரடாதம்பியரே அல்லவென்றார்போகாது
அத்தனையுமல்லாமல் அரசேநீர்கேட்டருள்வீர்
மச்சினியாள்மீறி வளர்ந்துசமைந்திருக்க
மாதுசிறையிருக்க மன்னவனேயாகாது
குடியாள்சிறையிருக்க கொற்றவனேயாகாது
நாடுவாராதுமன்னா நகருநகரும்சேராது
ஊரும்வாராதுகண்டீர் உத்தமனேயுந்தனக்கு
மச்சினியாள்கோவிலுக்கு மகனேநீசெல்லுமென்றாள்
போரஞ்சாமன்னன் புலந்திரனும்கூறலுற்றான்
உன்-ஆக்கினைக்குத்தான்பயந்து ஆச்சியரேபோனாலும்
அவள்கற்கோட்டைமுத்திரையுங் கர்ணனிடகாவல்களும்
சுத்திமதிலெழுப்பி சூரியனைக்காணாமல்
பக்கமதிலெழுப்பி பகவானைக்காணாமல்
வாசலுக்குஆயிரம்பேர் வாள்வீரர்காவலுக்குள்
உருவினஆயுதங்கள் உரையிலேபோடாமல்
விழித்தகண்சிமிட்டாமல் மெல்லியிடமிருப்பார்
காசிவளநாடாளுங் கர்ணனதிகாரன்
தாமக்குழலாளின் தலைவாசல்காப்பானும்
அத்தனையுந்தான்கடந்து ஆச்சியரேபோனாலும்
ஆயிரந்தாதி அவளருகேஇருப்பாராம்
அம்மானையாடி ஆடுங்கழலாடி
விளையாடிவீற்றிருப்பார் மெல்லியராயிரம்பேர்
பொற்கொடியாளரண்மனைக்குப் போகும்வகைசெப்புமென்றார்
அரசாளும்நாயகியாள் அல்லியருமேதுசொல்வாள்
ஆருமறியாதே அம்மானைக்காணாதே
அருகிருக்குந்தோழியர் யாருமறியாமல்
மாதினிடவாசலிலே மன்னவரேநீர்போவீர்
மேகப்புரவியிது வேந்தனேநான்தருவேன்
என்னாணைமன்னாநீ இனியொன்றுஞ்சொல்லாதே
மன்னாநீபேசாதே மன்னர்பெருமாளே
தருமர்திருவாணை தம்பிமார்தன்னாணை
காடுரைந்தபஞ்சவர்கள் கட்டழகிதன்னாணை
பின்னையெங்குஞ்செல்லாதே பெருமாள்புலந்திரனே
மச்சினியாள்கோவிலுக்கு மன்னாநீசெல்லுமென்றாள்
போரஞ்சாமன்னன் புலந்திரனுமேதுசொல்வான்

அவர்-எந்தவனத்திலே இருக்கிறாரென்றறியேன்
அதுவுமொருகாரியமாய் இவ்வானைவந்ததென்ன
மாளவென்றால்மாளுகிறேன் மாதாவே இப்போது
ஆணைவிடுந்தாயேயென்று அடிவணங்கித்தெண்டனிட்டான்
வந்துபணிந்தவனை வாளாமேலேதானெடுத்து
ஆணழகர்பஞ்சவர்கள் ஐயரிட்டாணைவிட்டேன்
காடுரைந்தபாஞ்சாலி கட்டழகி ஆணைவிட்டேன்
தருமரிட்ட ஆணைவிட்டேன் தம்பிமார் ஆணைவிட்டேன்
மாதருடன்கூடி மருவிவருமளவும்
என் ஆணைமட்டும் இருக்கட்டும் இந்திரனே
என்றுமனதுரைக்க பின்பவுடன்தான்கேட்டு
மாதாவின்பாதமலர் தூவித்தெண்டனிட்டு
கொம்பனைக்குத்தெண்டனிட்டு கூறுவானிந்திரனும்
உம்மாணைகொண்டேநான் ஊர்வழிபோவேனோ
தாயாணைகொண்டேநான் தனிவழிபோவேனோ
போனாலும்பேர்க்குமோ பொற்கொடியேயெந்தனுக்கு
ஆணைவிடுமென்று அடிவணங்கித்தெண்டனிட்டான்
அரசாளுநாயகியாள் அல்லியருந்தான்கேட்டு
விட்டேனையாணையெல்லாம் வேந்தர்பெருமானே

அல்லி இந்திரனைக்குறித்துப்புரவிவாங்குவது.

ஆகாயவான்புரவி அழைப்பித்துநான் தருவேன்
இந்திரனேநீரும் இங்கேயிருமென்றுசொல்லி
கட்டழகிநாயகியும் காவல்மேல்பாய்புகுந்து
ஆழிக்குளையில் அரசியருந்தானிறங்கி
கையோடுகண்ணுமாக கனிவாயுங்கொப்பளித்து
வாயோடுபல்லும் மதிமுகஞ்சுத்திசெய்து
தென்மதுரைநாடாளுந் திருநீற்றுக்காப்பணிந்து
சிந்தித்துநின்றாளே சிவனையடிபணிந்து
தேவேந்திரனை நினைத்தங்கே தெண்டனிட்டாள்
மைந்தர்புலந்திரற்கு வான்புரவியேறுமென்று
மைந்தனுக்குச்சகாயமாய் வரவழைக்கவேணுமென்று
ஆகாயவான்புரவி யாரணங்குவேண்டுமென்று
இந்திரரைநோக்கி எந்திசையுந்தெண்டனிட்டாள்
மருமகள்தானினைக்க மன்னவருந்தான்கேட்டு
தேவேந்திரருந்தான் தேவிமுகநோக்கி
கண்டாயோபெண்ணரசே கயற்கண்ணாலென்றவிதம்
தன்-மைந்தருக்குமைந்தருமாய் வாய்க்கவேவேண்டுமென்று
புத்திரற்குப்புத்திரராய்ப் பிறக்கவேவேண்டுமென்று
தவசுமேசெய்கிறாள் தையலிளம்பிறையாள்
என்றுரைக்கஇந்திரனார் இந்திராணிதான்கேட்டு
தேங்காய்க்குமூன்றுகண் தேசத்திலென்பார்கள்

ஓடிமயில்கண்ணாட்கு ஒருகண்ணேயுள்ளதுவும்
தோளுக்குத்தோள் துணைவேண்டுமிந்திரரே
அதனாலேயல்லவோ யாரணைந்துவருந்துகிறாள்
ஆகாயவான்புரவி அனுப்பவேவேண்டுமென்றாள்

தேவேந்திரன் புரவிகொடுத்தது.

தேவேந்திரபகவான் சிரித்துமனமகிழ்ந்து
வானத்துமேகங்கள் வானவர்கோன்வரவழைத்து
பார்த்தானேயிந்திரனும் பார்வைகள்கொள்ளாதே
இப்படிக்குப்போனாலே இந்திரர்க்குஏர்க்காது
என்று இவர்நினைத்து இன்பமுள்ளபோனுக்கு
பூமியில்வாழுகிற புரவியைப்போல்சோடித்து
அங்குபடிவைத்தல்லவோ அழகாயலங்கரித்து
நாலுகால்வண்டயமாம் நடுக்கழுத்திற்கொலுசுகளாம்
செம்பொன்சிறுசதங்கை சேர்ந்தபலகரையும்
அம்பொன்னின்கிண்கிணியும் அழகாகபூட்டினாராம்
மாணிக்கந்தன்னாலும் வைரியந்தன்னாலும்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
மெத்தைமடித்திட்டு மேலேயணைகோலி
சித்திரஞ்சேர்பட்டு சீராய்மடித்துவிட்டு
குப்பியில்சாந்துகளும் குழாவில்புனுகுகளும்
வாய்த்தயிலைச்சுருளும் வர்ணப்பலாக்காயும்
தட்டிப்புனுகுகளும் சவ்வாதுபரிமளங்கள்
பூவாலலங்கரித்தார் புலந்திரனார்புரவிதனை
வகைவகையாய்ப்பூச்சரங்கள் வைத்துப்புரவியிலே
சோடித்தலங்கரித்து சுந்தரற்குவேண்டுமென்று
தேவேந்திரபகவான சிரித்துஅலங்கரித்து
எற்குமோயிப்புரவி இந்திரற்குஏற்குமென்று
தட்டிப்புரவியைத் தாமந்தவாழ்மார்பன்
குதிரைக்குபதேசங் கூறினார்காதிலேதான்
ஆகாயம்போகாதே அவலோகம்போகாதே
செம்பொன்மணிமுடியான் தேவியுடகோவிலுக்கு
ஒருசாமபொழுதிலே இருக்குமட்டுந்தானிருந்து
இருசாமமங்கே இருக்குமட்டுந்தானிருந்து
விடியவொருசாமத்திலே விடுபட்டுவந்துவிடு
அப்போதுவான்புரவி அவருமேசொல்லுகுது
அருளருளும்ஐயாவே அப்படியேயாகுமென்று
வந்ததுகாண்புரவி மதுரைவளநாட்டிற்கு
செம்பொன்கடிவாளம் தென்னைகைப்பிடித்து
மலர்க்காவிதான்கடந்து வைகையவளநாடியரும்
மைந்தனிருக்கிறதோர் மண்டபஞ்சென்றேறினான்

புலந்திரனை அலங்கரித்தது.

மணிமுடியானை மஞ்சனீராடுமென்றாள்
மஞ்சனீர்சாலையிலே மன்னவனும்போய்புகுந்து
ஆடைகளைந்துவைத்து ஆபரணந்தான்கழற்றி
கத்தியுடனே அங்கி காவலுந்தான்கழற்றி
சேரவேதான்கழட்டி செம்பொன்மணிமுடியான்
கொற்றவர்கள்கோமானுங் குளித்துகரையேறினான்
துப்பட்டிக்கொண்டு துவட்டினார்சுந்தரிமார்
சரமுலரவே யிணைகவரிவீசினார்கள்
ஆடையெடுத்துடுத்தி ஆபரணந்தான்பூட்டி
கச்சைவரிந்துகட்டி கத்திமிகச்சொருகி
தென்னமுடிவேந்தன் திருநீற்றுக்காப்பணிந்து
சித்தித்துநின்று சிவனையடிபணிந்து
செங்கழுநீர்பூவெடுத்து சிவனாரைதோத்தரித்து
கஸ்தூரிபொட்டுமிட்டு கண்டபெண்கள்சேர்ந்திடவே
மாணிக்கமண்டபத்தில் மன்னவனுஞ்சென்றேறி
சிங்காதனத்திலே சீரான்வீரன்வீற்றிருந்தான்
ஆசாரநம்நாயகியாள் அல்லியருங்கூறுகிறாள்
மைந்தர்புலந்திரனை மயிலனையாள்தான்பார்த்து
ஆனந்தவாழ்பார்பா அடிசலுங்குவாருமென்றாள்
சிங்காதனந்தனைவிட்டு திருமுக்குதித்திறங்கி
அமுதுண்ணுமண்டபத்தே ஆணழகன்சென்றானும்
ஆசாரநம்நாயகியாள் அல்லியருங்கூறலுற்றார்
இருமிருமென்று இணைகடகக்கையமர்த்தி
பொற்றடுக்குமேலே புலந்திரனும்வீற்றிருந்தான்
சிங்கமுகக்காலி செம்பொற்றளிகைவைத்தாள்
கைக்குநீர்வார்த்தார்கள் காவலனார்வீரியற்கு
நீசமுற்றியூற்றி சேர்வளைமுன்கையாளும்
போனகம்வாங்கிப் புரிகுழலாள்தான்படைத்தாள்
பத்துவகைக்கறியும் பதினெட்டுபச்சடியும்
நீர்கடகக்கையால் நேரெடுத்துதான்கொடுத்தாள்
அறிவுடையநாயகர்க்கு ஆகாரந்தான்கொடுத்தாள்
அந்தவடிசல் அமுதுண்ணபிற்பாடு
அத்தளிகைமாற்றி பொற்றளிகைமுன்னேவைத்து
போனகம்வாங்கி புரிகுழலாள்தானபடைத்து
காச்சியபாலும் காட்டுமாங்கனிப்பழமுஞ்
திருத்தியமுதுஞ் செலுத்தியநெய்பாலும்
கூட்டிப்படைத்தார்கள் கொம்பனைமார்தாதியர்கள்
அந்தஅடிசல் அமுதுண்டபிற்பாடு
கைகழுவநீர்வார்த்தார் காரிகையார்தாதியர்கள்

உத்தமியுமைந்தனுமாய் ஒக்கவுலாகொடுத்து
சித்திரஞ்சேர்மண்டபத்தில் தேன்மொழியாள்வீற்றிருந்தாள்
முடிபூவுஞ்சந்தனமும் மெல்லியருந்தான்வாங்கி
அடைக்காயும்வெள்ளிலையும் அன்பாகத்தான்வாங்கி
மைந்தருக்குதான்கொடுத்து மாதுநல்லாளப்பொழுது
தானுமிலையமிர்தம் கையலருந்தினறுளே
மாதாயிளைப்பாற வான்கவரிவாங்கினார்கள்
தாமக்கருங்குழலாள் தாதிமுகம்நோக்கி
கொண்டுவந்துபூட்டுமென்றாள் குமாரன்புலந்திரற்கு
மச்சினியாள்மெச்ச வகைவகையாய்பூஷணங்கள்
ஆபரணப்பேழை அலைகோதிதான்திறந்து
ஆனந்தமார்பனுக்கு ஆபரணந்தானெடுத்து
தெரிந்தபணிதிகளை செம்பொற்றளிகைவைத்து
கொண்டுவந்துமுன்னேவைத்தாள் கொம்பேரிடையாளும்
தென்னர்பெருமான் திருமேனிதீண்டவல்லான்
ஆனந்தமார்பனுக்கு அருகாகவந்துநின்று
முத்தினுறுமாலை முகம்நிறையத்தான்றரித்து
வேதிச்சுநற்புனுகால் மின்னமுகந்துடைத்து
கட்டழகர்நெற்றியிலே கஸ்தூரிப்பொட்டுமிட்டு
தேனல்லோதாரன் திருநீற்றுக்காப்புமிட்டு
ஈரெட்டுப்பூண்கடுக்கன் யிட்டுமவன்காதில்
அனந்தமுடிசூட்டி அழகாகப்பூட்டினார்
ஒருமுக்கேமுத்து உலகமெல்லாம்பெற்றதுபோல்
பாரியமுத்துப் பரிமுத்துதாழ்வடமும்
நவரத்தினப்பதக்கம் நாகரீகத்தாழ்வடமும்
ஆரப்பதக்கமும் அழகுசரப்பளியும்
பார்த்தபணித்திரமும் பருமுத்துத்தாழ்வடமும்
முன்கைமுதாரிகளு முழுகடகபோதிரமும்
சந்திரகடகங்கள் தாயித்திசோதிமின்ன
அஸ்தகடகமும் அழகானமோதிரமும்
முத்திரைமோதிரமும் முன்கையிற்கடகமும்
செம்பொன்பவுத்திரமும் சேர்ந்தகணையாழிகளும்
பொன்னினரைஞாணும் பூட்டினார்பொற்சலங்கை
கச்சையிறுகணைந்து கத்திபிகச்சொருகி
பாங்குகள்தான்சொருகி பாலரிடதாளில்
பூஞ்சிலம்புந்தண்டையும் பொன்மெட்டுந்தானணிந்து
ஆபரணமெல்லாம் அடங்கலுந்தான்பூட்டி
இழையாயிரம்பொன்பெற்ற இந்திரவர்ணப்பச்சைவடம்
ஆனந்தமார்பனுக்கு ஆடைவரிந்துகட்டி
ராஜசனமாகவே நின்றதொரும்பணியெல்லாம்
இந்தப்படியாக இயலாயலங்கரித்து

அரசாளுந்நாயகியாள் அல்லியருங்கூறலுற்றார்
மைந்தர்புலந்திரனைப் பார்த்துவளநாடி
கண்திருஷ்டிவாராமல் காப்பிடுங்கள் நாதியென்றார்
சந்தனமுஞ்சாந்தும் சவ்வாதுமிகவணிந்து
ஆலாத்திகாட்டுமென்றாள் ஆனந்தமார்பனுக்கு
முத்தாலேஆலாத்தி முப்பதுநூறாயிரம்பேர்

புலந்திரனுக்கு தாயார்புத்திசொல்வது

ஆகாயவான்புரவி அலைதாரநீரேறி
ஒருசாமப்பொழுதிலே உத்தமரேநீர்போய்
மந்திரவாள்தாரேனே மன்னர்பெருமானே
வாள்வைத்தால்கதவு திறக்குங்காண் மன்னவனே
தானேதிறக்குங்காண் தனஞ்செயனேபொற்கதவு
போனாற்போல்நீரும் பொற்கொடியையெழுப்பாதே
ஆராய்ந்துபார்த்து ஆனைமுகாமன்னவனே
கையாலேதட்டிக் காரிழையையெழுப்பாமல்
காலாலேதட்டி மங்கையனைநீயெழுப்பும்
சற்றேறதானதட்டலுமே தையலெழுந்திருப்பாள்
அவள்வாழும்பெருமைகளும் மாமன்மார்சேவகமும்
உத்தமர்கள்பஞ்சவரை ஓட்டியரசாளுவதும்
கட்டழகர்பஞ்சவரைக் காலோட்டியாளுவதும்
கர்ணனிடஅதிகாரம் காவலர்போர்வீரியமும்
ராசாளுமேசி எடுத்துரைப்பாளாமாகில்
உத்தரங்கள்சொல்லாதே ஒக்கநின்றுபேசாதே
கொற்றவனேயுந்தனுக்கு கோபங்கள்வாராமல்
அத்தனைக்குமுட்டுகொடுத்து அலைதாராநீர்கேட்டு
அத்தனைசொன்னாலும் எனக்காகநீர்பொறுத்து
அன்னமேஇக்கோவிலார்கோவில்சொல்லுமென்று
ஆரணங்கேயுமுடைய ஆச்சிப்பேர்சொல்லுமென்று
மங்கையரேயுமுடைய மாமன்பேர்சொல்லுமென்று
அன்னமேயுன்னுடைய ஐயன்பேர்சொல்லுமென்று
மங்கைநல்லாள் தன்பெரு மணவாளன் தன்பேரும்
ஆரமுலையாள் அடையாளஞ்சொல்லுமென்று
திருப அடையாளம் தெரிவைக்குதான்கொடுக்க
தாரேனடையாளம் தையலற்குநீகொடுத்து

அடையாளங்கொடுத்தது,

அல்லிக்கொடியும் அழுத்தியசீராவும்
சீராவுங்கச்சுந் திருமுடியுந்தான்கொடுத்தாள்
உன்மாமியாரிட்டதொரு பவுத்திரந்தான்கொடுத்தாள்
வாங்கிமுடித்துக்கொண்டார் மன்னர்பெருமானும்
மாதாஅடையாளம் வைத்தான்மடிதனிலே

அரசாளும்நாயகியாள் அல்லியரும்கூறுகிறாள்
அரும்பாவிவாசலிலே அமுர்தம்புசியாதே
கஸ்தூரிபூசாதே கபடனதுவாசலிலே
தண்ணீர்குடியாதே தையலதுவாசலிலே
கொப்பளித்துநீரைக் குடியாதேவாருமென்றாள்
இருந்தொருசாமம் எந்திழையைநீகூடி
வரவொருசாமத்தில் வந்துவிடுமென்றாளே
அருளருளுமென்றாயே அப்படியேயாகுமென்றார்
போகவிடைதாருமென்று புலந்திரனுந்தெண்டனிட்டு
வந்துபணிந்தொரு மகனைவாழ்த்தலுற்றாள்
நீரேஅரசாள்வீர் நீடூழிகாலமெல்லாம்
என்னைப்பெறுவீர் எதிர்த்தார்முடிபெறுவீர்
பிள்ளைபெறுவீர் பெருமாளைப்போல்வாழ்வீர்
வாழ்ந்திடுவீரென்று மனங்குளிரவாழ்த்தினாள்
தேனல்லோதாரனுக்கு திருநீறுதான்கொடுத்தாள்
வாய்த்தயிலைச்சுருளும் வர்ணப்பழுக்காயும்
காவலன்விரியற்கு கைநிறையஅள்ளியிட்டாள்

புரவியின் மகிமைசொல்வது

ஆதினம்விட்டிறங்கி அன்னநடையாளும்
மாதாவுமுன்னடக்க மைந்தரும்பின்னடக்க
சிங்காரத்தோட்டத்தில் சென்றாள்திருவனையும்
வான்புரவிதான்பிடித்து வைகைவளநாட்டியரும்
செம்பொன்னாற்கடிவாளம் தென்னாடிகைபிடித்து
மைந்தர்புலந்திரனை வளநாடிதான்பார்த்து
பூமியிலேவாழுகிற புரவியைப்போலெண்ணாதே
வையாளிபுரவியோடி வருவதெல்லாங்கண்டோமே
கடிவாளங்கைவிடாதே கட்டழகாபார்வதமே
அங்குபடிகால்விடாதே ஆணழகாமன்னவனே
மாலைமுடியானே வழிபிடித்துவாருமென்றார்
மச்சினியைக்கண்டபின்பு வாராமலிருக்காதே
வேந்தர்பெருமானே விடியவிங்கேவாருமென்றார்
அருளருளுமென்னாச்சி அப்படியேயாகுமென்றார்

புலந்திரன்புரவிமேல்நடப்பது

மறுபடியுந்தெண்டனிட்டான் மாதாவின்சீர்பாதம்
புரவியைச்சுற்றிவந்து போகசலாம்வாங்கினனே
அங்குபடிகால்வைத்து ஆனந்தவாழ்மார்பன்
உத்தமர்கள்புத்திரனும் உதாரிச்சவாரினனே
ஏறினதுகண்டாளோ யிந்திரரைக்காணாமல்
பிள்ளையைக்காணனே பெருமாள்புலந்திரனை

ஆகாயமாகவே அப்புரவிதான்பறக்க
அந்தரமார்க்கத்தில் அப்புரவிபொழும்பினதே

அல்லியம்மாள் புலம்பல்

மைந்துரைப்போகவிட்டு வாடிமனந்தளர்ந்தாள்
போகவொட்டேனென்றுனை வலியநான்போகவிட்டேன்
என்னறிந்தாரோ காவலர்கள்கண்டாரோ
நாலாங்கடுந்திரளார் நூற்றொருவர்கண்டாரோ
மாலைமுடியானை வதைசெய்தாராமாயின்
மாளும்படிபொழிய மண்ணிலிருப்பதில்லை
பஞ்சவருக்கென்னசொல்வேன் பாஞ்சாலிக்கென்னசொல்வேன்
வெற்றிமதயானை வீமருக்கென்னசொல்வேன்
அங்கவர்க்கென்னசொல்வே னருச்சுனருக்கென்னசொல்வேன்
சோலைமலருடைய சொக்கரல்லோசெய்ததெல்லாம்
அவரிட்டகல்கமல்லோ யாதென்றுநானறியேன்

அல்லி சொக்கநாதர் கோவிலுக்கு வந்தது.

தண்டிகைதானிருக்க தையலருந்தானிருக்க
தாளுவழிநடந்து தையலருமந்நேரம்
முக்கால்வலந்து முடிவணங்கிதெண்டனிட்டாள்
மைந்தர்புலந்திரற்கு வாட்டங்களில்லாமல்
மன்னர்புலந்திரனார் வந்தாரேயாமாகில்
ஆலாத்திப்பெண்கள் அதிசயமாய்நானதருவேன்
மாடைவராகனும் மாணிக்கரத்தினமும்
செம்பொன்னின்முத்துகளும் சுவாமியேநானளிப்பேன்
தண்டிலக்கபொன்னையெல்லாம் சங்காமேனநான்றருவேன்
கொண்டுவந்துநான்சொரிவேன் கோபுரவாசலிலே
மைந்தர்புலந்திரர்க்கு வல்வினையில்லையென்று
திருமுடியில்புஷ்பமது சேரவேதள்ளுமென்றாள்

சொக்கர் மீனாட்சியைநோக்கிச் சொல்வது.

சோலைமலருடைய சொக்கருந்தான்பார்த்து
அங்கயற்கண்ணாயிய அரனுந்தான்பார்த்து
கண்டாயேமாதேநீ கயற்கண்ணாள்நின்றநிலை
எத்தனைநேரமட்டும் இவள்கெஞ்சிநின்றாலும்
பொற்கொடிமாதருக்குப் புஷ்பங்கள்கொடுப்பதில்லை
அங்கயற்கண்ணம்மா ளவர்முகத்தைதான்பார்த்து
எல்லோருக்குங்கண்கள் இரண்டென்பார்ராச்சியத்தில்
தேங்காய்க்குகண்மூன்று தேசத்திலென்பார்கள்
ஓடமலர்கண்ணாட்கு ஒருகண்ணேயுள்ளதுகாண்
பிறந்ததுகன்னியானால் பிள்ளைதுணைவேணும்
அதனால்வருந்துகிறா ளாரணங்கிந்நேரம்
பொற்கொடியாள்மாதருக்குப் புஷ்பமதுகொடுவென்ன

சங்கருமப்போது சற்றேநகைத்து
கங்கைபரிதாபத் தையலரேகண்டாயோ
வெட்டிவேல்குத்துவேன் விலங்கிடுவேனென்றுசொல்லி
ஆக்கினைகள்செய்து அவனையிவன்போகவிட்டாள்
எத்தனைநேரமட்டும் இவள்கெஞ்சிநின்றாலும்
பொய்கைவளநாட்டிற்குப் புஷ்பங்கள்கொடுப்பதில்லை

மீனாட்சி சொக்கருக்குச் சொல்வது

அங்கயற்கண்ணம்மை ஆசனத்தைவிட்டிறங்கி
மகாதேவர்பாதமது வணங்கியேதெண்டனிட்டு
அங்கயற்கண்ணம்மை அருகில்வந்தென்னசொல்வாள்
ஆராயிரவர்களும் அணிதிரளாம்பாண்டியர்கள்
மாளுவோமென்றுசொல்லி மலைமேல்தவமிருந்தார்
மாளாதேயென்று மலரிலவதரித்தாள்
வீரதச்செங்கோல் செல்விசெலுத்திநின்றார்
மன்னன்விஜயன் மடலூர்த்துமாதேவி
நானேவிஜயனர் கட்டமுகன் தேவியிவள்
சிறுவிரல்பாதம்ரெண்டும் சிலம்புக்காற்கொப்பளிக்க
செண்பகப்பூமேனடிகள் திருவினைக்குத்தானோக
எத்தனைநேரமட்டாய் இளங்கொடியாள்கெஞ்சிநிற்க
இப்படிக்குநீரிருக்க யிதுவுமக்குத்தருமமல்ல
பொற்கொடிமாதுக்கும் புஷ்பமதுகொடுத்தால்
சந்தோஷமாயிடுவாள் தருமமுடியழகி
சங்கருமப்போது தயவாய்மனமிறங்கி
சிவனருமப்பொழுது திருமுடியைத்தானசைக்க
வலங்குழலாளும் இருகையுந்தானிறைய
வாங்கிமடியில்வைத்தாள் மதுரைவளநாடியரும்

சொக்கர் பிள்ளைக்குத் துணைபோனது.

சொக்கருங்கூட துணைபோகவேண்டுமென்றான்
சிவனருமப்போது தேவிமுகம்நோக்கி
ஆருமில்லையானே ஆளடிமையானோமே
அது-சந்தேகமென்று சங்கரியுந்தான்சிரித்தாள்
சொக்கருங்கூடத் துணையாகத்தான்போனார்
சந்நிதியைவிட்டுச் சுவாமியவர்போனார்
தீர்த்தமும்திருநீறும் திருமாலைச்சந்தனமும்
கொண்டெதிரேதந்தார்கள் கொம்பேரிடையாட்கு
தீர்த்தம்தெளித்தார்கள் திருநீற்றுக்காப்பணிந்தார்

அல்லி கொலுவுக்குவந்தது.

சந்நிதியைவிட்டுத் தையலருந்தானமர்ந்தாள்
படித்துறையுந்தான்கடந்து பாண்டிவளநாட்டாளும்

கோபுரவாசல் கொம்பனையுந்தான்கடந்து
தென்னந்தெருவும் தேரோடும்வீதிவிட்டு
மன்னர்தெருவுகளும் மாரோடும்வீதிவிட்டு
வாசற்படிகடந்து மண்டபஞ்சென்றேறினாள்
தாமக்கருங்குழலாள் தாதிமெதிரேவந்து
காலுக்குநீர்கொண்டு காரிழைமாரோடிவந்தார்
கோவிலுக்குபோய்வந்தேன் கொம்பனையேதாதிகளே
இளைகொளானூண்தான்வேண்டேன் ஏலக்குழலாளே
பாவையழகியரும் பள்ளியறைபோய்புகுந்தாள்
தழுவணையில்லைகொடுத்து தையலரும்வீற்றிருந்தாள்
அன்றுமுறையுடையார் ஆயிரம்பேர்முடிவர
அத்தனைபெண்களையும் அனுப்பிவிடைகொடுத்து
மெல்லியர்களெல்லாம் விடைகொடுத்துபோனபின்பு
மங்கையரும்பள்ளிக்கொண்டாள் மாணிக்கமெத்தையிலே
விடிந்துவருமாறே வேர்த்தனையுங்காண்பமே
வேல்பொருதுங்கண்ணாள் விசனமாய்ப்பள்ளிகொண்டார்

புலந்திரன் புரவிமேற்போனது.

அந்நேரமிந்திரனார் ஆகாயமார்க்கத்திலே
ஆகாயமாய்ப்பறந்து ஆனைமுகன்வான்புரவி
மதுராபுரிகடந்து மலைகளைகாடுவிட்டு
வனமாய்வனங்கடந்து மலைகுகைகள்தான்கடந்து
உடல்வளநாடு குலவீரன்றான்கடந்து

தருமாபுரங்காண்கிறது.

தாமரையூர்அல்லிமகன் தர்மாபுரங்கிட்டினனே
அத்திபுரத்தை அடுத்தானலேதாரன்
எத்திசையுந்தோப்பும் எதிர்மலர்க்காவுகளும்
நாற்றிசையுந்தோப்பும் எதிர்மலர்க்காவுகளும்
கொண்டாடிப்பூக்குமந்த குங்குமசெண்டாடை
செடிநேலங்கோங்குலவ நீலவர்ணகஸ்தூரி
பூமரங்களத்தனையும் பூத்துச்சொரிந்ததுவே
மந்தாரைபுன்னைகளும் மருதோவாடிகுவாட்சி
மல்லிகைமுல்லை வாய்த்ததொருசெண்பகமும்
வாழுகின்றபுன்னைமரம் மாதுளம்பூவாசனையும்
திருவழகுஞ்சோலையும் தெய்வவுலகம்போல்
கண்டான்புலந்திரனுங் கண்கள்ரெண்டுங்கொள்ளாதே
இத்தனைநாட்டையும் இளவரையன்றான்பார்த்து
இப்பெரியநாட்டைவிட்டு எங்கொளித்தாரையன்மார்
எத்தவனக்காடுறைந்தார் என்னுடையஐயன்மார்
மாயத்தாலசூதாடி மண்ணிழந்தார்பாண்டவர்கள்
கட்டழகனிந்திரனும் கண்களால்முத்துதிர்த்தான்

பூமரங்களத்தனையும் புலந்திரன்தான்பார்த்து
பஞ்சவர்தன்கோமானும் பார்த்தான்திருமாலும்
வந்தாரேயிப்பொழுது மச்சினியாள்கோவிலுக்கு
சன்னத்தைதாம்கொடுத்து இந்திரனைக்காண்கிறது
பூவாலேபச்சைவடம் புலந்திரனைக்காண்கிறது
கொண்டுவந்துபோத்தினார் கொற்றவர்கள்புலந்திரற்கு
பூமரத்தைப்பார்த்து புலந்திரனுங்கூறுகிறான்
காவலர்கள்பஞ்சவர்கள் காடுறைந்துபோயிருக்க
வண்டார்குழலாளும் மயிர்விரித்துப்போயிருக்க
ஆர்முடிக்கப்பூத்தீர்கள் அழகியபூமரமே
தாயாதிதான்முடிக்க சார்பாகப்பூத்தீரோ
மாற்றான்முடிக்கவோ வந்துமலர்சொரிந்தீர்
பூமரங்கள்கூறும் புலந்திரனைத்தான்பார்த்து
ஐயாநீர்கேளீர் அடியேன்விண்ணப்பத்தை
மாலைமுடிபாண்டவர் வனவாசம்போனவன்றே
காவலர்கள்பாண்டவர் காடுறைந்தநாள்முதலாய்
தக்கப்புகழுடைய தருமர்வனம்போனவன்றே
வண்டார்குழலாள் மயிர்விரித்துப்போனவன்றே
நல்லமழையில்லை நாட்டில்விளைவுமில்லை
சென்னல்விளைவுமில்லை தேசஞ்செழிப்புமில்லை
பூவுகள்மலர்ந்து பூமரங்கள்பூவாது
ஆவுங்கறவாது அரும்பாவிபட்டணத்தில்
வெள்ளியுந்தெற்கடந்து வேந்தனும்போய்மறைந்து
கன்னியுங்கால்மறுத்து கடலுந்திசைமாறி
பாழாயிருக்குதையா பட்டணங்களத்தனையும்
வேந்தர்பெருமாளே மலராகநாமிருந்தோம்
மாலைமுடியானே வருகிறதுநாமறிந்து
இப்போதிலேதுளிர்த்து இந்நேரம்பூத்தோம்
வருகிறநாளறிந்து மலர்சொரிந்தோமன்னவரே
வருவதற்குமுன்னமே மன்னவரேபோவோமோ
போராஞ்சாவீரன் புலந்திரனுங்கூறுகிறான்
ஒட்டினர்பன்னிரண்டு உத்தமர்கள்பஞ்சவரை
மாலைமுடிபாண்டவர்கள் வருநாளுந்தானாச்சு
ஆறுவர்பாண்டவர்கள் மாறுவார்நூற்றொருவர்
நம்முத்தநாடுகளும் நமக்குத்தான்ராச்சியமும்
எதுக்குமஞ்சாதே யிருமென்றார்மன்னவரும்
அப்போதுபூமரங்கள் அழகுமெத்தைகள்தான்போலே
புஷ்பமெத்தைதசோடித்து புலந்திரற்குதான்கொடுக்க

தருமாபுரத்தில் அதிசயங்காண்கிறது.

அப்பால்திரும்பி ஆனைமுகர்வருகையிலே
அக்காட்டில்வீற்றிருக்கும் அன்னமுந்தாராவும்

மானுங்கலையுமே மயிலுங்குயிலினமும்
சித்தானைக்கன்றுகளுஞ் சிறுத்தைபுலி குட்டிகளும்
காட்டானைக்கன்றுகளும் காடிபுலிசிங்கங்களும்
பாடிப்பறந்துவரும் பஞ்சவர்ணக்கிளிகளும்
ஐந்துதலைநாகமது ஐவர்க்கு நமக்கு
மாணிக்கமின்னலே மணிவிளக்காய்கொண்டுவந்து
முத்துமுடிமன்னன் முன்கையிலேறுதான்
மகாமிருகமத்தனையும் வந்தெதிரேகண்டது
வந்தெதிர்கண்டதை மன்னவனுந்தான்பார்த்து
போரஞ்சாவீரன் புலந்திரனைக்கூறுகிறான்
என்னமாயிருக்கிறீர்கள் இந்தநாளிவ்விடத்தில்
பாண்டவர்கள்போனபின்பு பாழ்மிர்கம்போதாதோ
நாயாதிவாசலிலே சத்துருவன்வாசலிலே
பகையாளிவாசலிலே பாழ்மிர்கமுண்டாகுமோ
என்றுமிவருரைக்க யிவ்வளவமிருகமெல்லாம்
மகாமிருகங்கள்கூறும் மன்னவன்முகம்நோக்கி
மாலைமுடிபாண்டவர்கள் வனவாசம்போன அன்றே
வண்டார்குழலாள் மயிர்விரித்தநாள்முதலாய்
மன்னவர்கள்ராசாக்கள் வனம்போனநாள்முதலாய்
நாங்கள்-இக்காடிருப்போம் உத்தமரேயெல்லோரும்
கொந்துமணிமேலே குடுமலைகாட்டிலேயும்
அங்கங்கேசேர பார்த்திருந்தாரெல்லோரும்
மாலைமுடிபாரேசர் வருகிறசெய்திகண்டு
காணவிருப்பமுடன் காவலரேவந்தோங்காண்
போரஞ்சாவீரன் புலந்திரனுங்கூறலுற்றான்
அவன் நாட்டியபள்ளிரண்டில ஒன்பதுக்காணுச்சு
மூன்றுவருஷமென்ன முடிமன்னராவதும்
அப்பாலேயிமன் அவர்கள்திருமுடியை
தெண்டிக்கிறாரெப்பார் திரிபாசான்படையை
நம்பந்தாயிகளும் நமக்குத்தான்ராச்சியமும்
அஞ்சாதிருங்களென்று அபயக்கானடந்தார்

பாண்டவர்களரண்மனை காண்கிறது.

துவாரசாண்ட அரண்மனைபக்கிட்டினேனே
கொற்றவர்கள்தங்களது கொலுக்கூடங்காட்டினேனே
பாண்டவர்கள்வீற்றிருக்கும் பாரமணிமண்டபத்தே
பொற்றூணும்நற்றூணும் பொதிகையுத்தரமும்
உத்தரமுஞ்சித்தரமும் ஒக்கநிலைகாட்ட
இட்டிருக்குமாதனமும் ஏறுமணிசிங்காதனமும்
போட்டிருக்குமந்த பொன்னுமேலாதனமும்
தருமாது ஆதினமும் சகலகலை ஆதினமும்

வீமராது ஆதினமும் விசையனாரா தினமும்
நகுலராது ஆதினமும் சகாதேவரா தினமும்
மன்னவர்களா தினத்தில் மாற்றானைக்கண்டானே
தருமராது ஆதினத்தில் சண்டாளனன்கிறனை
பாண்டவர்கள் தன்னுடனே பகுந்தராசாளாமல்
பாதியரசு அவர் பங்கிட்டு ஆளாமல்
எதனாலேகாடுறைந்தார் யென்னுடைய ஐயன்மார்
தருமத்தைபெண்ணியவர் தரணியிலிருந்தார்கள்
புண்ணியக்தைபெண்ணியவர் பூமியிலிருந்தார்கள்
அரண்மனையைப்பார்த்து அழகியகண்முத்துகித்தான்

துரோபதையரண்மனைகாண்கிறது.

தோராவடிவழகி துரோபதையாள்வாசலிலே
தையலதுவாசலிலே தங்கப்பொன்னாற்சமைத்து
நாணற்கொடிமுறுக்கி நற்கொடியாள்முத்தழகி
பானுஞ்சுடரும் பசும்பொன்னாலேயடித்து
மாணிக்கத்தாலும் வைரியத்தாலும்
ஆணிப்பொன்னாலே அழுத்தியசிவ்வாசல்
ஆச்சிதலைவாசல்கண்டு ஆணழகன்வயமெறிந்து
மாளிகையுமிங்கிருக்க மண்டபமுமிங்கிருக்க
ஆண்டமனைகளும் அரண்மனையுமிங்கிருக்க
எழுநூறுதாதியர்கள் இணைகவரிதான்வீச
மூநூறுதாதியர்கள் முறைசெய்துவந்துநிற்க
ஏறியிருக்குமந்த யிட்டசிங்காதனமும்
ஆச்சியாரெல்லோரும் அடியாளைபாளவந்தார
பருங்கல்உறுத்ததலே பறுமணல்கள்தானுதிர
காடுதலையிழுக்க கன்னிதுயில்முன்னிழுக்க
கானலிலும்வெய்யலிலுங் கதரியவர்திரிய
எக்காட்டுக்குள்ளே யிருக்கிறாளென்தாயார்
ஆச்சிதலைவாசல்கண்டு அழகியமுத்துதிர்த்தான்
இந்திரருமப்போது எங்கியழும்போது
கொண்டுபறந்தப்போ குலவீறன்நற்புரவி

புலந்திரன் அத்திபுரங்காண்கிறது.

ஆகாயமார்க்கத்திலே அப்புரவிதான்பறக்க
அத்திபுரங்கண்டாரே ஐவரவர்திருமகனார்
அந்தவளநாட்டை அடுத்ததுஅப்புரவி
அம்பலமோவென்றால் ஐந்நூறுகாதவழி
இடப்பெரியவாசலது எழுநூறுகாதவழி
காணுக்குத்தானுயர்ந்தே தானூறுகாதவழி
ஆயிரங்காதவழி அகலமுள்ள அம்பலத்தில்
நானூற்றுக்காதவழி நலம்பெரிய அம்பலத்தில்
முன்னூற்றுக்காதவழி முத்தணிந்தவம்பலத்தில்

பொற்றூணுங்கற்றூணும் பேரிகைவுத்திரமும்
குளிர்ந்தசந்தனத்தூணுங் குங்குமகற்றூணும்
தூணுக்குத்தூணு துணைமலைபாய்ச்சேர்த்து
மெத்தையலங்கரித்து மேற்கட்டிதான்கட்டி
சுத்தியலங்கரித்து தோரணங்கள்தான்கட்டி
கண்ணாடிசல்லிகட்டி காவலன்றனம்பலத்தில்
சங்கிழைத்தமண்டபமுந் தங்கமுத்துமாலைகளும்
எங்கெங்குஞ்சோதியிட எழில்முத்துமாலைகளும்
வந்துநிழல்காட்டும் மாணிக்கமாலைகளும்
வாடாததாமரையும் வந்துநிழல்காட்ட
முத்துவாசதமும் முழுப்பவளிச்சிலைகளும்
தங்கத்தாற்பொம்மைகளுஞ் செங்கழுநீர்மாலைகளும்
செம்பொன்னூற்சிலைகளும் செம்பவளத்தூணுகளும்
எங்கெங்குஞ்சோதியிட இராசாவினம்பலத்தில்
சித்திரஞ்சேர்மண்டபத்தில் செம்பவளமாலைகளும்
வந்துபரிமளங்கள் வாசனைகள்தான்வீச
வாழைகமுகுகளும் வர்ணபலாச்சோலைகளும்
சேரவேகாட்டிடவே சிகப்புப்பெரியஅம்பலத்தில
சென்றவிடந்தோறும் நிலைத்தாறஞ்சபாமஞ்சள்
பார்த்தவிடந்தோறும் பந்தங்கள்சேர்விளக்கும்
காடைவிளக்குகளும் கைவிளக்குதேர்விளக்கு
ஏணிவிளக்குகளும் எண்ணூறதீவிளக்குகளும்
தருமமுடியார்க்குச் சப்பிரகல்விளக்கும்
பந்தங்கள்சேர்வையும் பசல்வத்திபிடிபாணம்
பூவர்ணமத்தாப்பும் பொறிபாணந்தான்முழங்க
எத்திசையுந்தான்முழங்க விட்டிருந்தும்மம்பலத்தில்
ஏறியிருக்குமந்த எழுமணிசிங்காதனமும்
வந்திருக்குமன்னர் மகாசேனைதன்னுடனே
முந்நூறுகோடி முடிமன்னரங்கிருக்க
சட்டிபிடிமன்னவர்கள் பிபவரையங்கிருக்க
பாக்குபிடிக்கிறதோர் படைமன்னரங்கிருக்க
கத்திபிடிக்குமன்னர் காவலர்களங்கிருக்க
கோடிலட்சங்கோடி கொற்றவர்களங்கிருக்க
சட்டைகழட்டாத சாமந்தரங்கிருக்க
வேதப்பிராமணரும் சோதிபருமங்கிருக்க
பஞ்சாலமகாராசன் படைகளுமங்கிருக்க
காசிவளநாடாண்டார் கர்ன்னனதுசேனைகளும்
கரும்பசையதேன்சொரியுஞ் சோழன்பரிகலமும்
ஏடல்மேலாதானவன் யிடும்பன்பரிகலமும்
ஆரங்கவேதமோதும அகஸ்தியனார்தந்தருளும்
மதுரைபரிகலமும் வளநாடுசேனைகளும்

ஏழுலகராசாக்களெக்குலோறத்திருந்தார்
தங்கையணைவாளன் தறுதலைபாலைக்கிருந்தான
தருமமுடியழகன் சகலருபக்கிருந்தார்
மூவாறுதாதியர்கள் முதந்தெவ்வரிவிட
ஐயாறுதாதியர்கள் அடப்பமேந்தாவிச
பச்சைசோலைபெண்கள் பரிக்குகவிபாட
மேளவகைகளும் விருதுபல முழங்க
கவியோர்கவிபாட கட்டியக்காரர்பரிக்க
புலவரிருபுறமும் பூவருஷமாச்சொரிய
கீதமேத்துமரம்பை கிலனரிகள்வாசிக்க
வீணைகள்கின்னரிகள் வேணபடிவாசிக்க
கர்னனதிருமருகில் கட்டியப்பூசரங்கள்
திரியோதிரன்மருகில் சென்றுகிழலாட
திரியோதிரன்பக்கதில் சிரப்பானபூச்சரங்கள்
கர்னன்திருமருங்கில் கண்டுசுழலமிட
அவர்குழலில்மாலை இவர்குழலில்தாறுட
இவர்குழலில்மாலை அவர்குழலில்தாறுட
ஏறியிருந்தார்கள் இருவருமசிங்காதனத்தை
கண்டான்புலந்திரனுங் கண்களிரண்டில்கொள்ளாதே
பாண்டவர்தன்னுடனே பகுந்துஅரசாளாமல்
பாதிஅரசுஅவர் பங்கிட்டுஆளாமல்
எதிரேலகாடுனைந்தார் என்னுடையாலுபமார்
இக்கோடிராசமன்னர் இருக்கயிடமிருக்க
ஐவரந்தபாண்டவர்கள அவர்க்கிடமிலலையென்று
அந்கோரக்காட்டில் அடித்தோட்டிவிட்டானே
நிர்க்குமோயிவ்வாழ்வு நிலைக்குமோயிவ்வரசு
இப்பெரியஅம்பலத்தில் இருந்தராசர்தலைகள்முன்னே
கட்டழகியென்தாயார் கைக்கடையாய்வகதாளோ
பார்த்துமிருந்தாரோ பாண்டவர்களைவருந்தான்
கண்டுமிருந்தாரோ காளையவைவருந்தான்
தக்கப்புகழுடைய தருமாது ஆயுதமும்
ஏழாயினபலமுடைய இயவீமராயுதமும்
ஆறலழுதமன்னன் அர்ச்சுனர்கைப்புவில்லும்
நாமக்கொடியுடைய நகுலானாயுதமும்
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவர்கைகளும்
எதுக்கென்றிருந்தது பெலக்கைவராயுதமும்
தன்றேவிக்கில்லாத தைரியங்களேதுக்கு
வெற்றிமதயானை வீமர்பொறுக்காரே
அர்ச்சனராசனுமை யார்சொல்லுங்கேளாரே
யார்சொல்லுங்கேளாரே ஐயன்மார்காலவருந்தான்

தக்கப்புகழுடைய தருமர்சொற்கேட்டாரோ
அன்றுநாணசற்றே வருந்திருந்தமையாகில்
தக்கபுகழுடைய தருமர்சொல்கேளேனே
நாலாக்கிக்கிரனார் நாற்றெருவர்பூமுடியை
வெட்டிவெப்பேனே வீரமாகாளியற்கு
பட்டடதரித்து பாருலகையாளவைப்பேன்
காவலர்களைவருடன் கைகட்டிசேவிப்பேன்
இதுபதகினியாள்நின்று பரதவிக்க அம்பலமோ
பாவையவளுருகப் பருந்தாட்டமாட்டினைத்தான்
அம்பலத்தைப்பார்த்து அணைமுகன்வயிறெரிந்து
கட்டழகன்கோபானும் கன்னிறையமுத்துதிர்த்தான்
இந்திரனுமங்கே எங்கியழும்போது

புலந்திரன்சலந்தரி கோட்டையைக்காண்கிறது.

மேலாய்ப்பறந்தது மேலர்தனதுதான்புரவி
சாரிநடையாமது சலந்தரிகோட்டைகளாம்
ஒற்கோட்டைமுத்திரையுங் கர்ணனதுகாவல்களும்
ஆழமனல்பறித்தது ஆகாயக்கோட்டைகட்டி
சுற்றிமதிலெழுப்பி சூரியனைக்காணுமல்
அட்டமதிலெழுப்பி ஆதித்தனைக்காணுமல்
வாசற்படிவெட்டிவைத்திருக்குங்காவல்களும்
விழித்தகண்சிமிட்டாதே மெல்லிபற்குக்காவல்களாம்
தாமக்குழலாட்கு தலையரிப்பாடிவந்து
நாகசுரமூத நற்கவரிகொம்பூத
கூடமுழக்கவே குலவீரர்சூழ
கொக்கரித்துநாற்றிசையும கூத்தாடிபாடிவர
ஆர்ப்பரித்தோடிவந்தார் அன்னநடையாட்கு
கண்டான்புலந்திரனுங் கண்கள்ரெண்டுங்கொள்ளாதே
இதுமாமன்மார்காவல்களோ மைத்தவரிசைகளோ
அம்மான்மார்காவல்களோ அத்தைதவரிசைகளோ
என்றுநகைநகைத்து இந்திரனும்பார்த்திருந்தார்

சொக்கர்பிராமணர்போல் வந்துகர்ணனுக்குச்சொல்வது.

மாலைமுடியானும் வந்ததற்குமுன்பாக
சோலைமலருடைய சொக்கருமப்பொழுது
பஞ்சாங்கவேதியன்போல் பிராமணவடிவெடுத்து
மன்னர்கருணர்முன்பு மறையவர்போலேவந்து
ஆள்வருத்தாய்காணுகுது அதிகருணவீரியரே
பத்திரமென்றுசொல்லி பரமனும்போய்மறைந்தார்
சொல்லியேபோய்மறைந்தார் சொக்கருமப்பொழுது

கர்ணர் கலந்தாரிகோட்டைக்குவருகிறது.

அங்கதேசநாடாளும் அதிர்ணவீரியரும்
கரிமுழியாள் மாது கலந்தாரிகோட்டைவந்தார்
எண்ணவொண்ணாசேனை எண்பதெண்ணாயிரம்பேர்
உருவின ஆயுதத்தை உறையிலேபோடாமல்
விழித்தகண்சிமிட்டாமல் மெல்லிபரைப்பார்த்திருந்தார்
தருப்புமுடியானுந் தலைவாசல்வந்துநின்று
அத்தன்டகாவலரை அதிகாரனைதானைபார்த்து
அந்திப்பொழுதிலே ஐயர்வந்துசொன்னாரே
காவலர்கள்வீரியரே கண்ணுண்டாய்பார்த்திருங்கள்
திட்டங்கள்சொல்லியே திரும்புமந்தவேளையிலே

கர்ணன் கலந்தாரிக்கு நடனஞ்சேர்வைவைத்தது.

சுந்தரப்பூமுடியாள் தூக்கம்வருகுதென்று
கேளிக்கைவேண்டுமென்றாள் கிளிமொழியாள்நாயகரும்
அப்படியேநல்லதென்று அட்சணமேபிர்கருணர்
நட்டுமுட்டுநாகசுரம் நலமுடனேயனுப்பிவைத்தார்
சதுர்த்தீர்த்தகொலுவதனில் தானமர்ந்தாள்மாதுகன்னி
அப்போதுமாதருக்கு ஆடலும்பாடல்களும்
பதினெட்டுமேளம் பண்பாகததான்முழங்க
சிற்றிடையாள்மாதர்கள் சிலம்புகலகலென்ன
ஆடலும்கூற்றும் ஆம்பையர்நாடகமும்
நாடகமும்கூற்றும் நடுநடுவேசிந்துகளும்
ஆடாதகூத்துகளும் ஆடினாறாயிரம்பேர்
கேளிக்கைபார்த்திருந்தாள் கிளிபவளவாயாளும்

புலந்திரன் ஆகாயத்தில் அதிசயப்படுகிறது.

ஆடல்பாடல்சத்த மாகாயந்தான்கேட்க
பெண்கள்குரலோசை புலந்திரற்குங்கேள்விபட
கோட்டைக்குள்கேட்கிறது கொம்பனையாளிருப்பிடமோ
காதுற்றுக்கேட்டிருந்தார் கனத்தபுரவியின்மேல்

கலந்தாரிக்குச்சொக்கர் சொற்பனஞ்சாதித்தது.

மாலைமுடியானும் வருவதற்குமுன்பாக
சோலைமலையுடைய சொக்கருமேதுசொல்வார்
பஞ்சாங்கவேதியன்போல் பத்தினியாள்பக்கம்வந்து
மாதுநித்திரைசெய்கையிலே மறையவர்போலேவந்து
சொற்பனஞ்சாதித்தார் துன்னுங்கருங்குழற்கு
மங்கையரேஉன்னுடைய மணவாளன்வந்தான்காண்
வந்தான்காணென்றுசொல்லி மாயமாய்ப்போய்மறைந்தார்
வாசற்படிதனிலே மன்னனைநிற்கக்கண்டாளே
எதிட்டுப்பார்த்ததுபோல் இந்திரனார்சீர்வடிவை
அலர்தாமரைநிறமும் யார்பவளச்செவ்வாயும்

மார்பில்பதக்கமும் வச்சிரமணித்தாழ்வடமும்
காதில்மணியழகுங் கட்டழகன் ஓப்பனையும்
உத்தமர்கள்புத்திரன்றன் வுறுமாலைகட்டழகும்
ஒருவர்க்கொருவர் வுகந்துமிகப்பேசினதும்
உத்தாரமுமவுளரும் வுறன்முறைகட்டளையும்
மதுரையடையாளம் மாதுகையில்கொடுத்ததுவும்
மாணிக்கமெத்தையிலே மன்னவருஞ்சென்றேறி
வெற்றிலைகள்தின்று விரும்பிவிளையாடினதுந்
தக்கேகாலந்தின்று தழுவிவிளையாடினதும்
மாதுவிடையில்லாமல் மன்னனெழுந்திருந்து
போனதப்போல்கண்டு பொற்கொடியுங்கண்விழித்தாள்
சொற்பனங்கண்டதல்லால் சுந்திரரைக்கண்டதில்லை
என்-செம்மொழியுங்கட்டுஞ் சிறையிருக்கநீதியுண்டோ
வண்ணச்சிறையிருக்க வைத்தீர்மகாதேவா
இச்சிறைகாக்கவென்னை எவ்வரமோ வைத்தீரோ
மைத்துனரைத்தனிலே த்த மாதுபணந்தானுருகி
எத்தாலுஞ்செலுத்தாமே இந்திரரைநான்காண
கண்டகனவையெல்லாங் காரிழைமார்தன்னுடனே
தோழிமார்தன்னுடனே சொல்லவேணுமேயாமாகில்
எந்நாளுமிந்நிலையா எனபார்களென்றிழைமார்
தாமக்குருங்குழலாளுந் தன்மனதில்தானடக்கி
வேல்பொருதுங்கண்ணாளும் விசாரத்துடன்படுத்தாள்

கலந்தாரி தாதிமார்காற்றுஓடுக்கத்தால்

வேறொருமண்டபம்போய் படுத்தது.

ஆரணங்குதோழிமாராயிரம்பேரும்
அம்மானைபந்தாடுங்கழலாடி
உடனேபள்ளிகொண்டார் வுண்டானதாதியர்கள்
பாதியிரவும் பகினைந்நாழிகைமேல்
வாரியெழுந்திருந்து மங்கையர்களெல்லோரும்
ஒடுக்கத்தினாலே வுள்ளமெல்லாம்வியர்வைவிட்டு
அந்தவிடம்விட்டு அப்பாலேமண்டபத்தில்
சித்திரஞ்சேர்மண்டபத்தில் தேன்மொழிமார்போய்படுத்தார்
மண்டபக்கூடத்தில் மங்கையர்கள்போய்படுக்க
ஒண்டித்தனியாக ஒளிபிறந்தகண்ணாளும்
கண்டார்கருங்குழலுங் கலநதாரிநாயகியும்
வேல்பொருதுங்கண்ணாள் விசனமாய்ப்பள்ளிகொண்டாள்

புலந்திரன் கோட்டைக்குள் வருகின்றது.

அந்தச்சமயத்தில் அழகுபுலந்திரனும்

ஆகாயமார்க்கத்திலே ஐவர்மகன்புரவி
மேலாய்ப்பறந்து வேந்தனதன்புரவி
யாருமறியாமல் அங்கொருவர்காணாமல்
ஆறாற்றலகோட்டைக்குள்ளே அங்கொருவர்காணாமல்
தாதியர்களண்டையிலே தாவியிறங்கியது
எதிட்டுப்பார்த்திருந்தா ரிந்திரருமப்போது
ஒக்கபணிபூண்டு ஒருநிறமாய்ப்பட்டுடுத்தி
கூடப்பணிபூண்டு கொம்பனைமார்பட்டுடுத்தி
தேனமொழிமாரெல்லாஞ் சேரப்படிந்திருந்தார்
அதுகண்டுபுலந்திரனும் ஐயமனதிலெண்ணி
ஆறாயிரம்பேரில் ஆரென்றுநான்கண்டேன்
ஆரென்றுசற்றேநா னாய்ந்துபார்ப்பேனே
பூவணைமெத்தைகளில் பொற்கொடிமார்படுத்திருக்க
ஆரழகியாளே யாரென்றுநான்காண்பேன்
எதுக்குஇங்கேவந்தேன் என்றுயார்கட்டளையால்
மண்ணாழிகாலமெல்லாம் வையகத்தையாண்டாலும்
பெண்புத்தியிப்போ பிடரியிலேயென்பார்கள்
எதுக்குநம்மையிங்கே இசைந்துவரவிட்டாரோ
வினைறுபுலந்திரனும் நெடுமூச்சைதானெறிந்து
கட்டழகிநாயகியை கண்டதில்லையானாலும்
காணாமல்நாமும் கனமதுவைபோனக்கால்
வாளால்துணிப்பாளே மைந்தனென்றும்பாராளே
வேந்தர்பெருமானும் விசாரமிடும்போது

புலந்திரனை புறவியிறக்கிவிட்டது.

அப்போதுதன்புரவி அந்தவிடம்விட்டு
மாதுயிருக்குமந்த வாசற்படிமுன்னாலே
கொண்டுவந்துவிட்டது கொற்றவனார்தன்புரவி
தாழவிறக்கியே தானமர்திருமனை
மேல்பறந்துநின்றது வேந்தனவன்புரவி

புலந்திரன் கதவைத் திறந்தது.

தாள்பூட்டிருந்தொரு தையலதுபொற்கதவு
மந்திரவாள்தானெடுத்து வைத்தார்மணிக்கதவில்
தாளைத்திறந்தது தையலதுபொற்கதவு
மெள்ளநுழைந்தாராம் மெல்லிபடுக்கையிலே

புலந்திரன் பெண்சாதியைக்கண்டது.

வாசற்படிதனிலே வந்துநின்றுமன்னவனும்
வான்மேலேகையைவைத்து மன்னவரும்பார்த்தாரும்
எதிட்டுப்பார்த்தார் இந்திரரும்தேவியரை

வளர்ந்தெழுந்தமார்பும் மாதயிருஸ்தனமும்
திரண்டெழுந்தபூமுலைமேல் செந்தாமரையழகும்
கண்புருவம்ரெண்டுங் கருங்குருவிவாலதுபோல்
மூக்குத்திருவழகும் மூன்றாம்பிறையதுபோல்
நாக்குத்திருவழகும் நான்காம்பிறையதுபோல்
பல்வரிசைஆணிமுத்தும் பார்க்கமுடியாது
தாடையிருபுறமும் தங்கபலகையைப்போல்
இருதுடையின்றன்னழகும் இளவாழைதண்டதுபோல்
அழகுதிருமார்பில் ஆபரணஞ்சோதிமின்ன
வாருமல்பூண்டதொரு மாணிக்கம்மின்றிலங்க
சண்டிபுலந்திரனும் கண்கள்ரெண்டும்கொள்ளாமல்
இப்படிக்குயிர் ஏந்திழையும்வளர்ந்திருக்க
வைத்தனலன்சிறையில் மாபாவியானவனே
பள்ளியறைசோடிப்பை பார்த்தான்பலகாலும்
வண்டார்குழலாளும் வாழாப்பெண்ணாயிருக்க
மாதுக்குமாமன்மார் வைத்தவரிசைகளை
வரிட்டுதான்பார்த்தா ரிந்திரருமெத்தையும்
மெத்தையலங்கரித்து மேற்கட்டிதான்கட்டி
சுற்றியலங்கரித்து தோரணந்தான்கட்டி
நன்றாடிசல்லிட்டு கைக்கலங்கரித்து
நான்குபுறமும் நவரத்தினசால்றதி
சங்கிலைத்தசப்பிரமுஞ் சாதிலிங்கமாலைகளும்
சித்திரஞ்சேர்மண்டபமுஞ் சேரவலங்கரித்து
மல்லிகைமுல்லையுடன் வாய்த்தசிறுசெண்பகமும்
வெட்டிவேர்மருக்கொழுந்து இலைமல்லிபூச்சரமும்
ஆறுக்குத்தாறு அலைமாலைதூக்கிவைத்து
வந்துபரிமளங்கள் வாசனைகள்தூவிய
முத்தாலேதோரணங்கள் முறைமுறையாய்க்கட்டிருக்க
பந்தலிலேநல்ல பவளக்கால்தானிருக்க
சித்திரஞ்சேர்பூம்பட்டை சிறமடித்திட்டு
சாருமணைபோட்டு தழுவணையுந்தானபோட்டு
வண்ணகப்பூச்சொரிந்து ஓடமலர்கண்ணறட்டு
காம்பரிந்தவைங்கலப்பூ காரிழைக்குத்தான்சொரிந்து
மெல்லியம்பூபட்டு மேமேலையணைபோட்டு
சந்தனமுஞ்சாந்தும் தையலர்க்குத்தானுமிட்டு
புனுகுடனேகஸ்தூரி போதவேதான்வைத்து

மடித்தயிலைச்சருளும் வண்ணப்பலாக்காயும்
செம்பொன்றளிகை திருவணைக்குவைத்திருக்க
தங்கப்பதக்கம்வைத்து சந்தனக்கிண்ணம்வைத்து
கெண்டியிலேதண்ணீருங் கிளிமொழிக்குவைத்திருக்கும்
கற்பூரமுத்துச் காராவிநெய்வார்த்து
குத்துவிளக்குங் கொழுந்துபடத்தானேற்றி
இருபுறமுங்குத்துவிளக் கெரியவேயேந்திழைக்கு
பொம்மைபதுமைகளும் பொற்கொடியைசூழ்ந்திருக்க
அன்னநடையாட்கு அரும்பதுமைதானிருக்க
வெண்சாமரைவீச மெல்லியற்குபொம்மையெல்லாம்
கட்டழகிநாயகிக்கு கைவிளக்குகொண்டுநிற்க
ஆரமுலையாட்கு ஆலாத்திகொண்டுநிற்க
சொம்பிலேதண்ணீர்கள் சிலர்பொம்மைகொண்டுநிற்க
பொம்மைபதுமைகளை புலந்திரருந்தான்பார்த்து
வரும்போதுசொன்னாளே வையவளநாட்டியரும்
ஆராய்ந்துமெத்தையை அன்புடனேதான்பார்த்து
பார்த்திருந்தோமென்று பதறியெழுந்திருந்து
வாளுருவிகைப்பிடித்து மன்னர்பெருமானும்
மாணிக்கமெத்தையை மன்னவனுஞ்சுற்றிவந்தான்
பொம்மையைக்கண்டானே பின்பொருபெண்ணறியாள்
நீங்களோவென்றுசொல்ல நிற்றிலங்குபூமுடியான்
தானுஞ்சிரித்துமே தனஞ்செயன்கிட்டிவந்தான்
ஏறிட்டுப்பார்த்தாரே இந்திரருந்தேவியரை
கொண்டைமுடியழகும் கொம்பனையாள்சிரழகும்
பொருந்துமயிரழகும் பொன்பிறைச்சுட்டிகளும்
கட்டழகிநெற்றியிலே கஸ்தூரிபொட்டழகும்
இட்டதிருநீரும் இருகாதில்குழையழகும்
மாணிக்கமின்னவோ வைடூரியமின்ன
ஆணிப்பொன்னாலிழைத்த அன்னத்திருகொப்புகளும்
மாணிக்கவாளு மயிரின்கீழ்சோதிமின்ன
ஏஞ்சலிட்டகாதுக்கு ஏற்றபணிதிகளும்
காரைக்கழுத்தழகும் கட்டுவந்தன்னழகும்
பாரியரெட்டை பவளத்துத்தாழ்வடமும்
முன்கைமுதாரிகளும் முழுகடகமோதிரமும்
சந்திரகடகமுந் தாயித்திம்சோதிமின்ன
அஸ்தகடகமும் அழகானமோதிரமும்
பாடகத்தோடும் பளிசிலம்புசோதிமின்ன
காலாழிபீலிகளும் கட்டழகிசீர்வடிவும்

காலைத்தொடங்கியே கரியகுழல்வரைக்கும்
ஏறிட்டுப்பார்த்தாரே இந்திரருடதேவியரை
ஈஸ்வரனார்தேவியவள் ஈஸ்வரியுமீடலவே
மாயவனார்தேவியவள் மாதுயெதிரலவே
இந்திரனார்தேவியவள் இந்திராணியிடலவே
தாயக்குழலாளை தட்டியெழுப்பினால்
கூவியெழுந்திருப்பாள் கொம்பனைக்கென்னசொல்வேன்
ஓடிவருவாரே உண்டானகாவலர்கள்
வேந்தன்புலந்திரனார் விசாரமிட்டுநின்றாரே

## பெண்ணைப் புலந்திரன் எழுப்புதல்

எப்படியெழுப்பலாம் ஏந்திழையையிப்போது
சந்தனத்தைவாரி தையலர்மேல்விட்டெறிந்தான்
சில்லென்றுரைக்க தேன்மொழியாளப்போது
பல்லியெச்சிலிட்டதென்று படுத்தாளே தான்திரும்பி
அப்புறத்துக்கிப்புறமாய் அவள்திரும்பி தான்படுத்தாள்
அன்னநடைமாது அசையாமல்பள்ளிகொண்டாள்
போரஞ்சாமன்னர் புலந்திரருந்தான்பார்த்து
கண்டாரேயிந்த கட்டழகிசித்திரையை
சமானலாச்சுது நாயகியாள்சித்திரைக்கு
இன்னொருவரானால் இப்படியேசித்திரைகள்
சித்திரைசத்துருவு என்பதெல்லாங்கண்டோமே
சித்திராதேவியென்னும் நேரிழையேவேண்டினேனே
ஒருசாமப்பொழுதிலே உத்தமியையிங்குவந்தேன்
ஒருசாமமட்டாய் யிருந்துவிளையாடி
வெடியவொருசாமத்துக்கு மென்மையுடன்போகவேணும்
இரவும்பகலும் பிணிபிரியாமேந்திழையே
மாதினதுகட்டில்விட்டு மங்கையேநீபோய்வா
இன்றையராவிக்கு இடந்தாவேண்டுமென்றான்
சித்திராதேவியவள் நேரிழையாள்தான்பார்த்து
பூவணையைவிட்டுமே பொற்கொடியுந்தானிறங்கி
மங்கையர்கள்பள்ளிகொள்ளு மண்டபத்துக்குட்புகுந்தாள்
சித்திராதேவியவள் நேரிழையாள்போனபின்பு
போரஞ்சாமன்னர் புலந்திரவீரியரும்
தேவிமுகம்பார்த்து செம்பொன்முடியானும்
தேவேந்திரபகவான் திருநீற்றைத்தூவினனே
மந்திரவாளாலே மன்னவனுந்தட்டினனே

## கலந்தாரி புலந்திரரைக்கண்டது.

சற்றேதான்தட்டலுமே தாமக்குழலாளும்
முத்திரைமோதிரத்தை முடிமன்னர்கையிலிட்டு
மற்றுமடையாளம் மருமகனேகாட்டுமென்றார்
காட்டினுளடையாளம் கர்ணர்மனமகிழ
அடிசில்வரும்வேளை ஆக்குதுகணைவாறுவே
உண்டுபசியாறி உத்தமனேடவுமென்றார்

கர்ணர் புறப்பட்டுவருகிறது.

அங்குதேசாதிபதி ஆதிகர்ணனென்றசொல்வார்
மகாராஜராஜாக்கள் மன்னவர்கள் மற்றவரும்
சும்மாவிருப்பார்கள் தன்னுக்குருகுழலே
அங்கேஅடிசில் அமுதுண்டபலபண்டையபிர
எலம்குழலிபரே இருமெனறெழுந்திருந்தார்
வேந்தாதிகர்ணர் வெளியேபுறப்பட்டார்
வேட்டைபரிவாரம் வேந்தனுடசேனைகளும்
காட்டில்வாழ்மானுகளும் கானமாடுகளும்
யானைமுயலுகளும் அண்டைவடிபுகளும்
சிட்டுக்குருவிகளும் சிறுகுருவிபூச்சுகளும்
மன்னர்கொண்டிருக்கும் வல்லூறுகுருவிகளும்
சேரவந்துகூடிற்று சேனைகளதனையும்
வேட்டைப்புறம்பல வேந்தனுமதானேதி
ஒக்கப்புரவிவிட்டார் உண்டானசோலையெல்லாம்
சேனைமனுவுகளும் திரளும்பரிகலமும்
மகாசேனைதனுடனே மாவிலெம்முடியார்

அம்பலத்தில் இரகசியம்:

கூடிவருகையிலே கும்பல்சூழ்ந்துபேசுகிறார்
காரிகையாளமாது கலைதாரசெய்திதனை
தங்களுக்குள்ளேதான் தனித்தனியேபேசலுற்றார்

இரகசியங்கள் பிறந்தருளு மாளாக்களப்பலத்தில்
அந்தரகசியம் அம்பலத்தில் பெருகியதே
எழுதரிய அம்பலத்தில் ஏகாந்தமிருந்தினர்ந்து
தேசத்தரசுமன்னன் திரிலோகதிரனன் கேட்டு
தனக்குருக்களிடம் நானிருக்கமேகொக்கி
ஏ அடிபூதாதி இயலக்கரசிபவகன்
இரகசியங்கள் பெருகுது கைமேளதாதியரே
பாண்டவர்களை அருகு படைகட்டியாளாரே
ஆண்முகர் பாண்டவரின் இருவர் வெளிப்பட்டாரே
கட்டழகர் பாண்டவரின் காவலாள் வருகிறதோ
அருமைத் தம்பியர்கள் தனது செயர்களைவாராரோ
அம்பலத்து ரகசியங்கள் அறிந்துவாதாதியென்றாள்
மீசைக்காரிகளை வெளியூருந்திகைகொடுத்து
பழுத்திருப்பகுடைத்து பாவையிலைந்தாதி
மாளுகைப்பனத்தில் வந்தாளே தாதியவள்
உற்றிருந்துகேட்டிருள் ஒருவருஞ்சொல்லாகள்
கோளுதமாதவந்துக் குருக்களைப்பணிந்தாள்
அர்ப்பணிந்தாதி அறியமுறையுமென்றார்
அர்ப்பணியுமென்றான் அயாவையும்பணிந்தாள்
தேசத்தரசுமன்னன் திரிலோகதிரன் பணிந்தாள்
கன்னகருபயிது எனக்குரையச்சொல்லுமென்றார்
அம்பலமேலனாவ அடையாளகசியங்கள்
எழுதரிய அம்பலத்தில் ஏகாந்தமிருந்தது
பாண்டவர்களை அருகும் படைகட்டுவாராரே
ஆண்முகர் பஞ்சவர்கள் இருவர் வெளிப்பட்டாரே
காவலர்கள் பாண்டவரின் காவலாள் வருகிறதோ
அம்பலத்து ரகசியங்கள் அறிந்துவரச்சொன்னார்கள்
என்னக்கருமைமையா எனக்குரியச்சொல்லுமென்றாள்
அவ்வார்த்தைதனைக்கேட்டு அப்பக்குருக்களுந்தான்
சொல்லப்பயப்படுவோம் சந்திரசகியரே
பயப்படுவாருருமன்னே பார்வேந்தரானவருண்டு
அரசன்சொருவருக்கு அஞ்சிவெருவேந்தன்
சொல்லுமையோவென்று தோவையியமாகேட்டைகயிலே
வேறொருவர் அறிவேனோ வெல்பருவளக்கைளோ
ஆசாளுமகாயகியாள் அல்லிதிருமயாளோ
பொனளுமணியழகர் புலந்திரனோமேலப்பற்று
கரிகுழயாள் சொன்னான் சந்தரசிரபஞ்சகு
வண்டார்குழலாட்கு வைத்தாயர்தானறுசொன்
மதுரைதுணைமன்னவை வந்தருகசொன்னோமே
அதனுலேகாணுறுது அடர்ந்தாகசியமனை

தங்களிலேகூடித் தனிதனியே பேசுகிறார்
அவ்வார்த்தைகேட்டு அடியாள்கள் தாதியர்கள்
மீளதிரும்பிவந்தாள் வேல்புருவக்கண்ணாளும்
தேசத்தழகுமன்னன் துரியனையடபணிந்து
ஆசனத்தினகீழ படிபணிந்துதெண்டனிட்டான்
என்னசருமடி எனக்கறியச்சொல்லுமென்றான்
சொல்லப்பயப்படுவேன் சுந்தரப்பூமயிலே
பாவைபழகியதற்கு பாவமுவந்தகாரணமேன்
ஆசாரும்காபகியாள் அவள்திருமகனார்
அருச்சுனனார்ஈன்றெடுத்த அழகுபுலந்திரனும்
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரனார்தரியற்கு
ஆகாமசக்கை அருமசக்கையாரிழைக்கு
இட்டப்படுக்கையிலே எழுந்திருக்கத்தள்ளாது
உண்ணாள்குளியாளாம் ஒருநேரமுண்பாளாம்
பந்துபிடித்தறியாள் பள்ளாங்குழியாடாள்
சிந்துகளிகேளாமல் தேனார்குழலாளும்
வேல்புருவக்கண்ணாள் விளையாட்டம்மதியாள்
வண்டார்குழலாளும் மைந்தாய்த்தோன்றுதுகாண்
பெடைமலர்க்கண்ணாளுக்கு பிள்ளைபாய்த்தோன்றுதுகாண்
மதுரைவளநாட்டானை வந்ததுவுங்காணேமே
அதனாலேகாணுதையா யம்பலமாச்செய்கைகள்
தங்களிலேகூடி தனிதனியேபேசுகிறார்

துரியோதிரன் தாதிகளுக்குச்சொல்வது.

என்றுரைக்கத்தாதி இருசெவியில்தான்கேட்டு
தேசகசழகுமன்னன் துரியோதனபெருமான்
கண்டிருந்தாதிகளை சாவொழித்தததை
ஆற்றிலேதானமிதந்து அலைதொழுக்கிப்போகாமல்
தேர்ப்பாகனென்று சிலபேர்கள்சொல்லாமல்
பிள்ளைக்குப்பிள்ளையாய் பெரியபிள்ளையாகவேதான்
பொன்னுமகுடமது பிரபலமாய்த்தானகொடுத்து
மாற்றிவளர்த்தநகரை மகுடமுடிதரித்து
உதயமனைகாணும்படிபோல் வளரவைத்தேனே
செகத்திறபுதையாகும் சிறுமனைமடராரமே
உத்தமனும்மெந்தனுக்கு வுபகாரம்செய்தானே
தேர்ப்பாகனென்றுயிலே தெரியாமலேவைத்தேனே
சபைமுதனிகளைச் சாமர்த்தியமதிர்த்தே
அங்கவனைவெல்லாம் அனுப்பிவிடைகொடுத்து
சோலையிடைகொடுத்துச் செய்தே புயானுக்கு
சேகாதனத்தைவிட்டு திருக்குறுத்திறந்து
அருந்தடிகாணுதே அரண்மனைபோய்ப்புகுந்தார்

தாமக்கருங்குழலாள் தாதியர்கள்றம்பியரும்
காலுக்குநேர்கொண்டு காரிகைமார்வந்தார்கள்
சிங்காதனமிட்டார் தேனார்குழலார்கள்
இட்டதொருவாசனத்தில் இருந்தாளே தேர்வேந்தன்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாளெங்கேயென்றார்
நீலக்கருங்குழலாள் நிலமுத்துமண்டபத்தில
கிளிமொழியாள் தங்களுடன் கேளிக்கைபார்க்கிறாள்
மாதுயிருந்த மண்டபத்திற்போய்புகுந்து
நாலாசிகமதிர்னார் நூற்றொருவர்தேவிமாரு
மைத்துனனுக்காக வரவுகண்டமங்கையர்கள்

## பெருந்திருவாள் துரியோதனனைக்கண்டது.

சிங்காதனத்தைவிட்டுத் திசைக்குநின்றிறங்கி
மாதர்களெல்லோரும் மறைவாகப்போவார்கள்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த்து
கதிர்கொண்டுவந்து ஏலக்குழலாளும்
மானுக்கொண்டுவே மந்தமறப்போனீரோ
ஆடரவக்கொடியோனே அறிவழிந்துபோனீரோ
தம்பிமார்தேவியென்று சற்றுமறியாமல்
வாருமென்றுசொல்லி மணிக்கதவைத்தான்பிடித்து
பள்ளியறையில் பசுங்கிளிபுக்கொண்டேனென்று
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவுங்கூறுவாள்
கருமமுடியாதே தனிதலாக்காரியமேன்
கனைகருமபிது எனக்கறியச்சொல்லுமென்றான்
அடிகண்டாயோமாதே நீ காணசெய்தகாரியத்தை
அவ அத்தியிலேயிருந்து அல்லைதொழுகாமல்
தேர்ப்பாகனென்று இகழ்ந்தோர்களையாமல
பிள்ளைக்குப்பிள்ளையாய் பெரியபிள்ளையாகவே
மாற்றினார்தேனே மகுடமுடிதரித்து
உத்தமனென்னே உலகமெல்லாம்பெயருமிட்டு
என்றுமிவனுக்கு மேலநிறையுங்கூறுவாள்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவுங்கூறுவாள்
இக்காலமுருதேவ அருந்தரசாண்டோமே
அந்தரப்பூமுடியார் துரோகமானதுசெய்ததில்லை
என்னவினைசெய்தார் எனக்கறியச்சொல்லுமென்றாள்
அக்கமொழிகேட்டு அரசன்விளம்பலுற்றான்
அந்தரப்பூமுடியான் சொல்லுவான்வார்த்தையொன்று
கேளாய்மயிலே கிரீட்டிபயிறைநெடுத்த
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரவீரியனார்
சுணைத்தவாழ்மார்பன் அவருடையதேவியை

காரிழையாள்பாது கலந்தாரிளாயகத்தை
என்னுடையகோட்டையில் மின்கொடியையவையாமல்
அவனாச்சியரண்மனையில் ஆரணங்கையையாமல்
தன்னுடையகோவில்மேல தையலரையையாமல்
வேறேயொருகோட்டைக்கு வேறாகவிடுகட்டி
மாதினதுகோட்டைக்கு மறுபடியும்போனதில்லை
நாலாலகடுந்திரளார் நாற்றுகரு போனதில்லை
கற்கோட்டைமூதுதிரையாக காவலதுந்தன்னுடைதென்று
வாசலுக்குக்காவல வாள்வீரருந்துநிற்க
இரவும்பகலுமா யின்கொடியாள் தன்னுடனே
மருவியுறவாடியே மைந்தனைகெர்ப்பமாச்சுது
பிள்ளைகெர்ப்பமானாள் பெருந்திருவாள்காவலியும்
என்றுமிகவாசன் யோசிக்குச்சொல்லுகையில்

பெருந்திருவாள் சொல்லுகிறது

பேடையலர்க்கண்ணாள் பெருந்திருவுங்கூறுவாள்
சிவசிவாவென்று திருச்செவியில்கையைவைத்தாள்
அரகராவென்றுசொல்லி அரணங்குமுகத்துநிர்த்தாள்
நம்முடையகர்ணனை நாம்சொல்லக்காரணமேன்
இக்காணுருநதியுடன் இருந்துவாக்கண்மேடமே
சக்ரபபூமுடியான் தம்ராசமொன்றுஞ்செய்ததில்லை
அவனைதாயார்முலைகொடுத்தது தங்கையால்சீராட்டி
மாசனைமேலே வளர்க்கவைத்தார்தாயாரை
எரிட்டுப்பாராமே எனறுபாசமலனன்
நாடகசாலையிலும் நாயகமாராடிவந்தாள்
தங்கைதமக்கைபெண்டிர் தையலர்கனியாவரையும்
தன்பாதமேகண்ணாய்ப் பார்த்திருப்பான் புகழ்வீரன்
கர்ணனைச்சொல்லுகிற காரியமானத்தையும்
அங்கவளநாட்டார் அவர்முன்னேசொன்னதுக்கால்
ஆயுதத்தால்தனதுயிரை அழித்துக்கொள்வாரானதுநகர்
மெலவெயருந்தானுமாய் சாரித்துவருகிறாம்
எனறுரனையென்று இளங்கொடியாள்மயலவிட்டாள்

கர்ணர் வருகிறது.

காசிலிவர்ணர் கர்ணரவர்வாராராம்
ஆதிதன்புத்திரனர் அங்கவளநாட்டமுரன்
செங்கைகயிமேல்வந்த சேர்ந்தபிரதாபன
வைகைப்பெருகிவர வந்தவகாசகர்ணரவர்
வெள்ளிதடிக்காரர் வீரியமாய்சூழ்ந்துவர
தளருமபடைவீரர் துடிபபடையுஞ்சூழ்ந்துவர
கண்டாமோமாமேதநீ காணாவங்ககாரியதனை

சர்க்கரைப்பேணும் நற்கவரியின் றாக
கோணக்கொம்பூதுவாரகள் கொற்றவனார்வீரியற்கு
வைதிஞர்சிலையம் வுலகேழுந்தானதிர
விருதுக்குமாலை மெல்லியருகேட்டிருந்தாள்
வந்துகுறுகினார் மாளிகையம்பலத்தில்
ஏதிட்டுப்பார்த்தார்காண் இராசாவினம்பலத்தில்
காண்வந்துகொலுக்கலைப்பேன நாடோறுமம்பலத்தில்
இன்றுகொலுகலந்த தேதோகருமமிது
மாளிகையம்பலத்தில் வந்துகுறுகினார்
வெட்டைபரிசையும் வேந்தனதுசேனைகளும்
சேரவர்தருக்கூடிற்று சேனைகளத்தனையும்
அங்கவரோடொன்றும் அதிசூரர்வீரியனும்
பக்கிட்டுக்கொண்டார்கள் படைமன்னர்சேனையெல்லாம்
சமையமுதலிகளைச் சாமார்த்தியமந்திரியை
அங்கவரையெல்லாம் அனுப்பிவிடைகொடுத்து
பாடும்புலவருக்கும் பட்டருக்குஞ்சித்தருக்கும்
தேசமெல்லாந்தாரணவன் தியாகங்கள்தானங்கொடுத்து
அங்கவரையெல்லா மனுப்பிவிடைகொடுத்து
சிங்காதனத்தைவிட்டுத் திருமுகநித்திறங்கி
ஆலாத்திக்கொண்டுவந்தார் ஐயாயிரந்தாதி
முத்தாலேயாலாத்தி முன்னாலேசுத்திவிட்டார்
பவளத்தாலாலத்தி பத்துநூறுயிரம்பேர்
புறவிட்டுத்தானிறங்கி பொற்குமரர்தானடந்தார்
இக்கத்துரைகளுடன் வுடனோனத்தாழுநமாய்
கைக்கட்டித்தானடந்தார் காவலர்களெல்லோரும்
திருமுடியான் தலைகட்டிற்போய்புகுந்தான்
தாமக்குழலார்கள் தாதிமாரெதிரசனமு
காலுக்குநீர்வார்த்தார் மாலையர்வீரியற்கு
பாளையமுகியருகம் பட்டாலடிதுவட்டி
ஆசனம்போட்டார்கள் அங்கிருக்குந்தாதியர்கள்
இட்டதோராசனத்தில் ஏறமனமனனார்
பெண்டாளைக்கண்ணுள் பெருந்திருவாளெங்கேயென்றார்
ஏகாந்தமேடையிருந் திருவருப்பள்ளியறை
காணவார்த்திலையூ நாயகம்மசொல்லுமென்றார்
பெருந்திருவாளனைடையிலே பொற்கொடியுமோடிவந்து
ஆசனத்திலேற்புயடிவணங்கிதெண்டனிட்டாள்
வசுதுபணிக்குயலை வாழ்சதியகமனவனும்
கருணர்வந்தாரென்று கட்டழகசொல்லுகையில்
வாச்சொல்லுமெனறழகதசன பாதுபெருந்திருவாள்
தாதியவளோடிவந்து கையலவரச்சொன்னாள்காண்
அவ்வசனங்கேட்டு ஆணமகர்வுள்நுழைந்தார்।

## கர்ணர் பெருந்திருவாளைக்கண்டது.

பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள் தன்னடிக்கே
ஆனைத்தலைகீழ அடிவணங்கித் தெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை வாழ்கவென்றங்கவரை
வாழ்வீர்வளருவீர் மண்ணூழிகாலமட்டும்
சிரம்பீர்நிலைதரிப்பீர் சீராசையாண்டிடுவீர்
நீவேயரசாள்வீர் நீடூழிகாலமட்டும்
இருவர்களாக இருந்தரசாளுவீர்
ஏறிட்டுப்பார்த்தார்கள் இவருடைய திருமேனி
வாடியிருப்பதேன் மன்னருடைய திருமுகங்கள்
விடாய்ப்பட்டிருக்குது வேந்தன் திருமேனி
கட்டிதயிருகளும் காவடியிலன்னமும்
பாலைக்கழுநீர்மோரும் பரிவிட்டே பார்த்தேவந்தா
விடாய்த்துமண்டபத்தில் வேந்தனைவாவிலேயே
எந்தவழிவந்தீர் என்றாள் பெருந்திருவாள்
ஆச்சிரமைந்த அவ்வழியில்வந்ததிலே
மற்றமொருவழியை வந்தெனுரைச்சியமே
மாலைமுடியானே நீவருவதற்குமுன்பாக
ஆரப்பசிக்குதென்று அரவக்கொடியாளும்
ஆனைதவாழ்மார்பா அடிசலுக்குத்தானைவந்தார்
மாலைமுடியார்க்கு நீர்வந்தசெய்தியொடு
தாம்வடமாய்நின்றார்கள் தனஞ்செயர்களிருவருமாய்
மனுசனொரடியே மன்னனொருவருமாய்
ஆனைகமாய்நீங்கள் அசனக்குவாருமென்றார்
சிங்காதனத்தைவிட்டுத் திகழக்குதித்திறங்கி
சந்தரப்பூமுடியார் தோழனையுங்கைகோர்த்து
மஞ்சநீர்சாலையிலே மன்னவரும்பேசப்புகுந்தார்

## துரியோதனனுங் கர்னனுங்கூடினது.

ஆனைபணிகழட்டி ஆனந்தவாழ்மார்பன்
சேனையாப்பணிதிகளை நாயகமார்தாங்கழட்டி
மாலைமுடியாரும் மஞ்சனநீராடி
சாந்துயில்சேர்ந்து இழைமேற்சாத்திட்டுத்தி
துவட்டகொண்டு துவட்டியங்கந்தார்கள்
ஆனைபணிபூட்டி ஆனைதவாழ்மார்பா
தேனலைலோதாரா திருநீறுகாப்பணிந்து
செந்தூரப்பொட்டுமிட்டு சேவடியடிபணிந்து
பூசைபண்ணுமண்டபத்தில் போனாரிருவருமாய்
நித்தியபடிதானும் நிறையவேதானங்கொடுத்து
செம்பொன்முடியாரும் செபதபத்தானமுடித்து
சந்தரப்பூமுடியான் தோழனையுங்கைகோர்த்து

அமுதுண்ணு மண்டபத்தை அலங்கிட்டு நீர்தெளித்து
காலுமலங்கரித்து எத்திசையும் நீர்தெளித்து
பூமியெல்லாமொத்ததொரு பொற்றடுக்குதான்போட்டார்
பொற்றடுக்குமேலே புஷ்பமிராவிற்றிருந்தார்
இடக்குமுக்காலிவைத்து செம்பொலமணிகளைவைத்தாள்
பொறித்தபொரிக்கறியும் பொன்போலசிறுபருப்பும்
கட்டிப்படைத்தாள் கொம்பேரிளையாளும்
அந்தஅடிசில் அமுதுண்டபிற்பாடு
அத்தளிகையுண்டபின்பு மருதளிகையுண்டார்கள்
கைவலம்பிச்சிகொண்டு கனகமணிமண்டபத்தில்
தாமக்கருங்குழலாள் தாதியருமப்பியரும்
வாய்த்ததம்பிலக்கூறும் வாழைப்பழக்காயும்
வாங்கியமுதுசெய்து மன்னரிருவருமாய்
அர்த்தமொத்தச்சாமம் ஆச்சுதானக்கோரம்
ஆபரணக்காரனுண்டு அழகியபட்டுடுத்தி
சந்தப்பூமாலையும் தேயுமிலையுமைகொத்தார்
ஆலவட்டம்போட்டார் அரண்மனையில்தானேபோனார்
சேஷமுண்டானதல்லோ எங்கேதம்பிருந்தா
வைத்திருக்கண்டான் மாலுமுடையானை
காசினியாளர் கனவில்பெருமானை
இருபிறுமென்று இழிவடைக்கையார்த்தி
இவகாரனைத்தில் சேர்ந்திருந்தார்கள்
வாழியிருந்தார்கள் வாழ்விசைமிகராதனத்தில்

துரியோதிரன் கர்ணனைக்கேட்கிறது.

தேசத்தரசாளும்மன்னன் துரியோதனப்பெருமான்
கர்ணனைத்தான்பார்த்து கடைக்கண்டுரைப்பான்
மானுக்கரசுவேந்தன் மன்னன்முகம்பார்த்து
சீர்பெருமை துற்றிலே போற்றமறப்போகாமல்
சேர்த்திலாவிற்காக்க இறைமனைப்பாவித்தே
தேர்பாகனென்னை நீ தெரிந்துசொல்லாதே
பின்னைக்குப்பின்னோயாய் பெரியபின்னோராளுன்னை
மாற்றிவளர்த்தென்னை மகுடமுகச்சூட்டியுன்னை
மன்னவனென்றுபெயருமிட்டு மன்னனாய்வைத்தேனே
உத்தமனுக்குச்செய்து உபகாரமறந்தே
உபகாரமெத்தச்செய்தாய் உற்றதொருதேர்ப்பாகா
என்றுயிவனுக்கு எடுத்துநீ கேட்டனர்
காசினியாளர் கர்ணனுக்கேசொல்வார்
என்னைப்பேழையிலவைத்து பெருந்தனில்விட்டதுவும்
தேர்ப்பாகன்றனைச்சேர்ந்து சிசுக்கியுமதப்பட்டதுவும்
என்னைமாற்றிவளர்த்து மன்னனாய்வைத்ததுவும்

அறியாதோவிக்காட்டு அம்பலத்துச்சேனையெல்லாம்
இதும்பேச்சுசொல்லவோ இந்தச்சபைநடுவே
சொல்லவேவேணுமோ சுந்தரப்பூமுடியார்
இக்காலுறுதியா யிருந்தோ மரசாண்டோம்
சுந்தரப்பூமுடியார் துரோகமொன்றுஞ்செய்ததில்லை
இக்காலுமில்லாதிப்போ தென்னவினைசெய்தேனையா
சுந்தரமேசொல்லாமல் சொன்னதுதெரிவதுண்டோ
தீயினிற்சுட்டபுண்ணு சீக்கிரத்திலாறிவிடும்
நாவினாற்சுட்டபுண்ணு நாயகமேயாறாது
இப்போ-என்னவினைசெய்தேன் எனக்குரியச்சொல்லும்
தேசத்தழகுமன்னன் துரியோதனன்கேட்டு
அரசாளுங்காவலியாள் அல்லித்திருமகனார்
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரன்தேவியரை
காரிழையாள்மாது கலந்தாரிநாயகத்தை
அவள்-ஆச்சிஅரண்மனையில் ஆரணங்கைவையாமல்
என்னுடையகோட்டையிலே இளங்கொடியைவையாமல்
வேறேயொருகோட்டைகட்டி வீறுவீடுகட்டி
அறைமறித்துக்கட்டி ஆரணங்குதானகொடியை
மன்னாதுகோட்டைக்கு மறுபடியும்போனதில்லை
நாலால்கருந்திரளார் நாற்றுரும்போனதில்லை
கற்கோட்டைமுத்திரையுங் காவலையுமுறுதென்று
வாசலுக்குக்காவலாயுன் மைந்தனைக்காவல்வைத்து
இரவும்பகலுமா யிளங்கொடியாள் தன்னுடனே
மருவிநீயுறவாடி மைந்தனுண்டாக்கிவைத்தாய்
என்றுமன்னன்தானுரைக்க இதைக்கேட்டுக்கர்ணனவர்
அரகராவென்றுசொல்லி அரசனுமுகஞ்சிவந்து
சிவசிவாவென்று திருச்செவியிற்கைவைத்து
காசினிவர்ணர் கர்ணனுங்கண்சிவந்து
சீறியேகண்சிவந்து செங்கோன்முகந்ததும்பி
உறக்கம்செய்பொழுது வந்திரப்போர்க்கண்சிவந்து
உன்சோற்றையுண்டதிலும் வன்னாசைபண்டதுவும்
பிஞ்சுமணிமுடியார் புலைபடவேண்டுமென்று
வேண்டேனினிசென்மம் வேறுநினைப்பதில்லை
மாலைமுடிகத்திடுவேன் வைகுந்தஞ்சேர்ந்திடுவேன்
செத்துமடிந்திடுவேன் சிவபாதஞ்சேர்ந்திடுவேன்
மாளுகிறேனென்றுசொல்லி வாளுருவிப்பிடித்தான்
கொற்றவர்கள்கோமான் குருவிவாளைவாங்கி
அம்பலத்துச்சேனை அடைக்கக்கொண்டுபோனது
சேனைகளைத்தந்தையுடு சேரவந்துபாண்டவர்கள்
துணைத்தமையன் அரும்பாவாளாவித்தனர்

துரியோதனன் கர்னனுக்கு சமாதானஞ்சொல்வது.

தேசத்தழகன் திரியோதிரன்பார்த்து
கண்டோமேயின்று கர்னருடகோபத்தை
இந்நாளுங்கண்டதில்லை இவருடையகோபத்தை
ஆருக்குமஞ்சலொட்டான் அங்கவளகட்டான்
என்று சிங்காதனத்தைவிட்டு திகழக்குதித்திறங்கி
பின்னுகவக்கு பெருமானைச்சேர்த்தணைத்தான்
இணையிலாவென்தோழா என்னுயிர்க்காவலனே
காலங்களிரேழும் கண்டுணரவைத்தவனே
என்தன்னைப்புரக்கும் தர்மப்பெருமானே
என்னைக்கண்ணென்னவைத்த கர்னர்பெருமானே
தனியாய்த்தனிவாய் தார்வேந்தாவுன்கோபம்
கைபதைக்கவாய்துடிக்க கண்ணைத்துடைத்துக்கொண்டார்
கண்டார்கணையாழி கட்டழகன்கைதனில்தான்

கர்னர்புலந்திரன்கணையாழிகாட்டினது.

இக்காட்டுவேலையல்ல இந்தக்கணையாழி
மதுரையில்வேல்கண்மாமன்னரசுகோமானே
ஆருடைய ஆழியிது அடையாளஞ்சொல்லுமென்றார்
ஆழியெடுத்து அலதாரன்வாசித்தான்
அரசாளுங்காவியாள் அல்லிதிருமகனார்
உண்மைக்காபுலந்திரனார் வந்ததுகானறியேன்
அறியாமல்சொன்னேனே அரசேபொருத்தருள்வீர்
என்றுரைத்தவிலைச்சுருளும் வர்னப்பழக்காயும்
காவலர்வீரியர்க்கு கைநிறையஅள்ளியிட்டார்
என்றனேகரும் இலைபமிர்தங்கின்னுமென்றான்
மன்னுடிவாசங்கள் மன்னர்கையில்தான்கொடுத்தான்
வாசங்கள்சாப்பிட்டு மன்னன்தனித்திருந்தான்
தேசத்தழகுமன்னன் திரியோதனன்கூறுவான்
பருவமதவானை பஞ்சவர்களைவரையும்
காடுகாமும்நல்லதொருராச்சியமும்
அடங்கலும்தோற்று அனைவரும்போனாரே
முதிரினைகயிடப்போரீர் முடிமன்னர்கோவிலெல்லாம்
அன்றுபெடுத்துவந்த ஆழியிதுகாணும்
அடையாளமல்லவென்று அலைதான்கூறினன்
இப்பெரியவடையாள மெடுத்துவந்துகாட்டுமென்று
எங்கேயடையாளம் எடுத்துவந்துகாட்டுமென்றான்
உத்தமனார்கர்னர் வழியளைத்தான்பார்த்து
தன்னுங்கருங்குழலாள் துற்சடையாளரண்மனையில்
மதுரையடையாளம் மாணிக்கப்பேழையிலே
இருக்கிறதென்றுசொல்லி எடுத்தோடிவாருமென்றான்

உத்தமர்கள்வீரியரும் வைரியப்பேர்தான்கேட்டு
தேனுறுங்கருங்குழலாள் ஆற்சடையாள்தானிருக்கும்
மாதிருக்குமண்டபத்தை வந்துமிகத்தெண்டனிட்டான்
தேனுறுங்கருங்குழலாள் ஆற்சடையாள்தான்பார்த்து
நீர்யாரவலியரென்று அறியவுரையுமென்றாள்
யார்பணியுமல்ல அடியேனுமன்பணிதான
காசிலிவர்னர் கர்னர்பணிதானுமென்றான்
ஆணைக்கேயுமுடைய அண்ணர்பணிதானுமென்றான்
மதுரைப்புலந்திரரும் வந்ததுமில்லையென்று
மாதுமணவாளர் வந்தபடியில்லையென்று
காசிலிவர்னர் கர்னர்மோசந்தேகமாய்
கூறினார்கன்னரே கொடுகாங்கொண்டவரும்
மதுரையடையாளம் மாணிக்கப்பேழையிலே
இருக்குதென்றுசொல்லி எடுத்துவரச்சொன்னார்கன்
எங்கோவடையாளம் எடுத்துவந்துதாருமென்றான்
தேனுறுங்கருங்குழலாள் ஆற்சடையுந்தான்கேட்டு
அவர்ஆர்சொல்லுங்கேளார் அரவக்கொடிவேந்தன்
இழந்தோமோமும் இளங்கொடியைபின்றேடே
ஆரமுலையாளும் அழகியகண்முத்துதிர்த்தாள்
மாணிக்கப்பேழையிலே மாதருங்கைகொடுத்தார்
வாங்கிதான்கையைபதத்தி மாலைமுடியானும்
கொண்டுவந்துமுன்னேவைத்தார் கொற்றவனார்தானவனும்
காசிலிவர்னர் கர்னர்திருவடிக்கு
கொண்டுவந்துவைத்து கொற்றவனுந்தெண்டனிட
மாணிக்கப்பேழையை மன்னவனுந்தான்திறந்து
ஆணிப்பொன்னாலே அழுந்தக்குப்பியிட்டு
ஆயிரம்பொன்பெற்ற அபரஞ்சிவர்ணசரம்
மன்னவனுங்கைகொடுத்தான் மாணிக்கமோதிரத்தை
பார்வேந்தன்கைகொடுக்க பற்றுக்கொண்டோனும்
ஐவரிடத்திலவள் அரிவைவனம்போனாளே
முத்தரிகைபோடப்போகீர் முடிமன்னாவிட்டனைத்தும்
அன்றுயெடுத்துவந்த அடையாளபேழையிது
அடையாளமல்லவென்று அரசனுமேதுசொல்வான்
அந்தபடிச்சொன்னாலும் அரிவையரைவைப்பதில்லை
தேனார்குழலியரை தீவனர்தந்தள்ளிவிடும்
அசுபதசாதிபதி அதிகருணைகூறுகிறார்
ஆரமுலையாளும் ஆளனுப்பப்போகவிட்டு
வண்டார்குழலாளை மதுவோலைவந்தபின்பு
தேனார்குழலாளைத் தீவனர்தந்ததள்ளிடுவோம்
தேசத்தரசுமன்னன் திரிபோதனன்கேட்டு
அந்தப்படிச்சொன்னாலும் இளங்கொடியைவைப்பதில்லை

அரியன்கோபித்து அக்கினியைவளர்த்தச்சொன்னது.

செம்பொன்மணிபோரைத் தீக்குழிவெட்டுமென்றார்
அக்கினியில்தள்ளிவிட்டு அரிவையிளமாதரசை
அத்தினகர்பட்டணத்தை ஆளாமல்விடுவதில்லை
வீண்வார்த்தைபேசாதே வேணமட்டுஞ்சொன்னாலும்
இளங்கொடியைவைப்பதில்லை என்னதான்சொன்னாலும்
தேனார்குழலாளைத் தீவார்த்துதள்ளிடுவேன்
உத்தமர்கள்வீரியனும் வழியைத்தானழைத்து
சித்திலக்குழுமுடியாள் செமித்தபேரெல்லோரும்
அந்தண்டபேரையும் அழைத்தோடிவாருமென்றான்
அத்தனைபேர்களும் அம்பலத்தில்வந்தார்கள்
எங்களையழைத்தது ஏதுவகைசொல்லுமென்றார்
அல்லிமருமகளை அக்கினியிற்றள்ளுதற்கு
அதனாலழைத்தேனென்று அரசனுக்குதெண்டனிட
அத்தனைபேருமாய் அம்பலத்தில்வந்துநின்று
எக்கையாதீக்குழிகள் காம்பீடத்தில்வெட்டுவது
அல்லிமருமகளை அக்கினியிலதாளறு
தேனார்குழலாளைத் தீயெரிக்கக்கண்பார்க்க
என-ஆசாரவாசல்முன்னே அடையவெட்டுமென்றான்
வெட்டிக்குழிபறித்தார் வெகுதாகதாழிகையில்
தீக்குழிகளைச்சுசென்று தெண்டனிட்டாருழியர்கள்
தீயைவளர்த்துமென்றான் சிரியோதிரப்பெருமான்
சித்திலக்குழுமுடியார் செமித்தவ்வானர்தான்கேட்டு
காவலர்வீரியர்கள் காட்டகத்தில்வந்துநின்று
பட்டிறம்பார்த்து பரிவுடனேயெல்லோரும்
ஆச்சாவுந்தேக்கும் அழகாயப்பிளந்தடுக்கி
சந்தணத்தக்குஞ் சமுராய்ப்பிளந்திடுக்கி
மூட்டினார்தீயை முடிமன்னர்சொற்படிக்கு
வானமட்டுந்தீயும் வளர்ந்துதம்பமாம
ஆகாயமட்டும் அக்கினிகள்தான்வளர்ந்து
தீக்குழிவளர்ந்ததென்று தெண்டனிட்டார்சேவகரும்
தேசத்தழகுமன்னன் சிரியோதிரன்கேட்டு
காசிவிவர்ணர் கர்ணர்முகம்நோக்கி
அல்லிமருமகளை அக்கினியிற்றள்ளுதற்கு
அந்தப்பொழுதிலே அக்கினியிற்றள்ளுதற்கு
ஆரமுலையாளை அழைத்தோடிவாருமென்றான்

அக்கினியில்கர்ணர்விழப்போனது.

காசிவிவர்ணர் கர்ணரதுகேட்டு
என்மேல்சந்தேகம் எழில்வீரகண்டாயோ

அக்கினியில்காந்துமிப்போ ஜயாகுதிக்கிறேன்
என்று-வரிந்துகட்டிப்படச்சைவடம் மன்னாதிகர்ணர்
திக்குழியைச்சுற்றிவந்தான் தென்னன்பெருமாளும்
அம்பலத்துசேனையெல்லாம் அடாக்கொளுகலைத்து
கட்டிப்பிடித்தார்கள் கர்ணர்பெருமானை
கொற்றவனுர்வீரியனும் கோபம்தணிகபின்பு
காசிலிவர்னர் கர்ணர்திருமகனுர்
இந்நாடாளுகின்ற செல்வப்பெருமானை
அல்லிப்பெருமகளை அக்கினியிற்றள்ளுதற்கு
அந்திப்பொழுதிலே அக்கினியிற்றள்ளுதற்கு
ஆரணங்கையிப்போ அழைத்துவரச்சொல்லுமென்றார்

தூதர்கள் கர்ணர்புத்திரனுக்குச் சொல்வது.

உத்தமர்கள்வீரியனும் ஊழியப்பேர்தான்கேட்டு
இந்நாடாளுகின்ற செல்வப்பெருமானே
அவர்ஆசனத்தின்கீழே யடிவணங்கித்தெண்டனிட்டார்
நீர்பார்பணிந்தா அரியவுரையுமென்றான்
தேசத்தழகனவன் திரியோதனன்பணிதான்
வேறொன்றுமில்லையையா வேந்தர்பெருமானே
உங்கள்ஐயர்சந்தேகமாய் அரவக்கொடிவேந்தன்
கூறினார்கண்டீரோ கொற்றம்பூமன்னவனே
அல்லிமருமகளை அக்கினியிற்றள்ளுதற்கு
வானதனாவுந்தியும் வளர்ந்ததுமன்னவனே
காரிழையாள்மாது கலந்தாரிநாயகத்தை
அக்கினியிற்றள்ள அழைத்துவரச்சொன்னார்காண்

கர்ணர்புத்திரன் சொல்வது.

ஊழியர்தானுரைக்க வுத்தமனுந்தான்கேட்டு
அல்லிமருமகளை அக்கினியிற்றள்ளிவிட்டு
ஆள்வாரொருவனிருந்து அத்திநகர்பட்டணத்தை
அறியாரோதானும அல்லியுடன்சவகத்தை
மதுரைதுரைச்சியரை மணமாலைசூட்டவென்று
காசொன்றும்நாத காளையந்த அருச்சுனனார்
முந்திவந்து முடிமன்னாமாலையிட்டார்
மதுராபுரியாளை மணமாலைதான்சூட்டி
தேவேந்திரலோகம் சென்றுமே அருச்சுனனார்
அப்படியல்லவோ ஐவருடையசவகங்கள்
ஏழாமவயதினிலே மதுராதவன்தன்முகனை
கட்டிமயிர்பிடித்து கடுத்துவுடல்பிளந்து
கோமானுதிரம் குடித்துவைரமேயா
மன்னனுடல்புகுந்து மணமாலைபூண்டுகொண்டான்
இவனை-அக்கினியில்தள்ளி அரசாளப்போகிறீரோ

அன்று-பத்தினியைக்கொண்டுவந்து பாரச்சபைநடுவே
மாதினைத்துகிலாடை மானகன் தானுரிந்தான்
தக்கபுகழுடைய தருமர்பொறுத்திருந்தார்
அன்றுபொறுத்ததுபோல் ஐவரின்றுபொறுப்பாரோ
நாலாள்கருந்திரளார் நூற்றுருவர்சேனையெல்லாம்
சோரக்குருவருப்பார் சேனைகளத்தனையும்
அத்திபுரபட்டணத்தை அடங்கலையுந்தானிடித்து
பருத்தியும் ஆமணக்கும் பஞ்சவர்களிறைத்திடுவார்
பொருளும்பொருமென்று பொற்கருணர்புத்திரரும்

கர்ணர்புத்திரன் கலந்தாரியைக்கண்டது.

ஆனைக்குச்சேதி அறிந்தானவந்தேனென்று
உத்தமன்விரியனும் உட்கட்டைபோய்ப்புகுந்தான்
தாமக்கருங்குழலாள தாதியெதிர்கண்டு
ஆசனமேபோட்டார்கள் அங்கிருக்குந்தாதியர்கள்
வந்துவிளப்பாரி மன்னன்திருமுகத்தை
தாதியர்கள்பார்த்திருந்து தாம்வந்தனேதுசொல்வான்
மாலைக்குழலாரே உங்கள் மதனியரைநீரழையும்
ஆனைக்குயப்போது அழைத்தோடிவாருமென்றார்
தன்கைக்கயிறி தானெருத்தினைகொடுத்து
மங்கையருமபள்ளிகொண்ட மண்டபம்போய்ப்புகுந்து
காரிழையாள்மாது கலந்தாரிதாயகமே
அத்திபுரமகருக் காதினத்துக்குடையவளே
தான்பிறந்தநாட்டுக்கு தாமெயதிபதியாய்
முத்துருக்கெல்லாம் முழுதுமுடையவளே
மங்கையரேயும்முடைய மைத்துனனார்வந்துகாண்
வாசலிவர்ணா காணர் திருமகனார்
மாலைமுடியழகர் மண்டபத்திலவந்திராங்க
அழைத்துவரச்சொன்னு மனப்பாலமைத்துனனார்
சொல்லுதற்குமுன்னே தோகையெழுந்திருந்து
பூவணையைவிட்டு பூங்கிளியுந்தானிறங்கி
தாரார்குழலுடையாள தாதிகள்தானுன்றி
காரிழையாள்தாதியர்கள் கைலாகுதானகொடுக்க
மெத்தைமேலதானடந்து மெல்புருவக்கண்ணாளும்
மைத்துனனாலந்திருக்கும் மண்டபமம்போய்ப்புகுந்தாள்
மாலைமுடியானும் மதனிவரவுகண்டு
சிங்காதனத்தைவிட்டு திகழக்குதித்திறங்கி
மதனியார்பாத மலர்தூவிதண்டனிட்டான்
வந்துபணிந்தவனை வாழ்த்தியமங்கையரும்
தனணியர்கள்மாலை அடுக்குமணமபெருவீர்

வாழ்த்தியேயென்று மனங்குளிரவாழ்த்தினான்
இட்டதோராசனத்தில் ஏறுமன்னவனிருந்தான்

கலந்தார சொல்வது.

அப்போ கார்குழலாள் மாது கலந்தாரியதுரைப்பாள்
மைத்துனரு நீருமிங்கே வந்ததுமென்ன
மாங்குழலியே மகளிபேரீர் கேளீர்
மதுரைப்பெருமாளும் வந்ததுமில்லையென்று
நீபவனர்த்தினர் தேசத்துமன்னவன்
வானமட்டெழுந்திங்கள் வளர்ந்ததாரணக்கோம்
ஆனைக்குழியகலம் அக்கினியும்வளருது
அக்கினிக்கதன்னவும் அழைத்துச்சொன்னாரே
ஆதலால்குவத்தேன் அவனக்கினிமகளியென்றான்
அவ்வசனங்கேட்டு அல்லிமருமகளும்
கட்டார்குழலாள் கலந்தாரியதுசொல்வாள்
சீர்பெறிபதத்த செங்கைப்போல்முத்தரும்பி
அல்லிமருமகளை அக்கினிக்கதன்விட்டு
ஆள்வாரெனின்இருந்து அத்திரப்பட்டணத்தை
அற்பனோடாளும் ஆளுத்தசனத்தை
ஆளுமதுமன்னவன் வருச்சவாசதுரை
மதுரைதுரைச்சியை மணமாலையிட்டுவென்று
பூமியைவலமாக வருகின்றவேளையில்
காசோனமெம்கோர்த்த காலயந்தவருக்கனார்
தாலிபுமேசோடே தாய்வத்தாக்கோம்
மாதுகருங்குழலை மன்னவன்மாலையிட்டு
தேவேந்திரன்பட்டம் தேர்வைசயாண்டாரே
அப்படிபலமே ஆவார்சேவகர்கள்
வேதகன்பின்பலமே கபடர்கன்றாற்றியக்கும்
ஏதுக்குதன்னுக்குறா எனப்பெருந்தேவில்
என்னைவனதல்ல இவனபாருகாறு
பார்காறுமென்னை அக்கினிக்கரன்தானவன்
காவலாளன்பாண்டவர்கள் காக்கிறோம்போனவர்கள்
என்-மாமன்மாரெல்லோரும் வனவாசம்போனாரே
என்-மாமிகுழலிவிரித்து வனவாசம்போனாளே
நான்-ஏற்றகுலவாசகன் இளையமாய்தானடந்தால்
அவர்-தனனைப்பாரோ ஆனாதோமணிதன
எனக்குத்திரதமெர்றுபடைக்கதை போரொருபூச்சாந்தி
போர்தன்வாருபட்டிருந்தது பொருதசீனைகப்பணிபூட்டி
மார்பிணையனமேலே வளர்ந்தாலோமன்னவனார்
நான்-ஏற்றுனைசசவ இருந்தபேயமானுல
அவர்களைப்பார்த்து அதிகாலவேளையிலே
அதையிலைதிருந்தநிஜல ஆனந்தமாழ்மாரப

வாசலுக்குக்காவலாய் மைத்துனரேநீரிருந்தீர்
அண்ணேயிவன்கள்ள யிவனுலேதானுமோ
தக்கபுகழுடைய தருமராஜதம்பியர்கள்
பதினெட்டுக்கோள்பாரதம் படையெடுத்துவந்தாக்கால்
நாலாலக்கம்திரளார் நூற்றுவர்கள்பூமுடியும்
வீமர்கைதெண்டாலும் விசையர்கையம்பாலும்
நாமக்குலவிளக்கு நகுலர்கைபாங்கினாலும்
சகாதேவர்கையிருக்கும் சக்கரத்துவாளினாலும்
துண்டுதுண்டாகவே துணிக்கின்றபோதையிலே
கூறுகூறாகவே குவிக்கின்றபோதையிலே
பிணத்தின்மேல்தானடந்து பெண்கள்மாரெல்லோரும்
காலை-தலைப்பலகைகளைவைத்து தானழுதுமாதர்களை
தம்பிமார்பெண்களை தள்ளாமற்சொல்லுமென்றாள்

கர்ணர் புத்திரன் சொல்லுவது.

அவ்வார்த்தைகேட்டு அங்காரயன்புத்திரனும்
காலை-துண்டுதுண்டாக துணிக்கின்றபோதினும்
அரவக்கொடிவேந்தன் அஞ்சானொருநாளும்
மாலைக்குழலியரே மதனியரேகேளீர்
எங்களையுமல்லாமல் எழில்நாகங்கொண்டோனும்
உம்மை-தன்றுணைக்குவந்தாலே தருமமுடியோனும்
என்னசொல்வீர்மதனி என்றுரே மன்னவரும்
கான்-சொல்லவரியேனே சுந்தரப்பூமுடியை
எதிரேயுத்தாஞ்சொல்லி எடுத்துரைக்கமாட்டேனே
அஞ்சுவேனென்றுசொல்லுதற்கு ஆனந்தவாழ்மார்பா
ஆர்காணும்பெண்ணே அக்கினியிற்றள்ளுதற்கு
தம்பிமார்பெண்களை தள்ளுமென்றசொல்லுதற்கு
அதற்குகாவஞ்சுவேனே ஆலமுகாவீரியனே
அவ்வார்த்தைகேட்டு அங்காரய புத்திரனும்
மாலைக்குழலியின் மனதைதானேசோதித்தேன்
வாலுக்குமஞ்சாதே இருமென்றுதானுரைத்தார்
அஞ்சுகைவேல்காலும ஆனந்தவாழ்மார்பா
ஒன்றுமாண்டல்லவோ உத்தமர்கள்வீரியரே
ஐந்து அடையாளம் ஆனைமுகர்தான்கொடுத்து
வாசலுக்குக்காவலாய் மைத்துனரேநீரிருக்க
அஞ்சேனொருநாளும் ஆணைக்குவென்றுரைத்தாள்

கர்ணர்புத்திரன் தூதனுக்குச்சொல்வது

ஏலக்குழலியரே இருமென்றுதானுரைத்து
அப்போதுதூதவனும் அவ்விடத்தில்நின்றிருந்தான்
வந்தவொருதூதவனை மன்னவனுந்தானழைத்து
அஞ்சிக்கையாகயிங்கே-அல்லோருநாமிருக்க

அவளஞ்சவில்லைகாணும் அதிசயப்பேசுகிறாள்
அவ்வார்த்தைசொல்லி அறிக்கையிடவந்தேனென்றார்
அவ்வார்த்தைசொல்லென்று அனுப்பிவிட்டுதூதுவனை
காவலிலேதானிருந்தான் கட்டமுகனப்போது
அப்போதுதூதுவனும் அட்சணமேவந்துவிட்டான்

துரியோதனன் வேதியரையழையுமென்றது.

தேசத்தழகுமன்னன் துரியோதிரன்கேட்டு
கண்கள்சிவந்து கடுங்கோபந்தானாகி
காசிவிவர்ணர் கர்ணரைத்தானழைத்து
வேதியர்கள்பெரியோரை வேகத்திலையழையுமென்றார்
சாஸ்திரவாதிகளைச் சகலரையழையுமென்றான்
வேதந்தெரிந்தவரை வேதியரையழையுமென்றான்
அவ்வசனங்கேட்டு அதிகர்ணர்தானெழுந்து
அரசன்சொல்கடவாமல் அந்தணரைத்தேடுகிறார்

பெருமாள் வருகிறது.

அந்தவொருவேளையிலே ஆயரவாநிந்தார்
அண்டமளந்ததொரு ஆதிநாராயணரும்
இதுதான்சமயமென்று எம்பெருமானேதுசெய்தார்
நல்லசகுணமென்று நாராயணரெழுந்து
சாஸ்திரந்தானறிந்த சதுர்மறையோர்போலாக
அறுபத்துநான்குகலை யாவுமுணர்ந்தவர்போல்
வேதங்களைகண்ட வேதியர்போல்வடிவெடுத்து
மெத்தப்பெரியவராய் மேல்நாட்டுவேதியராய்
விருத்தக்கிழவராய் வெகுநாளாய்வாழ்பவராய்
நேரப்படித்தவராய்த் தெளிவறிந்தவேதியர்போல்
முற்றுமேகற்றவராய் முழுதுமறிந்தவராய்
தெண்டுபவுத்திரமும் திருமார்பில்பூநூலும்
தன்னாதவேதியர்போல் தடியூன்றிவாறாராம்
வாரவொருவேதியரை மன்னவனுந்தான்பார்த்தான்
எதிர்கொண்டுதெண்டனிட்டார் பியலான அதிகருணர்
தெண்டனிட்டகர்ணரை சீர்பெறவேதான்வாழ்த்தி
வாழ்த்திவிடைகொடுத்து மறையவனேதுரைப்பார்
அஞ்சாதேகர்ணரே ஆதிமூலமாயவனார்
இவ்வேஷங்கொண்டு இவ்விடத்தில்வந்தேன்காண்
கலக்கமனமுடைய கபடன்துரியனுக்கு
ஆருடஞ்சொல்லவந்தேன் அறிவழிந்தமன்னனுக்கு
ஆனதினால்நீர் அஞ்சவேண்டாம்ராசமன்னா
மதுரைதுரைச்சியவள் வனகாயபுத்திரனும்
தன்தேவிபண்டைவந்து தாமருவியவன்போனான்
அடையாளமுந்தந்து ஆனைமுகாதான்போனான்
உன்மீதுசிந்தனைகள் உண்மைசொல்லும்மன்னனுக்கு

சிந்தைகலங்கவே தெரிசிப்பேன்கடனுக்கு
அந்தசாகேதவாருமென்று அந்தணர்சொல்லுகையில்
காவலனுங்கேட்டு மன்னன்மகிழ்ந்து
ஆனந்தங்கொண்டு அரசனும் தெண்டனிட்டு
கைலாசநாதன்கொடுத்துக் கைமையர்கூட்டிவந்தார்

துரியோதிரன் வேதியனைக்கொண்டுமரியாதைசெய்தது.

மாறுகைக்கொண்ட மன்னன்கொலுமுகத்தில்
அந்தணர்வருகையிலே அரவக்கொடிவேந்தன்
தெண்டனிட்டுவேதியர்க்குச் சிங்காதனங்கொடுத்தான்
குந்தினார்வேதியருங் கொலுமண்டபத்தில்
மற்றுமொருமன்னவர்கள் மகுடமுடிராசாக்கள்
ஏகமாய்நிறைந்தார்கள் எங்குமிடமில்லாமல்
அப்போதுவேதியரும் அரசன்முகம்பார்த்து
எம்மையழைத்தது ஏதுவகைசொல்லுமென்றார்
உம்மையழைத்தவகை ஒன்றூர்குறைவுமில்லை
அம்பிமருமானை அக்கினியிற்றள்ளுதற்கு
காலுமதுநல்லதாய் நாயகரேசொல்லுமென்றான்

வேதியர் ஆருடஞ்சொல்வது.

கண்டாரேவேதியரும் கட்டனதுதன்னினைவை
கூறுவார்வேதியரும் கொடிநாகமன்னனுக்கு
அரசற்குத்தக்கபடி ஆயாருளனுற்றார்
அஸ்தநட்சத்திரம் ஆகாதநாளாச்சே
கேட்டையுமூலம் கெடுதிநாள்வந்ததுவே
ஐந்தாறுநாளைக்கு ஆகாதநாளாச்சே
இன்றெட்டாநாளையிலே ஏந்திழையைத்தள்ளிடலாம்
யாருக்குமொன்றுமில்லை உமக்குங்குறைவில்லை
அக்கினியிற்றள்ளவென்றால் அதுக்குஇடமுமில்லை
ஆற்றங்கரையோரம் அக்கினியைத்தானவளர்த்தி
எட்டுநாளொருவாசம் எறிநெருப்பு ஆறுமல்
ஆகாசமட்டும் அடர்ந்துஎரியவிட்டு
பகலினதுவெய்யிலே படரவெறியவிட்டு
தணியாமலக்கினியைத் தார்வேந்தர்காத்திருந்து
அன்றுடம்பிராமணர்க்கு அளவிறந்ததனங்கொடுத்து
கோதானம்பூதானம் கொடுத்துவாவேதியற்கு
வானகுதிரைபசு அபாரியாய்த்தான்கொடுத்து
எட்டுநாள்சென்றபின்பு ஏந்திழையைத்தள்ளிவிடும்
அதனுடனேதோஷம் அபகரித்துபோய்விடும்
எட்டாதுளுமிங்கோம் இவ்விடத்தில்யான்வருவேன்
கூடிருந்துதள்ளிடுவோம் கொற்றவனேயென்றாராம்

அவ்வார்த்தைதான்கேட்டு அலைக்கொடிவேந்தன்
பூரித்திருந்தோனும் பொன்னங்கிதான்கழலச்
சந்தோஷங்கொண்டு சரீரமும்பூரித்தான்
வேதியனைப்பார்த்து மெச்சியெடுத்துரைப்பான்
இன்றெட்டாநாளையிலே இங்குவாரும்வேதியரே
என்றுமிவனுரைக்க ஏதுசொல்வார்மாயவனார்
அப்படியேயாகுமென்று ஆயவர்தானடந்தார்

பெருமான் அல்லியிடம்வருகிறது.

காடுசெடிகடந்து கரியமலைதான்கடந்து
ஆறுகளைதாண்டி அதிசயங்கடாண்டி
வெக்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கொக்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
சந்திரசூரியர் காணுவனங்கடந்தார்
வாருமதுரையது வடமதுரைதாண்டிவந்தார்
தேனுமதுரையது தென்மதுரைதாண்டிவந்தார்
அல்லியரசாணியது அரண்மனையில்வந்துவிட்டார்
பிரவாமுடசரிந்த பெண்பெருமாள்காவலியும்
கண்டாளோவேதியரைக் கன்னியிளமயிலாள்
வேதியரைக்கண்டவுடன் மெல்லிபருந்தெண்டனிட
தெண்டனிட்டுமெல்லி செப்புவாளொருவார்த்தை
ஐயாபெரியவரே அறிவுள்ளவேதியரே
திரிப்படித்தவரே தெளிவறிந்தவேதியரே
எந்தவூர்தேசம் எங்கிருந்திங்குவந்தீர்
சொல்லுமையாவேதியரே என்றுமேதோகையரும்
தூரம்வடக்கேயம்மா துவாரகாபுரிதேசம்
அத்திபுரத்திற்கு ஆனக்கேயானிப்போது
வழிகள்தெரியவில்லை மாதாவேபெண்தனுக்கு
வில்லாளர் துரோணர் விதுரனஸ்வத்தாமன்
[illegible] ஐவர்களையும் கனத்ததொருமெல்லியனும்
[illegible] துருபதராசரவர் [illegible] மன்னன்
தம்பிமார்தொண்ணூற்று ஒன்பதுபேர்ராசாவாம்
அவர்களேகாந்தமாய்க்கூட இராசமன்னரெல்லோரும்
பாரோவோர்கன்னியாம் அவன்பேர்கலந்தாரி
சொன்மொழியாள்வயிற்றில் திருட்டுபிள்ளையுண்டாச்சு
அதையால்கன்னியவை அக்கினியில்தள்ளுதற்கு
கோதானம்பூதானம் கொடுக்கிறார்வேதியற்கு
வழிகள்தெரியவில்லை மாதாவேநான்போக
உங்களைக்கேட்டுபோக வந்தேன் [illegible] தமியே
என்றுமிவனுரைக்க எந்திழையும் [illegible] வந்து
சிறிதெதிர்பார்த்து செங்கையார் [illegible]
நாடாகாவலரே அசங்காரமல்லர்களே

அந்தணர்பிராமணரை அறையிலடையுமென்றான்
கேட்டார்பெருமாளும் இனிமொழிவார்த்தைதனை
அகங்காரநீலியென்று ஆயர்மனமகிழ்ந்து
எடுத்தார்சுரூபம் எம்பெருமானாண்டவரும்
கண்டவர்களைதாணுடுங்க கரியமாலுருபமானார்
பார்த்தாளேயல்லியம்மாள் பாராளந்தார்வடிவமதை
மெத்தநடுநடுங்கி மேனியெல்லாம்வேர்வையிட
வந்துபணிந்தாளாம் மாயவனார்தன்பாதம்
பணிந்தெழுந்திருந்து பாவையருமேதுசொல்வாள்
என்சாமியென்குருவே என்னுடையகர்த்தாவே
ஆண்டவரேநீருக்க அடியாட்குளென்னகுறை
ஆறுதப்புநூறுபிழை அடியாட்குயான்செய்ததெல்லாம்
அத்தனையுநீர்பொறுப்பீர் ஆயர்பெருமானே

பெருமாள் சொல்வது.

அப்போபெருமாளும் அருளாளரேதுசொல்வார்
மலரிற்பிறந்தவித்தாரு வாழ்வரசியல்லியரே
போரஞ்சாவீரன் புலந்திரனார்தேவியரை
காரிழையாள்மாது கலந்தாரிநாயகியை
தீயிலேதள்ளுதற்கு துரியோதனன்நினைத்தான்
வேதியனையழையுமென்றான் வேந்தன்கபடனவன்
அப்போதுவேதியர்போல் அவ்விடம்யான்போனேன்
கலக்கமனமுடைய கபடன்துரியனுக்கு
ஆருடமொன்றுசொன்னேன் அறிவழிந்தமன்னனுக்கு
அஸ்தநட்சத்திரம் ஆகாதநாளென்றுசொன்னே
கேட்டையுமூலமும் கெடுதிநாளென்றுசொன்னேன்
இன்றெட்டாநாளையி லிசைந்த நாளென்றுசொன்னேன்
திங்கட்கிழமையது தசமிபுனர்பூசம்
அன்றையதினத்திலே அக்கினியைமூட்டுமென்றேன்
அப்படியேசெய்வதற்கு அரசனிருக்கிறானே
நீஎன்னசொல்லுமென்றார் நிகரில்லாவெம்பெருமான்
என்றாலேஎன்னவாகும் எம்பெருமாள்நீரேசொல்லும்
ஆனாலொருவயணம் அல்லியரேசொல்லுகிறேன்
உன்னைப்போலபத்துபேரை உத்தமியைசோடித்து
நீபிடித்தசெங்கோலை நேரிழையாளைகொடுத்து
ஸ்ரீமந்தபழங்களை தேன்மொழியாள்நாயகியே
புளியாறுவரவிடுவாய் பொற்கொடியாள்நாயகியே
அதுசமையம்நான்பார்த்து ஆகாயமார்க்கத்திலே
வசிபோல்மின்னல்மின்னி ஒருகோடியிறமழைசொரிவேன்
குழுரிவேபெய்யவைப்பேன் கொடிதாகஅக்கினிமுன்
அமமையாறுநீர்பெருகி அணைத்துவிடுமக்கினியை
அரசனதுசேனையெல்லாம் ஆற்றில்மிதப்பார்கள்

அதுசமயம்நேர்பார்த்து அனுப்பிவிடுதாதிகளை
ஆயுதங்களைக்கொடுத்து அனுப்பிவிடுதாதிகளை
சேனைகளையெல்லாஞ் சிறையப்படுத்திவிடு
என்றுசொல்லிமாயவனு மெழுந்திருந்தாரப்பொழுது
அப்படியேநல்லதென்று அல்லிபோருக்காயிருந்தாள்

வேதியர் அத்திபுரம் வந்துசேர்ந்தது.

அடியளந்தயெம்பெருமான் ஆதிமூலமாயவரும்
மதுராபுரிகடந்து வையைவளநாடுவிட்டு
காடுசெடிகடந்து காறுமாறுதாண்டிவந்து
பொல்லாவனங்கடந்து போய்சேர்ந்தாரத்திபுரம்
தேசத்தழருமன்னன் துரியோதனனிடத்தில்
வந்துவிட்டார்வேதியரும் சபாவியம்பலத்தில்

துரியோதிரன் சொல்வது.

கண்டானேவேதியனை கபடன்துரியோதனன்
ஐயாபெரியவரே அன்பானவேதியரே
முப்பத்திரண்டறமுஞ் செய்தேன்காண்வேதியரே
யானைகுதிரை அபாரியாய்நான்கொடுத்தேன்
கோதானம்பூதானம் கொடுத்தேன்காண்வேதியரே
ஆற்றங்கரையோமது அக்கினியைவளர்த்திவிட்டேன்
எட்டுகோணாகவே எரிகிறதே அக்கினிதான்
இன்னும்மேட்டுகெடுவாச்சு எழிலானவேதியரே
ஆச்சுதுகாணென்றான் அரவக்கொடிவேந்தன்
அட்சணமாயவனும் அவன்சேதிதான்கேட்டு
சரிபாச்சுமன்னவனே தனஞ்சயனோராசேந்திரா
உன்-மனதுபடிசெய்ய மறையவனுரைக்கையிலே

துரியோதிரன் கர்ணனையழைத்துச்சொல்வது.

தேசத்தழருமன்னன் துரியோதிரப்பெருமான்
ஆரடாதூதுவரே அழையடாகர்ணனைத்தான்
அவ்வசனங்கேட்டு அந்தூதரோடிவந்து
காசினியர்னர் கர்ணனைத்தானழைக்க
அம்பலக்கச்சேரி அதிகர்ணர்வந்தனர்
கர்ணனைத்தான்பார்த்து கபடனவனேதுசொல்வான்
கேளுங்காண்கர்ணரே கெடுவுஞ்சரியாச்சு
தார்குழலாளை தனஞ்சயனுக்கென்றான்
தடுகேவரவழையும் கந்தாரிநாயகத்தை
என்றவனுரைக்க ஏங்கிமனந்தளர்ந்தான்
வேதியனைக்கண்டார் வேந்தனிருவர்
கண்சைகைகாட்டினர் ஆதிமாலெம்பெருமான்

கர்ணக்கலந்தாலோசிக்கிறது.

ஆர்க்கொருவன்விட்டை அதிகர்ணர்தான்பார்த்து

கடுகியெழுந்தார் கன்னியின்றன்கோட்டைக்கு
மாதாதுகோட்டைக்கு மன்னவனும்வந்துவிட்டான்
கலந்தாகியாவைமனைக்கு கட்டழகருட்புகுந்தான்
தாதிமார்கண்டு தையல்களோடிவந்து
காலுக்குநீர்வார்த்தார் கன்னியரங்கிருந்தோர்
பாதத்தில்தான்பணிந்தார் பாவையழகியர்க்கு
தன்னைப்பணிந்த தாதிமுகம்நோக்கி
மாதுகருங்குழலே வரவழையுமென்றாராம்
கலந்தாரிநாயகத்தை கடுகவழையுமென்றார்
ஓடிவந்தாருட்புகுந்தா ளேகதாசிகதவ்தனைவிட்டு
ஆச்சியரேயுன்னை யருமையாய்நான்வளர்த்த
ஊட்டிவளர்த்தெடுத்த வுன்னம்மானவந்தார்காண்
அழைத்துவரச்சொன்னார் அம்மானதிருவுளமாம்
அவ்வசனங்கேட்டு அரிவையெழுந்திருந்தாள்
பூஞ்சிலம்புதண்டை பொன்னாபரணமியன
காரிழையாள்மாது கலந்தாரிநாயகமும்
மாயனார்சீபாதம் வணங்கிநமஸ்கரித்தாள்
வாழ்வீரவளருவீர் மண்ணாளுகிகாலமட்டும்
கற்பதித்ததூணதுபோல் கலங்காதாசாளவீர்
எழுந்திருமென்று இன்பமுடன்தான்வாழ்த்த
ஆகவேவந்தீராங்கேவந்தீ ரென்னைவளர்க்குமாமாவே
வந்தவிபரமதை மாமாவேசொல்லுமென்றாள்

கர்ணர்சொல்வது.

தேசத்தழகுமன்னன் துரியோதனப்பெருமான்
அக்கினிவளர்த்தி அனல்பாயவுங்கனம்பரன்
வரவழைத்தாரும்மை மாதுகருங்குழலே
வெகுகோடிமன்னன் வேந்தர்படைநெருங்கி
சகலோருங்காண சந்தடிநெருங்குது
வேதப்பிராமணரும் விளங்குகிறாய்விடத்தில்
சீக்கிரமாய்வாருமென்று சீரானவுடைவாளம்
கொடுத்தாரேகர்ணர் கோதையாள்கைதனிலே
வாங்கினளுடைவாளம் மலர்காத்தைதானீட்டி
அரண்மனைதாதியர்கள் அனைவோருமதனைப்பார்த்து
ஏங்கியழுதார்கள் எல்லோருங்கூட்டமிட்டு
ஆச்சியரேயுமக்கு அமர்ந்ததுவோகயவபார்
தீக்கோநீதான்பிறந்தாய் தேனாள்கருங்குழலே
அக்கினிக்கோநீபிறந்தாய் ஆரமுலைமாதே
கொழுந்துவிட்டெரியும் கொம்பனையதுபெருகதணலும்
செந்தணலுக்கென்று செழித்துநீதான்வளர்ந்தீர்

இதுதானேகண்டபலன் என்றழுதார்தாதியர்கள்
காரிகையாள்மாது அலங்காரிமேபதுசொல்வாள்
அழுதகொருபெண்பிகளே ஆரணங்குகையமர்த்தி
கேளுங்கள்தாதிகளே கிளிமொழியாள்சொல்வசனம்
கணவன்றனைச்சேர்ந்து கன்னியருசெய்யாறல்
சோரத்தனமில்லாமல் சுந்தரமேவிஜமாறல்
தீக்குழிக்குத்தப்புவேன் திசையெட்டுந்தானறிய
அக்கினிக்குத்தப்புவேன் அஷ்டதிசைதானறிய
அதுதானேஎன்னுடைய இந்தபத்தினிலணையங்கள்
எல்லோருமறியுமட்டும் ஏந்திழையாள்செய்தநூற்றம்
ஆற்றினன்தாதியரும் அல்லிமருமகளும்
ஸ்நானங்கள்செய்து செபதபங்கள்தான்முடித்து
சொக்கரைதானினைந்து திருநீறுதானணிந்து
மஞ்சள்துயிலுடுத்தி மடியிலவைத்த அடையாளம்
கோடாலிமுடிச்சியிட்டு குடமலர்தானணிந்து
சீரானநெற்றியிலே திலதங்கள்தானுமிட்டு
பட்டுடுத்திபணிபூண்டு பதுமைபோலலங்கரித்து
தோழிமார்கூட்டஞ் சுற்றிலும்நெருங்கிவர
மன்னன்திருக்கருணை மன்னவபடைநெருங்க
காவலர்படைகளது கன்னியரைநெருங்கிவர
படைகளிருபுறமும் கொம்பனையைநெருங்கிவர
புலவர்படைபெண்கள் பைங்கிளியைநெருங்கிவர

தீக்குழிக்குவருகிறது

கோட்டையைவிடுத்து கொம்பனையாள்வெளியானாள்
சந்திரனைக்காணாத தையல்வெளிப்பட்டாளாம்
சூரியனைக்காணாத தோகைவெளிப்பட்டாளாம்,
கால்பீலிகலகலென்ன கைவளையல்பளபளென்ன
நெற்றிசுற்றினின்றிலங்க நீலவிழிமைதுலங்க
கோட்டைகடந்து கொத்தளமுந்தான்தாண்டி
அம்மைக்கரையோரம் ஆரணங்குவருகையிலே
ஏறிட்டுப்பார்த்தார்கள் எங்குமகாசெனங்கள்
கங்கைகரைகொள்ளாத கனமானசேனைதிரள்
சங்கெங்குந்நிறைந்திருப்பார் என்றுசிமயிடமுமில்லை
அக்கினிபெருந்தணலும் ஆவிகள்பொருக்கிலேயே
மெத்தப்பயந்தான் மேனிகருக்கிவிட
புகைபோலகப்புகுது பூமிகள்தெரியவில்லை
அக்கினிசுடாரலே ஆறமுடிகூடவில்லை
தவித்துமிகப்போகுது தணலென்றபெருஞ்சுடரால்
அக்கினிச்சுடராலே அநுதாககாரணித்து

நாவுலரண்டது நடுநாவுலீருற்றி
ஆனைவந்துநின்றான் ஆற்றுநீர்தான்குடிக்க
அந்தவேதாருவேளையிலே ஆயனுந்தான்பார்த்து
மாங்காயென்றுசெய்தார் மாயப்பெருமாளும்
ஊசிபோல்மின்னி வுரிபோலேகாவிரங்கி
இருண்டுதேமேகம் எங்குங்கருகருத்து
ஆனைதும்பிபோலே அமர்ந்துவருஞ்சலம்போலே
சோனைமழைமாரி சொரியுதுஅந்நேரம்
வாணமலர்மாரி வருஷிக்குமன்னேரம

அல்லி புளியாறு அனுப்புதல்.

ஆறுஜலமோட அணிமதுரைநாயகியாள்
எம்பெருமாள்சேதி இதுதான்தருணமென்று
மதுரைபெருமானும் வைகையிலேவந்துநின்று
துவைப்புளிகளைத்தையல்கைச்சிவிட்டான்
இச்சையாய்ப்புளிப்பு இனிபுளிப்புதோன்றயிலே
அள்ளிக்குளித்தாளாம் அங்கமதுதான்குளிர
திரேகம்குளிர்ந்தது தேன்மொழிக்கு அந்நேரம்
தெளிந்தமுகமானாள் திருவழகுபூமாது
கன்னர்திருமுகங்கள் களைபழுந்ததன்பூண்டார்
இந்தரகசியங்கள் யாவருக்குந்தெரியாது
அந்தச்சமையத்தில் அமர்ந்தமழைபொழியயிலே
தேசத்தழகவன் திரியோதிரனைபார்த்து
நடக்கைச்சொல்லுமென்றான் கலந்தாரிநாவகத்தை
அப்போ பிரைப்பிறையா னதுக்கொன்றுமஞ்சாமல்
அச்சுதனைத்தானினைந்து அரிவையவள்முகமலர்ந்து
ஆற்றுநீர்தான்பொசித்து அருந்தாகந்தானறிந்து
அக்கினிக்குழிவருகே அரிவையனைக்கொண்டுவந்தார்
தீக்குழியைத்தேடித் தேன்மொழியாள்வந்துநின்றாள்
கண்டார்களெல்லோரும் கன்னியவள்நிற்கையிலே
அந்தச்சமையத்தில் ஆயர்கிருபையினால்
பெரியாறுபெருகிற்று பெருவெள்ளமோடுகுது
அம்மைப்பெருகி அலைமோதும்வேளையிலே

அல்லிபெண்களையனுப்புதல்.

மதுரைவளநாடியவள் மயிலனையாளல்லியரும்
எம்பெருமாள்சொன்ன எண்ணத்தைதானினைந்து
இதுதான்சமயம் இப்போதேதள்ளிடுவார்
ஆடிதந்தையரே அதிகாரிசெங்கமலம்
இதுதான்சமயம் வந்திழையேவாடியென்றாள்
அவள்-பொல்லாதநீலி வல்லாண்மைக்காரியவள்

ஏனம்மாவென்றா ளேந்திழையாள்வல் லீன்றாள்
சிங்காரஞ்செய்தாள் செங்கலத்தாதியரை
மருடாடிசூட்டி மகாணிப்பதக்கமிட்டு
வச்சிரகாயமணிக்கா மாணிக்கமாலையிட்டு
கரவிசேலை ... கண்டாமணிதரித்து
ஆயிபுது ... அவள்கையில்தான்கொடுத்து
பாண்டியனைவாருதற் பரிசைகளுந்தான்கொடுத்து
... முதிசேலைடாலணிந்து
அவளையாபோலே அவளையலங்கரித்து
அருச்சனைசெப்பனாசே அல்லியருங்காவென்று
என்பெயரைத்தரித்து தட்சணமேபோயி
ஆடாவென்மருமகளை அக்கினியிற்றள்ளுபவன்
எவராடாமருமகளை இத்தீயிற்றள்ளுபவன்
கொடுக்கிறேன்பூசை குங்குமங்களையுருள
அதிகாரிகாணிருக்க ஆடாதள்ளுபவன்
இந்தப்படியாக எச்சரித்துமேபோயி
அந்தப்படியா அவன்பாடையில்போய்விழுந்தால்
அசட்டையாய்விறபாள் அல்லியவளென்று
அடையாளந்தான்கொடுத்து அல்லித்திருமகனுர்
சேர்ந்தாயிருந்ததுவுந் திருவாழிகொடுத்ததுவும்
வந்ததுவும்போனதுவும் வயணமாய்நீயுரைத்து
காரிழையாள்பாதங் கலந்தாரிகையிக்கு
கைதாக்கிமழைத்துப்போய கன்னியிடகோட்டையில்
ஆண்மகனைபிறவிகாண்டுபோய் ஆணைகுருபெண்மயிலை
மசக்கைகள்தீர்த்து மனதைமகிழவைத்து
இன்னம்பிலகாலந்திறமையெல்லாம் றப்பு
பாண்டியர்கள்வந்து பணியமர்ந்தபிற்பாடு
வெற்றிபதவாகை யமராது தண்டாலே
நாற்றுவர்பூமுடியை கொடியிற்றணிந்தபின்பு
அழைத்துக்கொண்டுபோமென்று பஞ்சாங்கனைறுசொல்லி
தேருதலைசொல்லி செங்கமலம்வாருமென்றாள

செங்கமலம்வருகிறது.

அப்படியேயாகல்லமென்று அரிவையிவள்சொல்லையிலே
பயணங்கொண்டான் பைங்கிளியாளசெங்கமலம்
கூட்டியிருப்பதுபோல கொம்பனைமார்சேர்ந்தார்கள்
ஆயுதவரிசையுடன் அமைம்பொர்துணையாளுர்
பாலகுருகளும் ... பரிசைகளுங்கதிகளும்
கட்டிகளும் அம்புகளும் எதிர்கதுருத்தருலங்களும்

வீணை தடியுஞ்சக்கரமும் மங்கையர்கை பிடித்து
இவ்வளவுபேரையுமே எத்திசைக்கு துணையாக்கி
மருமகட்குதானுகந்த வரிசைகளுந்தான்கொடுத்து
மேளமும்பரிசையும் விருதுகளுந்தான்கொடுத்து
ஆற்றிலேதெப்பங்கட்டி அதின்மேலிற்றானேற்றி
போய்வாருமென்று பொற்கொடியுமனுப்பிவைத்தார்
தெப்பமாதனின்மேல் தேனமொழிமார்தானேறி
சகலருமுடனே தையலர்கள்யாவர்கள்
கரைபுரண்டவெள்ளம் கனத்தாறுமுன்னோட
அந்தச்சமயத்தில் அர்ச்சுனரும்பார்த்திருந்தார்

கலந்தாரி தீயைச்சுற்றிவருவது.

அக்கினிவில்வைத்தவன்தான் அரிவைகலந்தாரி
சுற்றிவரச்சொன்னார்கள் தோகையிளமயிலே
தலைமேற்கரங்குவித்து தையலருஞ்சுற்றிவந்தாள்
தன்னுடைமன்னன் தீயில் சற்பக்கொடிவேந்தன்
விழப்போகுஞ்சமயத்தில் வெள்ளப்புரண்டாறுமே

ஆறுபெருகி அக்கினியைத்தணித்தது.

ஆயர்கிருஷ்ணயினால் ஆறுபுரண்டதுவே
ஆகாயமெல்லை அலைமோதிவந்ததுவே
புரண்டோடிவெள்ளம் பெருந்தணலில்விழுந்ததுவே
கட்டையுந்தீயும் கரைக்கயிதைத்ததுதான்
அக்கினித்தணிந்தது ஆறுவெள்ளமோடுதான்
படர்ந்ததேவெள்ளம் பாரமன்னர்மீதிலேதான்
சிலபேர்மிதந்தார்கள் சிலபேர்முழுகினார்கள்
வேடிக்கைபார்த்தவர் மிதக்கிறாரம்பையிலே
உயிரிழந்துபோனவரும் ஓடியேபோனவரும்
கரையேறிப்போனவரும் காலோட்டம்பிடித்தவரும்
சிதறிவிழுவாரும் சிவனுயிர்போனவரும்
அலறிவிழுந்தவரும் அக்கரையேபோனவரும்
திக்குத்தெரியாமல் திசைகெட்டுப்போனவரும்
அறியாமல்வந்தோம் ஆற்றங்கரையாக
தெரியாமல்வந்தோம் சிவனைப்பரிகொடுக்க
ஒருவர்கள்போனவழி ஒருவருக்குத்தெரியாமல்
மூலைக்குமூலை முழுகிக்கெட்டுதென்றார்
அரிவைகலந்தாரி அசையாப்பதுமையைப்போல்
ஆயன்கிருஷ்ணயினால் அவ்விடத்தில்தானிருந்தாள்
வைகுந்தபடியாக கன்னியருந்தானிருந்தாள்
ஆறுபெருகியதால் அக்கரைச்சேர்ந்திருந்தாள்
காணுமட்டுமிருந்தார் கனத்தபெருவாற்றில்

மற்றவர்களெல்லாம் மாண்டுபிழைத்தவரும்
மூர்ச்சைகளானவரும் மெய்மறந்துபோனவரும்
வாந்திபெருந்தவரும் மண்மேலேவிழுந்தவரும்
கலைபட்டுப்போனவரும் கண்பிதுங்கிப்போனவரும்
திகிலடைந்துப்போனவர்கள் திசைமாறிப்போகின்றார்

## மதுரைப்பெண்கள்வந்துநெருக்கினது.

அந்தச்சமயத்தில் ஆற்றங்கரையோரம்
பெண்டுகள்படைநெருங்க பேரிகைவாத்தியங்கள்
முரசுகளடிபடவே முறையாயிட்டபேரிகைகள்
டங்காரமுழக்கவுந் தவண்டைகொக்கரிகொட்ட
சந்திரகைவிசிகளுந் தாக்கிமுறுந்தாரை
அடிபடுதாரைபேரி அதுவானந்திடிபோல
கோடைகாலத்திடிபோலே குமுகுமென்றபேரிகைகள்
சமுத்திரகோஷம்போல் தனிமதுரைப்பெண்களெல்லாம்
ஆடாபெண்ணுடைய அருமைமருமகளே
இந்திரனார்தேவியரை என்னுடையதங்கமணியை
தன்னுடைகருங்குழலி தோகைமயிலை
என்றுருபிருபிருக்க என்னுடையதங்கமணியை
ஆசைமருமகளை அக்கினியிற்றள்ளுபவன்
அவன்-ஆண்மையும்வீரமும் அத்தனையும்பாரென்று
தெப்பமாத்தைவிட்டு தேவமொழிமார்தானிறக்கி
படைகளுடனேபெண்கள் பதறிவிழுந்தார்கள்
ஓடுகிறசெனங்களை ஒருமிக்கத்தாக்குகின்றார்
கொக்குத்திரளிலே இராசாளிபுகுந்ததுபோல்
புலியினதைக்கண்டதுபோல் போய்விழுந்தசிங்கம்போல்
வந்துவிழுந்து மாட்டுகிறார்பெண்களெல்லாம்
யானைபடைக்கஞ்சாதே அல்லியின்றன்மாதர்கள்
பாலாவும்பரிசைகளும் பாங்குபடியம்புகளும்
கட்டிகமுட்டுவதும் எதிர்த்துநிற்பதுவும்
பாலாந்திருப்புவதும் படையிலேமோதுவதும்
பாங்குசமுட்டுவதும் பக்கத்திலிருத்துவதும்
கதிசமுட்டுவதும் கல்லின்மழையதுவும்
சிறகைப்போலோட்டுவதும் சேரக்குறுத்துவதும்
எதிர்த்துநின்று [illegible] கொண்டுவதும்
இப்படியாக [illegible] யெல்லாம்
மூக்கறுந்து [illegible] யெல்லாம்
[illegible] பெண்படைகள்
இளப்பமுக்கப்போகிறவர் [illegible]
மட்டடங்காபெண்ணரசு மதிப்பானொருவனாக

இன்றைக்கிருக்கிறோமோ இவன்கையில்மாண்டிடுவோம்
புலேந்திரன் பயமென்றோ நயவுடன்பாராமோ
அப்படியென் றுவிசாரித்தி இடி விழுவாரும்
ஆயுதந்தான் கைப்பட்டும் அலைந்துவிழுவாராம்
ஆற்றுக்குத் தப்பியே அருயிர்ப்பிழைக்கவந்தோம்
கூற்றுவன் போலே கொல்லவந்தார் பெண்களென்று
பல்லைத்திறப்பார்கள் படுக்கைபாய்விழுவார்கள்
முன்னேநீகிறவர் பின்னே முட்டிவாரிவன் றல்லோ
ஓடிநின்றுபார்ப்பார்கள் ஒருவர்பின்னே நுழைவார்கள்
கால்மாறித் தடுமாறாய் கதறிவிழுவார்கள்
இந்தப்படியாக இறைந்தசேனையெல்லாம்
அக்கினியைப்போலேவந்து அதிகாரிசெங்கமலம்
மன்னரையும்பார்த்து மாட்டுகின்றாள் கல்லதெப்பை
சின்னக்களானார் துரியோதனன் படைகள்
அப்போதுமாயவனார் அந்தணர்கோபாலர்
அற்புதமேபோலே அநேகமாயுயர்
குஞ்சரிபுக்கொண்டு கோபாலர்பார்த்திருந்து
அங்கதேசாதிபதி அதிவீரன்கர்ணனும்
ஆறுபெருமினலும் அலைப்பெண்கள் கொல்லுகிறதும்
அதிசயம்போலே அதிவீரன்கர்ணனும்
கட்டாரருங்குழலாள் காந்தாரிநாயகமும்
சிரித்தமுகத்துடனே தேன்மொழியும்பார்த்திருந்தாள்
பொன்னகைத்திறமையைப் புரிப்பாய்நகைத்திருந்தாள்
என்னே பசாசும்பேய்போர் ஆதரிக்கவந்தாரோ
என்றுமனைப்பூரித்து எதிரிழையும்பார்த்திருந்தாள்

## துரியோதிரன் எண்ணமிட்டது.

தேசத்தமுருமன்னன் துரியோதிரப்பெருமாள்
கண்டுவானக்கொடிசிந்தை இராசன்கபடனவன்
அக்கினிவளர்த்து அவலமாய்ப்போனதுவும்
வெள்ளைபுரவி வெகுபேர்மிதந்ததுவும்
சிக்கறுடிகொள்ளைமல் நாமேறிவந்ததுவும்
பதுமைப்படைப்பெண்கள் வந்துமிகச்சாடுவதும்
வெட்டவெட்டிக்கிடப்பதுவும் வேந்தர்களோடினதும்
சின்னங்கள்பட்டதுவும் சேனைகளோடினதும்
விருதாவரத்திரவியங்கள் வீண்செலவானதுவும்
மங்கைகாந்தாரி மனமகிழ்ந்துநிற்பதுவும்
திரவியம்போனதல்லால் சின்னங்கள்பட்டதுவும்
சிழுப்பசப்பாகச்சொன்ன கெடுதிலவார்த்தைகளும்
அடைவாளக்கண்டிருந்தும் அக்கினிவளர்த்ததும்

நீதமிலாக்கள்வர்பார்த்து எல்லியெனக்குன்றீ
பொறுத்தைகவிட்டான் போனதரியானவன்
குன்றினான் தரிசனவன் குருடனாதிருமகனோர்
அரியாமழைசெய்தேசம் அசலிராஜமகளை
நிகேக்கண்கள்வைத்தருமே இந்திரனமேதனிலியனும்
கிதமிகுஞ்சிப்போற்றிடுமென்லீனருமா ன
பராமந்போயினேமே பருசன்குறிக்குமே
கண்டோர்களைக்காக் கனைதகலடமெனித்தேதன்
காத்தோர்களைக்க பரிகரபாக்கியங்கள்
குறிப்பாகப்பார்த்தான் சேனதுயர் திருமுனை
அல்லியவளாலே அதிகாரம்பெற்றவன்தான்
அல்லியரசியாக அடைபகைபெற்றவன்தான்
முதிரையுஞ்செங்கோலும் முடியும்தரித்தவன்தான்
இவன்காவிலமன்னர்கள் எவரைதனக்கு
அவன்வந்தானமாகவே ஆர்தப்பப்போறார்
வெள்ளாட்டுகைதனிலே வெட்டுகன்னைகட்டேடாமே
தாதியவன்கையில் தலைவிரக்கமாயிருமே
தாரிவைத்தான்வணக்க தங்கிதிடயோயொக்கக்கு
மானைக்கொண்டேன்னிப்பம் அசந்தமாய்மாருதே

துரியோதனன் கர்னருக்குசொல்வது.

என்று துரியோதிரனும் இருதயந்தான்கலங்கி
மன்னர்கருணரை வரவொதனலழைத்தான்
கர்னர்பெருமாளும் கடுகெனவேவந்துவினாறார்
கர்னர்முகம்நோக்கி கபடனுமேதுசொல்லுவான்
நீசென்னதுபொய்யாச்சு சூதாய்முடித்தவன்
அடையாளக்குறிப்பைத்தான் ஆராய்ந்துபார்க்காமல்
வின்பதியும்மீதில் விருதாவைச்சமத்தியைத்தன்
இப்போ-அல்லிமுடிதரித்து அழிசெங்கோலைபிடித்து
அடையாளந்தன்னுடனே அதிகாரம்பெற்றவன்தான்
இப்போதெரிந்தது இந்திரனார்வந்தாரென்று
விருதாவைப்பெண்கள் விளம்பிச்சொல்லுகிறார்
வல்லகன்குருபதியவன் எக்கிழையார்தன்னுடனே
வந்தெதாருபெண்ணருக்கு வயணமாய்கூறுரைத்து
சமாதானஞ்செய்து சாந்தகுணமாகி
கோபத்தையடக்கி கொம்பனைமார்தன்னுடனே
அல்லியருகினில் அரிவையர்கள்தன்னுடனே
கூட்டியுறவாக்கி கோட்டைவிலேகொண்டுசென்று
செல்லமுடிசூடியே சிறப்புகளுண்டாக்கசெய்து
அவரக்கைபடிக்கி அலங்காரஞ்செய்து

திட்டப்படுத்தும் சீர்கர்ணர்மன்னரே
போமென்றுசொல்லி போர்வேந்தன்தானடந்தார்

### கர்ணர்பெண்டுகளைக்கண்டது.

அப்போதுகர்ணர் அதிகமனமகிழ்ந்து
அச்சுதரண்டையிலே அறிக்கையிட்டார்கர்ணரவர்
இருவருங்கூடி எதிர்த்துவந்தபெண்கள்முன்னே
வந்தெதிரேநின்றார்கள் மங்கையர்கள்முன்னாலே
எறிட்டுப்பார்த்தார்கள் ஏந்திழையாள்தாதியவள்
மறையவர்கர்ணருக்கு வணங்கியேதல்தொழுதாள்
பொருளும்பொருமசோபங்கள் பொற்கொடியேமாதரசே
பட்டாலேதெரியும் பாரகுணமில்லாதார்
கெட்டாத்தெரியும் கேடுகெட்டமன்னனுக்கு
அடையாளந்தெரியாமல் யாரோயெவரோவென்று
தெரியாமல்செய்தான் திரிபோதனப்பெருமான்
ஆழித்துயிலென்றோற்றும் றகாசப்பொருக்கருளும்
சொருபங்கள்தானிதென்று மன்னவர்கள்தானழைக்க
கோபந்தணிந்து சொப்பனையாள்செங்கமலம்
குளிர்ந்தமுகமாகிக் கொம்பனைமார்தானடந்தார்
கர்ணருமச்சுதருங் கட்டழகியரெல்லோரும்
புஞ்சிகம்புதன்னுடைய பொற்கொடியாளகலந்தாரி
அரண்மனையில்வந்தார்கள் அனைவருமப்போது
ஆயற்குங்கர்ணருக்கு மடிவணங்கிதான்தொழுதாள்
அடிவணங்குமங்கையரை ஆயனுந்தான்வாழ்த்தி
கற்புமிகுந்தவளே கன்னியரேநீர்வாழி
வாழ்த்திவிடைகொடுத்தார் மாயவனுஞ்செய்ப்பெருமாள்
வந்தொருதாதியுடன் மகுடமுடிதான்பார்த்து
அந்தமகுடமென்று அடிபணிந்துதெண்டனிட்டாள்
வந்தவொருபெண்களெல்லாம் மயிலனைக்குத்தெண்டனிட்டார்
அப்போதுசெங்கமலம் அல்லிமருமகளை
காட்டுதலேகன்னியவள் வயகியாளென்றுசொல்லி
கலந்தாரிநாயகிக்கு கட்டழகிதெண்டனிட்டாள்
செங்கமலத்தாதியனைச் சீர்பெறவேதான்வாழ்த்தி
ஆலிங்கனஞ்செய்து அல்லிமருமகளும்

### கலந்தாரியைக்கோட்டைக்கு அழைத்துவருகிறது.

எல்லோருமாய்க்கூடி இசைந்துநடந்தார்கள்
கன்னியருங்கோட்டைக்கு கடுக்கநடந்தார்கள்
காவலுக்குள்நுழைந்தார் கலந்தாரிகோட்டையிலே
கர்ணர்திருமகனும் கண்டுதொழுதானும்
எல்லோருங்கூடி ஏந்திழையாள்கோட்டையிலே

உள்ளே நுழைந்தார்கள் உட்கட்டணமனையில்
தாயாராக் குற்றமையார் தையலரும்வந்துவிட்டாள்
போல்மிகுந்த பெருந்திருவாசனாயகமும்
அனைவரும்வந்தார்கள் அந்தப்படியேவாழ்த்தி
ஆலத்திமெடுத்தார்கள் ஆக்குறுதாதியர்கள்
திருஷ்டிகழித்தார்கள் செவைதியான்மகைகைபற்று
அவரவர்களாசனத்தில் அமர்ந்தார்களெல்லாரும்
ஆயன்பெருமானும் அமர்ந்தான் சிங்காதனத்தில்

சீமந்தஞ்செய்தது.

மதுரையிலேதானிருந்து வந்தவந்தபெண்களெல்லாம்
சீமந்தஞ்செய்வதற்கு சிங்காதனத்திலேதானவளை
கட்டார்கருங்குழலாள் கன்னியையலங்கரித்து
பொன்சரிகைச்சேலையது பூவைக்கலங்கரித்து
ஆடையணிந்து ஆபரணமேற்சாத்தி
சாந்துசவ்வாதுகளை சரீரத்தில்தான்பூசி
கதம்பகஸ்தூரிகளை கலந்துமிகப்பூசி
மங்களகரமாக மயிலிணையையலங்கரித்து
பேடைமயிலினையாள் பெண்மயிலைத்தானழைத்து
மாமியார்வரிசையென்று மக்கைபண்டங்களெல்லாம்
வரிசையுடன்தான்கொடுத்து மயிலினைமார்க்கோரம்
அல்லித்திருமுடியும் அழுத்தியசெங்கோலும்
போர்பெற்றமுத்திரையும் [illegible] வைத்து
வைத்துபயமிழந்தார்கள் [illegible] பற்று
பேரிகைபறைநகாரா பெரியடங்காரம்முழங்க
மல்லரிதானமே மத்தளத்துதாரி
கோசரம்புள்ளாங்குழல் [illegible]
ஆலவட்டம் [illegible] மங்கைபற்று
[illegible]
கு[illegible] மயிற்கலையத்து
பட்டுத்திரை [illegible] தங்கமைத்து
[illegible]
சாந்துதிலர்தயிட்டுச் சந்தனம்மேற்பூசி
பண்பலரதின் [illegible]
கொத்தமல்லித்தேனும் [illegible]
[illegible]
[illegible] சர்க்கரையும்
மற்றும் [illegible] பலகாரங்களும்
[illegible]
[illegible] அதிரசகதம்பங்களுடன்
அப்பளப்பணியாரம் ஆயசம்செய்யுட்சேர

ஏற்றியிறங்கி இன்பமுடனுண்ணவைத்து
உண்டுபசியாறி உத்தமியாள்மங்கையரும்
கையலம்பிதானும் களிப்புடனேவாய்துடைத்து
கற்பூரத்தாம்பூலம் கனிவாய்க்குத்தான்கொடுத்து
சந்தனமும்புட்பமும் தையலர்க்குத்தான்கொடுத்தார்
மாயவனும்மன்னவனும் மைத்துனரும்பெண்களெல்லாம
எல்லோரும்பசியாறி இன்பமுடன்தான்போசித்து
கையலம்பியெல்லவரும் கருணையுடன்தானமர்ந்தார்
பூசிடுஞ்சந்தனமும் புனுகுசவ்வாதணிந்து
புட்பத்திரற்செண்டு போதாவேதான்முகந்து
சமுக்காளந்தனிலிருந்து தாம்பூலந்தான்தரித்து
சந்தோஷமாகி சகலருமந்நேரம்
சீமந்தமுடிந்தபின்பு சிலவுவிடைவாங்கி
அவரவர்மாளிகைக்கு அன்னேரம்போனார்கள்
காரிழையாள்மாது கலந்தாரிநாயகியும்
மாயனதுசீர்பாதம் வணங்கிநமஸ்கரித்து
வாழ்த்திவிடைகொடுத்து மங்கையிளமயிலை
புத்திரனைப்பெற்று புகழ்பெறவேவாழ்ந்திடு

பெருமாள் வந்துவிட்டது.

வாழ்விசையன்புத்திரற்கு மனையாளாய்வந்தவளாய்
போகவிடைதாருமென்றார் பெருமாள்நடந்துவிட்டார்
துவாரகாபுரிதேடி சுவாமியும்வந்துவிட்டார்
மதுராபுரிப்பெண்களும் மயிலனையமாதர்களும்
சிலதுநாளவ்விடத்தில் தேன்மொழிமாரெல்லவரும்
குளிகுளிக்குநாள்வரைக்கும் கோதையர்கள்தானிருந்தார்
பிள்ளைபெருமளவும் பெண்களெல்லாமங்கிருந்தார்

கலந்தாரி புத்திரனைப்பெற்றது.

காரிழையாள்மாது கலந்தாரிநாயகியும்
பத்துதிங்களானவுடன் பாலனைப்பெற்றெடுத்தாள்
பாலகன்தான்பெறவே பாண்டியர்கள்தன்மகட்கு
அறிக்கையிட்டார்தூதுவனால் அல்லிமலர்நாயகிக்கு
செல்வம்பிறந்ததென்று சீராட்டுந்தொட்டில்களும்
அன்னவூஞ்சல்தொட்டில்களும் அழகுடனேதானனுப்பி
பட்டணர்தன்பேரை பாலகற்குத்தானறிந்து

அனுப்பிவைத்தான் அல்லிமலர்குழலாள்
வந்தவொருதொட்டிலிலே பாலனைத்தான்வளர்த்தி
சித்திரவில்போனவன் சின்ன அருச்சுனனார்
என்றுதிருநாமம் இட்டாரேபாலனுக்கு
அழகுடனேதானிருந்தான் அல்லிமகனாரும்
மதுராபுரிபெண்கள் மயிலனைமார்பாவர்களும்
அம்மாநீஅஞ்சாதே அரசனும்பாண்டவர்கள்
காடுறைந்தபாண்டவர்கள் நாடாளவருவார்கள்
ஐவர்வந்தபின்பு அமருவாய்தென்மதுரை
போகவிடைதாருமென்றே போற்றியடிபணிய
அப்படியேசம்மதித்து அனுப்பிவிடைகொடுத்து
நடந்தார்கள்தென்மதுரை நாயகிமார்பெண்களங்கே
தேனுமதுரையது தென்மதுரைதேடிவந்தார்
அல்லிமலர்நாயகிக்கு அடிவணங்கிதெண்டனிட்டார்
எழுந்திருமென்று எந்திழையாள்தான்வாழ்த்த
போனதும்வந்ததும் புதுமையுஞ்சொன்னார்கள்
கேட்டுமனமகிழ்ந்தாள் கிளிமொழியாளல்லியம்மாள்
காரிழையாள்மாது கலந்தாரிநாயகியும்
புத்திரனைப்பெற்று புகழ்ச்சியாய்வாழ்ந்திருந்தான்
மாமனதிகர்ணர் வரப்போகத்தானிருந்தார்
விசாரணைசெய்து விசனங்களில்லாமல்
ஆதரித்துத்தானிருந்தார் அம்மானதிகருணர்
புலந்திரனார்கதையைப் பூதலத்திற்கேட்டவர்கள்
கேட்டவர்யாவர்களும் கீர்த்தியுடன்தான்வாழ்ந்து
வாழிவாழியென்று வுலகத்திலுள்ளவர்கள்
வாழிவாழியென்று வரமளித்தாரீஸ்வரனார்.

புலந்திரன் களவுமாலை.

முற்றிற்று.

[illegible]
[illegible]
[illegible]